Registered as a Newspaper

# தினச்செய்தி

வாரமலர்

Registered at the Department of Posts of Sri Lanka Under No QD/29/News/2016

அதிக பக்கங்களுடன் ...

- போருக்குப்பின் முல்லைத்தீவில் நடந்தது என்ன? - பக். 05
- ரெலோவுடன் ஈ.பீ.ஆர்.எல்.எப். உம் தடைசெய்யப்பட்டது ... - பக். 07
- கவிஞர் நா. முத்துக்குமார் - பக். 08

விலை : ரூபா 20.00

செய்தி - 47 ஒகஸ்ட் 20-26, 2016 பக்கம் - 24

# விடுதலைப்புலிகளின் தலைவரை எமில் காந்தன் ஏமாற்றினாரா?





Scoop



(கொழும்பு)

எமில்காந்தன் விடுதலை புலிகளின் தலைவர் வேலுப்பிள்ளை பிரபாகரனுக்கு ரூபா 80 கோடி கொடுக்காமல் ஏமாற்றி விட்டார் என்று தெரிய வரு கிறது. பா 80 கோடி பணம் பிரபாகரனுக்கு கிடைத் திருந்தால் இராணுவத்துடனான யுத்தத்திற்கு சில முக்கிய ஆயுதங்களை கொள்வனவு செய்திருப்பார் கள் எமில் காந்தனால் அந்தச் சந்தர்ப்பம் கை நழுவி விட்டது என்றும் கூறப்படுகிறது.

02 இல்

## பர்தாவுடன் நீந்துவதை இத்தாலி தடை செய்யவில்லை



(ரோம்)

முஸ்லிம் பெண்கள் மொட்டாக்கு அணிந்து உடல் முழுவதும் மறைக்கும் உடை அணிந்து நீச் சல் குளத்தில் நீந்துவதை தடை செய்ய சந்தர்ப் பம் இல்லை என்று இத்தாலிய உள்நாட்டு அமைச் சர் அஞ்சலினோ அல்பானோ தெரிவித்துள்ளார்.

02 இல்

(கொழும்பு)

அவுஸ்ரேலியாவிற்குச் செல்ல முயன்ற 06 இலங்கையர்களை திருப்பி அனுப்பி விட்டதாக அந்த நாட்டின் குடிவரவு குடியகல்வு அமைச்சர் பீற்றர் டட்டன் (peter detton) தெரிவிக்கிறார்.

02 இல்





## ஒன்பதாயிரம் சிங்களவர்கள் கோப்பாயில் வாக்காளராக பதிவு

## பரபரக்கும் கோப்பாய்

(யாழ்ப்பாணம்)

சென்ற வியாழக்கிழமை ஒன்பதாயிரம் சிங்கள வர்கள் கோப்பாய்க்கு வந்து வாக்காளர் இடாப் பில் தங்கள் பெயர்களை பதிவு செய்தார்கள் என்று ஒரு பரபரப்பு தகவல் திடீர் என யாழ்ப் பாணம் முழுவதும் பரவியது.

02 இல்






## நியூயோர்க் நகர பூங்காவில் டொனால் டிரம்பின் முழு நிர்வாண சிலை அமைப்பு

(நியூ யோர்க்)

தொப்பை வயிறும் சிறு விரல்களும் ஆண் உறுப் பின் சில பகுதிகள் இல்லாமலும் நியூயோக் நகர பூங்காவிலும் டொனால்ட் டிரம்பின் முழு நிர்வாண சிலை அமைக்கப்பட்டுள்ளது.

02 இல்

# தினச்செய்தி

வாரமலர்

Registered at the Department of Posts of Sri Lanka Under No QD/29/News/2016

தொலைபேசி : 021 2242636
தொலைநகல் : 021 2242139
இணையதளம் : www.thinacheithi.com/lk


## அமெரிக்காவும் இலங்கையும்

2015 ஆம் ஆண்டு ஜனவரி மாதம் 8 ஆம் திகதி நடைபெற்ற ஜனாதிபதி தேர்தலை அடுத்து புதிய ஜனாதிபதியாக மைத்திரிபால சிறிசேனா பதவி ஏற்ற பின்னர் அமெரிக்காவின் கை தொடர்ந்து ஓங்கிக்கொண்டே இருக்கின்றது

அண்மைக் காலமாக அமெரிக்கத் தூதுவர் அத்துல் கேஷப் வழங்கி வரும் அறிக்கைகள் அவரின் பேச்சுக்கள் அமெரிக்கா அரசாங்கம் இலங்கை மீது அதன் கொள்கைகளை திணிப்பதாக அமைந்துள்ளது என்று அரசியல் அவதானிகள் குறிப்பிடுகின்றார்கள். இந்த அரசியல் அவதானிகளின் கருத்துக்கள் சரி போலவே எமக்கு தெரிகிறது.

அண்மையில் அத்துல் கேஷப் யாழ்பாணத்திற்கு விஜயம் செய்திருந்த பொழுது யுத்த குற்றங்கள் சம்பந்தமாக தனது கருத்துக்களை வெளியிட்டார்.

அவர், "சர்வதேச மனிதாபிமான சட்டங்களை மீறியது" என்று அவர் ஒரு ராஜ தந்திரியாக இருந்த போதிலும் ராஜ தந்திர ரீதியில் பாவிக்க வேண்டிய வார்த்தைகளை பாவிக்காமல் "யுத்த சம்பந்தப்பட்ட" குற்றச்சாட்டுக்கள் என்று குறிப்பிட்டார்.

மேலும் அரசாங்கம் ஜெனிவா தீர்மானத்தின் படி உண்மையையும் இனங்களுக்கு நீதி சம்பந்தப்பட்ட செயற்பாடுகளையும் உருவாக்க வாக்குறுதி அளித்துள்ளது. அத்துடன் "யுத்தக் குற்றச்சாட்டு சம்பந்தமாக விசாரணைக்குத் தேவைப்படும் நீதி பொறிமுறைகளையும் விரைவில் ஆரம்பிக்கும்," என்று கூறினார்.

ஆனால் இலங்கை அரசாங்கம் வெளிநாட்டு நீதிபதிகளையும், நீதித் துறையினரையும் யுத்த குற்றச்சாட்டு சம்பந்தமாக நீதி விசாரணைகள் செய்யமாட்டோம் என அடித்துக் கூறியிருந்தது.

இலங்கை ஜனாதிபதி மைத்தரிபால சிறிசேனா, இலங்கை பிரதமர் ரணில் விக்கிரம சிங்க ஆகியோர் அழுத்தம் திருத்தமாக பல முறை இதையே வெளியிட்டுள்ளனர்.

ஆனால் யாழ்ப்பாணத்திற்கு விஜயம் செய்த அமெரிக்கத் தூதுவர் இலங்கை அரசாங்கம் யுத்தம் குற்றச்சாட்டுகள் சம்பந்தமான விசாரணைகளுக்கு, வரவேற்கத் தக்க விசாரணை பொறி முறைகள் அரசு உருவாக்கும் என்று குறிப்பிட்டது ஒரு பாரதூரமான வார்த்தைப் பிரயோகம் ஆகும்.

இவ்வாறு ஒரு வெளிநாட்டுத் தூதுவர் யாழ்ப்பாணம் வந்து இலங்கை அரசாங்கம் சம்பந்தப்பட்ட ஒரு தகவலை பகிரங்கமாக வெளியிட்டது, இலங்கை உள்நாட்டு விவகாரங்களில் அமெரிக்கா தலையிடுவது போன்ற எண்ணத்தையே உருவாக்கியுள்ளது.

அவர் சென்ற 14 ஆம் திகதி 'சண்டே ரைம்ஸ்" என்ற பத்திரிகையில் "யு.எஸ். விமானப்படை யாழ்ப்பாண உறவை பலப்படுத்தும்," என்று ஆசிரியர் தலையங்கத்தில் எழுதியிருந்தார்.

அதில் "அமெரிக்கா இலங்கையின் எதிர்காலத்தில் அக்கறையும் கடமைப்பாடும் கொண்டுள்ளது. 2015 ஆம் ஆண்டு ஜனாதிபதித் தேர்தல் நாட்டின் அரசியல் திசையில் குறிப்பிடத்தக்க ஒரு வரலாற்று மாற்றம் ஏற்பட்டது. இதனால் அமெரிக்காவுடனான புதிய உறவுக்கு சாத்தியமானது. இலங்கை வாக்காளர்கள் நல்லாட்சி மற்றும் தேசிய நல்லிணக்க உறுதி மீது கட்டப்பட்ட ஒரு புதிய அரசாங்கத்தை உருவாக்கினார்கள். இலங்கை வாக்காளர்கள் சர்வாதிகார ஆட்சியை நிராகரித்தார்கள் என்றும் சென்ற அரசாங்கம் ஓர் சர்வாதிகார அரசு," என்றும் அத்துல் கேஷப் தனது ஆசிரியர் தலையங்கத்தில் குறிப்பிட்டார்.

வெளிநாட்டுத் தூதுவர் ஒருவர் ஒரு பக்கச் சார்புள்ள ஒரு கருத்தினை வெளியிட்டது சர்வதேச ராஜதந்திர விதிமுறைகளுக்கு மாறான ஒரு கூற்று. இதற்கு முன்பு இருந்த அமெரிக்கத் தூதுவர்களோ, உத்தியோகத்தர்களோ இவ்வாறு பக்கச் சார்பான கருத்துக்களை வெளியிட்டது கிடையாது.

அண்மைக் காலத்தில் அத்துல் கேஷியப்பின் பேச்சுக்கள் 1987, 1989 ஆம் ஆண்டு காலத்தில் ஜே.என். டிக்ஸ்ற் என்ற இந்திய உயர்ஸ்தானிகர் இருந்தார். அவர் அந்தக் காலதில் இந்திய நாட்டின் ராஜ பிரதிநிதிகள் (viceroy) போல் நடந்து கொண்டார்.

அன்று டிக்ஸ்ற் இன்று அத்துல் கேக்ஷப். அதே டிக்ஸ்ற் கால் சுவடுகளை அமெரிக்கத் தூதுவர் பின்பற்றுவது போல் இருக்கிறது.

(1 ஆம் பக்கத் தொடர்ச்சி...)

## விடுதலைப்...

சென்ற 2005 ஆம் ஆண்டு நவம்பர் 19 ஆம் திகதி நடைபெற்ற ஜனாதிபதித் தேர்தலில் தமிழீழ விடுதலைப்புலிகளின் தலைவர் வேலுப்பிள்ளை பிரபாகரனுக்கு, மகிந்த ராஜபக்ஷ தேர்தலில் வெற்றியை உறுதிப்படுத்த தேர்தலுக்கு முன் ரூபா 18 கோடியும், தேர்தலுக்கு பின் ரூபா 80 கோடியும் புலிகளுக்கு வழங்கப்பட்டதாக செய்திகள் வெளிவந்தன.

இவ்வாறு வழங்கப்பட்ட பணம் எமில்காந்தன் என்று அழைக்கப்படும் அன்ரன் சமால் லக்ஷ்மி கண்ணன் எனும் பெயருடைய வவுனியாவைப் பிறப்பிடமாகக் கொண்டவரிடம் வழங்கப்பட்டது.

நடைபெற்ற ஜனாதிபதி தேர்தலின் போது வடக்கு கிழக்கு மாகாணங்களைச் சேர்ந்த தமிழ் மக்கள் ஐக்கிய தேசிய கட்சியின் ஜனாதிபதி வேட்பாளரான ரணில் விக்கிரமசிங்கவுக்கு வாக்களிப்பார்கள் என்று பெரும்பாலும் எதிர் பார்க்கப்பட்டது. அவ்வாறு நடக்கும் என்று அன்றைய நிலையில் நம்பத்தகுந்த வட்டாரங்கள் எல்லாம் உறுதிப்படுத்தின.

இவ்வாறு தமிழ்மக்கள் ரணில் விக்கிரமசிங்கவுக்கு வாக்களித்தால் மஹிந்த ராஜபக்ஷ தேர்தலில் படுதோல்வி அடைந்து விடுவார் என்பது வெள்ளிடைமலை. எனவே தமிழ் மக்களை வாக்களிக்காமல் செய்வதற்கான நடவடிக்கைகளை மஹிந்த ராஜபக்ஷவின் தேர்தல் குழுவினர் திட்டம் போட்டார்கள்.

அந்தத் திட்டத்தின்படி வடக்கு கிழக்கு மாகாண மக்களை வாக்களிக்காமல் தடுக்கக்கூடிய ஒரே ஒரு சக்தி வாய்ந்தவர் தமிழீழ விடுதலைப் புலிகளின் தலைவர் பிரபாகரன்தான் என்று அவர்கள் முடிவு செய்தார்கள்.

அதையடுத்து, இது சம்பந்தமாக நடவடிக்கைகள் மேற்கொண்டு ரிலான் அலஸ் (Tiran Ales) மூலமாக தமிழீழ விடுதலைப் புலிகளைச் சேர்ந்த எமில்காந்தனை அறிமுகம் செய்தார்கள்.

எமில்காந்தன் - பசில் ராஜபக்ஷ சந்திப்பு ரிலான் அலஸ் காரியாலயத்தில் நடைபெற்றது. இந்தச் சந்திப்பின்போது வடக்கு மாகாண தமிழ் மக்கள் யாரும் ஜனாதிபதித் தேர்தலில் வாக்களிக்கக் கூடாது, அதற்கான ஒழுங்குகளை செயற்படுத்துமாறு பசில் ராஜபக்ஷ கேட்டதாகத் தெரிய வருகிறது.

அந்தக் கோரிக்கையையடுத்து, எமில்காந்தன் தனது காரியாலயத்தைவிட்டு வெளியில் சென்று தொலைபேசியில் யாருடனோ தொடர்பு கொண்டதாகத் தெரிய வருகின்றது. (தொடர்ச்சி 15 இல்)

(1 ஆம் பக்கத் தொடர்ச்சி...)

## பர்தாவுடன் ...

இவ்வாறு முழு உடலை மறைக்கும் உடையுடன் பொது மக்களுக்காக அமைக்கப்பட்ட நீச் சல் தடாகங்களிலும், கோடை வாசஸ்தலத்தில் உள்ள கடற் கரைகள் ஆகிய பொது இடங்களில் குளிக்கத் தடை செய்வது வன்முறைகளை உருவாக்குமே தவிர வேறு ஒன்றும் இல்லை என அவர் கூறினார்.

அதேநேரத்தில் பிரான்ஸ் நாட்டில் ஆறு கடற்கரை யோரங்களில் உள்ள நகரங்களில் முஸ்லிம் பெண்கள் ஜரோப்பிய பெண்களைப் போல பிகினி உடையில் அதாவது மார்புக் கச்சமும் இடையில் ஒரு சிறிய உடையுடன் நீந்துகிறார்கள். உடல் முழுவதும் நீள உடையுடன் தலையில் மொட்டாக்கு அணிந்து கொண்டு நீந்துவதை தடை செய்துள்ளார்கள்.

இவ்வாறு இத்தாலியில் ஜரோப்பிய பெண்களைப் போல் பிகினி உடை அணிந்து நீந்தாது முஸ்லிம் பெண்கள் உடல் முழுவதும் உடை அணிந்து பொது இடங்களில் நீந்துவதை தடை செய்ய முற்படுவது மத உணர்வினைப் புண்படுத்துவதாக இருக்கும் என்று இத்தாலிய உள்துறை அமைச்சர் ஒரு பத்திரிகைக்கு அளித்த பேட்டியில் கூறியுள்ளார்.

(1 ஆம் பக்கத் தொடர்ச்சி...)

## ஒன்பதாயிரம் ...

இத்தகவல்களின் உண்மை தன்மையை அறிய யாழ்ப்பாண மாகாண சபை தவிசாளர் திரு. வி.கே. சிவஞானம் யாழ்ப்பாண உதவி தேர்தல் ஆணையாளரை தொலைபேசியில் தொடர்பு கொண்ட போது இந்த தகவல் தொடர்பாக உண்மை பொய்களை விசாரித்தார்.

யாழ்ப்பாண உதவித் தேர்தல் ஆணையாளர் இது சம்பந்தமாக கோப்பாய் பிரதேச செயலகத்துடன் தொடர்பு கொண்ட பின் திரு. சிவஞானத்திற்கு தகவல் கொடுத்தார்.

'பரபரப்பாக பரவிய வதந்தியின் படி ஒன்பதாயிரம் சிங்களவர்கள் கோப்பாய்க்கு வரவில்லை. ஆனால் கோப்பாயில் உள்ள தமிழ்ப் பெண்கள் திருமணம் செய்த சிங்களவர் 9 பேர் அளவில் அவர்கள் தாங்கள் இருக்கும் கிராம பிரிவுக்கு சென்று தங்கள் பெயர்களை அந்தந்த கிராம பிரிவில் வாக்காளர் இடாப்பில் சேர்த்துக் கொள்வதற்கு பதிவு செய்தார்கள்" இவ்வாறு மாகாண சபை தவிசாளருக்கு கூறினார் என்று தெரிய வருகிறது.

இது சம்பந்தமாக தினச்செய்தி கோப்பாய் பிரதேச சபை செயலாளரான சுபாக்ஷினி மதியழகனுடன் தொடர்பு கொண்ட போது பரபரப்பாக பேசப்பட்டபடி எதுவுமே நடைபெறவில்லை என உறுதிப்படுத்தினார்.

(1 ஆம் பக்கத் தொடர்ச்சி...)

## எச்சில்...

இந்த ஆறு இலங்கையர்களையும் இவர்கள் வள்ளங்களுடன் கைது செய்து விசாரணைகளின் பின்னர் இலங்கைக்கே திருப்பி அனுப்பிவிட்டதாக அமைச்சர் சென்ற புதன்கிழமை உறுதி செய்திருக்கிறார்.

ஆஸி அரசாங்கம் இலங்கையிலிருந்து வர முயற்சிக்கும் அனைவரையும நடுக்கடலில் தடுத்து நிறுத்தும் முயற்சியில் ஈடுபட்டு வருவதாக அவர் தெரிவித்தார்.

"இலங்கையும் நாங்களும் இந்த விடயத்தில் ஒருமித்து செயற்படுகிறோம். இலங்கைஅதிகாரிகள் எமது நாடு நோக்கி ஒரு படகு வருவதாக அறிவித்தார்கள். நாங்கள் காத்திருந்து அந்தப் படகில் வந்தவர்களை கைது செய்து திருப்பி அனுப்பினோம்.

"வள்ளங்களுடன் அவுஸ்திரேலியா நோக்கி வருபவர்களை திருப்பி அனுப்பும் அந்நாட்டின் நடவடிக்கைகள் தொடர்கின்றது. ஆனால் இந்த நடவடிக்கை ஐ.நாவின் சட்டங்களுக்கு முரணானது என சர்வதேச மன்னிப்புச் சபையின் அதிகாரியொருவர் சுட்டிக் காட்டி னார்.

வள்ளங்களுடன் அகதித் தஞ்சம் கோரி வருபவர்களைக் கடல் எல்லையில் வைத்து பாதுகாப்பு உத்தியோகஸ்தர்கள் நேர்முகம் கண்டு அவர்கள் கண்ட நேர்முகங்களின் அடிப்படையில் குடிவரவு குடியகல்வு அதிகாரிகள் மதிப்பீடு செய்கின்றார்கள்.

சென்ற மே மாதம் இலங்கையைச் சேர்ந்த ஒருவர் கொக்கோஸ் தீவுகளை அடைந்தார். அவரின் அகதிக் கோரிக்கையைக் கண்டு கொள்ளாமல் செய்யப்பட்டது. உண்மையில் என்ன நடந்தது என்றால் அவர்கள் அவரிடம் கேட்டது பெயர், ஏன், எங்கிருந்து வருகிறீர்கள் என்பது மட்டும் தான்.

(தொடர்ச்சி... 15 இல்)

(1 ஆம் பக்கத் தொடர்ச்சி...)

## நியூயோர்க்...

அது மாத்திரமல்லாமல் அமெரிக்காவில் உள்ள முக்கிய நான்கு நகரங்களிலும் டிரம்பின் முழு நிர்வாண சிலை நிர்மாணிக்கப்பட்டிருந்தது.

"சக்கரவர்த்திக்கு ஆண் உறுப்பு இல்லை" என்ற தலைப்பில் இந்த சிலைகள் அமைக்கப்பட்டுள்ளன. உத்தியோகபூர்வமாக டிரம்பின் அனுமதி இல்லாமல் அமைக்கப்பட்ட இந்த டிரம்பின் நிர்வாண சிலைகள் அவ் வழியே போவோர் வருவோரை ஆச்சரியப்படுத்தி அவர்களை இந்த சிலைகளை வந்து பார்க்க வைக்கிறது.


58 வயதை உடைய இனாக் கோப் என்ற பெண்மணி இது சம்பந்தமாக தெரிவிக்கையில், "நான் ரயில் நிலையத்தில் இருந்து வந்த போது டிராம்பின் உருவச்சிலை இவ்வாறு நிர்வாணமாக இருக்கும் என எதிர்பார்க்கவில்லை இது ஒரு தேவையற்ற விஷயம் நான் அதனைப் பார்த்து சிரித்தேன்," என்று கூறினார்.

இந்த அனுமதி பெறாமல் அமைக்கப்பட்ட இந்த சிலையை நியூயோக் நகர பூங்கா ஊழியர்கள் அமைக்கப்பட்ட அன்று மதியமே அகற்றிவிட்டார்கள். "எந்தவிதமான அனுமதியும் இல்லாத இந்தச் சிலையை நாங்கள் அகற்றி விட்டோம்," என்று நகர பூங்கா பேச்சாளர் மேய் பெர்கியூசன் கூறினார்.

ஆனால் இது சம்பந்தமாக டொனால் டிரம்பின் பேச்சாளர் எந்த கருத்தும் கூற மறுத்து விட்டார்.

இதற்கிடையில் அவ்வழியில் சென்ற பலர் அந்த சிலையுடன் செல்பி எடுத்து மகிழ்ந்துள்ளார்கள்.

# தேடப்படும் நபர் கனடாவில்




KANAGARAJAH, RAVISHANKAR
WANTED BY THE JUDICIAL AUTHORITIES OF
SRI LANKA FOR PROSECUTION / TO SERVE A SENTENCE

IDENTITY PARTICULARS
Present family name : KANAGARAJAH
Forename : RAVISHANKAR
Sex : Male
Date of birth : 20/01/1971 (43 years old)
Place of birth : VELVETTITHUREI, Sri lanka
Language spoken : Tamil, English
Nationality : Sri lanka
PHYSICAL DESCRIPTION
Height : 1.75 meter
Weight : 85 Kg
Colour of hair : Black
Colour of eyes : Black
CHARGES
Published as provided by requesting entity
Charges : TERRORISM
IF YOU HAVE ANY INFORMATION PLEASE CONTACT
Your national or local police
General Secretariat of INTERPOL

இலங்கை அரசாங்கத்தினால் தேடப்படும் முக்கியமான இலங்கையர் ஒருவர் கனடாவில் குடியுரிமை பெற்று வாழ்ந்து வருகின்றார். ரவிசங்கர் கனகராஜா என்ற இலங்கைப் பிரஜை ரொறன்ரோவின் பெரும் பாகம் ஒன்றில் கனேடியப் பிரஜை போல் வாழ்ந்து வருகின்றார். சர்வதேசப் பொலிஸாரால் தேடப்படும் ஒருவர் இவ்வாறு கனடாவில் பிரஜா உரிமை பெற்று வாழ்ந்து வருகின்றார் என்பது ஆச்சரியமான விடயமாகும். இவருக்கு எப்போது பிரஜா உரிமை கிடைத்தது என்பது குறித்த விடயம் தெரியவில்லை. ஆனால் இவர் கடந்த 2014 ஆம் ஆண்டு ஜீன் மாதம் 24 ஆம் திகதி இந்த கனகராஜா ரவிசங்கர் அல்லது சங்கிலி என அழைக்கப்படும் இவருக்கு நீதிமன்றில் பிரசன்னமாகாத நிலையில் வவுனியா நீதிமன்றம் 30 வருட சிறைத் தண்டனை விதித்தது. இவர் வடகொரியாவில் இருந்து யுத்த தளபாடங்களையும், வெடி பொருட்களையும் கொண்டு வந்தார் என்ற குற்றச்சாட்டின் பேரில் இலங்கை அரசாங்கம் வழக்குத் தொடர்ந்ததையடுத்து இந்தத் தீர்ப்பு வவுனியா மேல் நீதிமன்றினால் அளிக்கப் பட்டது.

இந்த ரவிசங்கருடைய சேவையைப் பாராட்டி விடுதலைப் புலிகளின் தலைவர் வேலுப்பிள்ளை பிரபாகரனால் இவருக்கு ஒரு பதக்கம் வழங்கப்பட்டிருந்தது. இந்தப் பதக்கத்தை இவர் பெரும் பொக்கிஷமாகக் கருதி பாதுகாத்து வந்ததாகவும் தெரி விக்கப்படுகின்றது.


இவ்வாறான நபர் எவ்வாறு கனடவில் பிரஜாவுரிமை பெற்று வாழ்ந்து வருகின்றார் என்பது ஆச்சரியமான விடயமாகவுள்ளது. இவர் எவ்வளவு காலமாக கனடாவில் வாழ்கின்றார் என்ற விடயம் யாருக்கும் தெரியவில்லையென்பதும் குறிப்பிடத்தக்க விடயமாகும்.

# நூறு வயது வரை வாழ வேண்டுமா செக்ஸ் வைக்காதீர்கள்

கொல்கத்தாவைச் சேர்ந்த ஒரு தாத்தா தனது வயது 120 என்று கூறுகிறார். இத்தனை வயதாகியும் அவர் மிகவும் ஆரோக்கியமாக இருக்கிறார். சுறுசுறுப்பாக பல வேலைகளைச் செய்கிறார். நன்றாக நடமாடுகிறார். யோகா செய்கிறார. என்ன தாத்தா உங்களோட இளமை ரகசியம் என்று கேட்டால் மூன்றே மூன்று விடயங்களை மட்டும் மிகச்சரியாகச் செய் தால் போதும். நீங்களும் 100 வயதைத் தாண்டி வாழலாம் என்று சிரித்தபடி கூறு கிறார்.

அந்த மூன்று விடயங்களும் என்ன தெரியுமா. செக்ஸ்... அதாவது செக்ஸ் வைக்கவே கூடாதாம். இரண்டாவது மசா லாப் பொருட்களை சமையலில் சேர்த்துக் கொள்ளவே கூடாதாம். மூன்றாவது தின சரி தவறாமல் யோகா செய்து வர வேண்டுமாம். இதைச் செய்தால் நிச்சயம் 100 வயதைத் தாண்டி வாழலாம் என்று சொல்கிறார் தாத்தா. அவருடைய பெயர் சுவாமி சிவானந்தா. சுவாமி சிவானந்தா ஒரு யோகா குருவும் கூட.

தினசரி பலருக்கும் யோகா கற்றுத் தரு கிறார். இவரிடம் பலரும் யோகா கற்றுக் கொள்கின்றனர். யோகாதான் நமது ஆரோக்கியத்திற்கு முதுகெலும்பு போன்றது என்று கூறுகிறார் சிவானந்தா.



# இடம்பெயர்ந்தோரின் நிரந்தர வாழ்வாதாரத்திற்கு அரசாங்கம் ரூபா 14 பில்லியன் ஒதுக்கீடு



வடக்கு மற்றும் கிழக்கு மாகாணங்களி லுள்ள போரினால் பாதிக்கப்பட்ட மக்களின் சமூக பொருளாதார நிலைகளை மேம் படுத்துவதற்கும் அவர்களை அபிவிருத்தி நீரோட்டத்தில் ஒன்றிணைப்பதற்கும் அர சாங்கம் அதியுயர் பெறுபேறுகளைக் கொண்ட மீள்குடியேற்ற கருத்திட்டங்களை இம் மாகாணங்களில் அமைப்பதற்குமாக ரூபா 14 பில்லியனை ஒதுக்கீடு செய்துள்ளது. இந்தக் கருத்திட்டங்கள் யாவும் சிறைச் சாலைகள் மறுசீரமைப்பு, புனர்வாழ்வளிப்பு மீள்குடியேற்றம் மற்றும் இந்துசமய அலு வல்கள் அமைச்சினால் துரிதகதியில் மாவட் டச் செயலாளர்கள் ஊடாக அமுல்படுத்தப் படவிருக்கின்றன.

இத் திட்டத்தின் கீழ் 9,000 நிரந்தர வீடுகள் இடம்பெயர்ந்த குடும்பங்களுக்கும், 630 வீடுகள் இந்தியாவில் இருந்து தாயகம் திரும்பும் அகதி குடும்பங்களுக்கும், 400 வீடுகள் முன்பு அச்சுறுதல்களுக்கு உள் ளாக்கப்பட்டு பாதிக்கப்பட்ட எல்லைக் கிராம மக்களுக்கும் மொத்தமாக 10,000 நிரந்தர வீடுகளை அமைப்பதற்கு திட்ட மிடப் பட்டுள்ளது. இதற்காகவென ரூபா 8,024 மில்லியன் நிதி வரவு செலவுத் திட்டத்தில் ஒதுக்கப்பட்டுள்ளது. இந்த திட்டங்களை மாவட்டச் செயலாளர்கள் ஊடாக அமுல் படுத்த திட்டமிடப்பட்டுள்ளது. இவற்றில் 3,140 வீடுகள் யாழ் மாவட்டத்திலும் 1,035 வீடுகள் கிளிநொச்சியிலும்,

(தொடர்ச்சி...15 இல்)

# நியாயமற்ற முறையில் அரசியல் ஏணியிலிருந்து வீழ்த்தப்பட்டதே எனது ஆதங்கமாகும் ஆனந்தசங்கரி



நாட்டுக்கும் எம் மக்களுக்கும் நான் செய்த சேவையால் தற்போதுள்ள அந்தஸ் திலும் பாக்க உயர்ந்த ஸ்தானத்தில் இருந் திருக்க வேண்டும். என் மீதான நியாய மற்ற, உண்மைக்கு புறம்பான செய்திக ளால் எனது அரசியல் நடவடிக்கைகள் மிகவும் கடுமையான பாதிப்புக்குள்ளாயின. இவ்வாறு தழிழர் ஜக்கிய விடுதலை முன்னணியில் செயலாளர் நாயகம் வி. ஆனந்தசங்கரி தெரிவித்துள்ளார்.

பல்வேறு அச்சு இலத்திரனியல் ஊடக உரிமையாளர்கள், அவற்றின் அரசியல் ஆய் வாளர்கள் மற்றும் ஊடகவியலாளர்கள், நிருபர்கள் அனைவருக்கும் ஓர் வேண்டு கோள் விடுத்துள்ளார் அவர் அந்த வேண்டு கோளில்,

"உங்களில் அநேகமானோருக்கு என் னைப்பற்றி அறிமுகப்படுத்த வேண்டிய அவசியமில்லையென நம்புகிறேன்," "உங்க ளில் சிலர் என்னைப்பற்றி அறியாமல் இருந் திருக்கலாம். காரணம் எதுவும் தெரியா- மலேயே என்னைப்பற்றி தவறான கருத்தைக் கூட கொண்டிருக்கலாம். இக்காலத்தில் மாறு பட்ட கருத்துக்களுக்கு சம்பந்தப்பட்டவர்க ளுடைய அரசியல் கொள்கைகள் காரணமாக இருக்கலாம்," என்றார்.

மேலும் ஆனந்தசங்கரி குறிப்பிடுகையில் "நான் 55 ஆண்டுகளுக்கு மேலாக அர சியலில் ஈடுபட்டுள்ளதால் பல்வேறு அரசியல் கட்சிகளை சார்ந்த அநேகமான அரசியல் வாதிகளுடன் நன்றாக பழகியிருக்கிறேன்". எனது அரசியல் இலங்கை சமசமாஜ கட்சி யிலேயே ஆரம்பமாகிற்று அதன் பின்னர் கௌரவ ஜீ.ஜீ.பொன்னம்பலம் அவர்களின் தலைமையில் இயங்கிய அகில இலங்கை தமிழ் காங்கிரஸ் கட்சியின் கிளிநொச்சி தொகுதி நாடாளுமன்ற உறுப்பினராக தெரி வாகினேன்" அக்கட்சியும் கௌரவ எஸ்.ஜே. வி.செல்வநாயகம் அவர்களுடைய இணைந்து தமிழர் ஐக்கிய விடுதலை கூட் டணியை 1972 மே 14 அன்று கௌரவ செல்வநாயகம் அவர்களின் தலைமையில் உருவாக்கினோம்.

அவர் மேலும் கூறுகையில் ஊடகங்கள் ஒரு நாட்டின் அரசியல் சாசனத்தையும் அந் நாட்டு மக்களின் ஜனநாயக உரிமைகளையும் பாதுகாக்கும் புனிதமான பணியைச் செய்ய கடமைப்பட்டுள்ளன. ஆகவே ஊடகங்களுடன் தொடர்புகளை கொண்ட ஒவ்வொரு ஊடக வியலாளரும் நேர்மையாகவும், அவதான மாகவும் அரசியல்வாதிகள் உட்பட பல்வேறு பிரமுகர்கள் பற்றிய அறிக்கைகள் தயாரிக்க வேண்டும்.


தனிப்பட்ட ரீதியில் யாரையும் அடையாளம் காணுவதோ அல்லது குற்றம் சுமத்துவதோ எனது நோக்கமல்ல.

அவர் மேலும் குறிப்பிடுகையில் நியாயமற்ற முறையில் அரசியல் ஏணியிலிருந்து வீழ்த் தப்பட்டதே எனது ஆதங்கமாகும். ஈவிரக்க மற்ற கண்டனமும் உண்மைக்கு புறம்பான அறிக்கைகளும் எனது அரசியல் வாழ்வில் எனக்கு பெரும் இழப்பை ஏற்படுத்தியதோடு சிலரை உயர்த்தியும் வைத்துள்ளது. எனது நேர்மைக்காக நான் தண்டிக்கப்பட்டது வருத் தத்துக்குரிய விடயமாகும். ஊடகத் துறையில் சம்பந்தப்பட்ட ஒவ்வொருவரும் தராசை சம னாக பிடிக்க வேண்டும் என்பதே என் பணிவான வேண்டுகோள்.

தற்போது தமிழ் தேசிய கூட்டமைப்பு என்ற வொரு வார்த்தை மிக மோசமான முறையில் துஷ்பிரயோகம் செய்யப்படுகிறது. ஏனைய பங்காளி கட்சிகளை ஒதுக்கி வைத்துவிட்டு தனியொரு அரசியல் கட்சியை மட்டும் வளர்க்க உதவுகிறது. இது உடனடியாக நிறுத்தப்படாவிட்டால் நாடு பல விளைவுகளை அனுபவிக்க வேண்டியேற்படும். தமிழ் தேசிய கூட்டமைப்பின் உண்மை வரலாறு இதுவரை சர்வதேச சமூகத்திற்கு தெளிவுபடுத்தப்பட வில்லை.

எனவே இதுபோன்ற பல விடயங்கள் ஊடகங்களின் கவனத்துக்கு கொண்டுவரும் பட்சத்தில் அவற்றுக்கு நியாயம் கிடக்குமென நம்புகிறேன் - என்று திரு. ஆனந்தசங்கரி தனது அறிக்கையில் குறிப்பிட்டிருந்தார்.

# உலகின் மிகப்பெரிய வானூர்தி பறக்கவிடப்பட்டது



மத்திய இங்கிலாந்தின் கார்டிங்டன் விமான தளத்திலிருந்து இந்த ஏர்லேண்டர் 10 தனதுகன்னிப் பயணத்தைத் தொடங்கியது. இங்கிலாந்தைச் சேர்ந்த ஹைபிரிட் ஏர் வெகிக்கிள்ஸ் நிறுவனம் இதனைத்தயாரித்துள்ளது. விமானம், ஹெலிகாப்டர், ஆகாய கப்பல் (ஏர்ஷிப்) ஆகிய மூன்றின் கலவையாக இந்த வானூர்தி தயாரிக்கப்பட்டுள்ளது. உலகின் மிகப்பெரிய பயணிகள் விமானமான ஏர்பஸ் ஏ380 விமானத்தின் நீளம் 240 அடிதான். ஆனால், ஏர்லேண்டர் 92 மீற்றடர் (302 அடி) நீளம் கொண்டது.

அமெரிக்க ராணுவத்தின் கண்காணிப்புப் பணிகளுக்காக இந்த ஏர்லேண்டர் 10 தயாரிக் கப்பட்டது. ஆனால், நிதிப்பற்றாக் குறை காரணமாக கடைசி நேரத்தில் திருப்பி அளிக்கப்பட்டதால், பிரிட் டனின் ஒத்துழைப்புடன் தற்போது பறக்க விடப்பட்டுள்ளது.

வழக்கமான விமானங்களை விட மிகப் பெரியதாகவும், ராட்சத பலூனைப் போன்றும் தோற்றமளிக் கும் இந்த ஏர்லேண்டர் 10, 4,880 மீட்டர் உயரம் வரை பறக் கும். மணிக்கு 148 கிலோ மீட்டர் வேகத்தில் பறக்கும் என ஹைபிரிட் ஏர் வெகிக்கிள்ஸ் நிறு வனம் தெரிவித்துள்ளது.

தற்போது பறக்கும் வானூர்தி களிலேயே ஏர்லேண்டர்தான் மிகப்பெரியது. இந்த வானூர்தி யைத் தயாரிக்க பிரிட்டன் அரசு 37 லட்சம் அமெரிக்க டொலர்கள் நிதியுதவி அளித்துள்ளது.

# சிரிய அவலத்தை விளக்கும் படம்!




அலெப்போ நகரில் நிகழ்த்தப்பட்ட வான்வழித் தாக்குதலில் காயமடைந்து, ரத்தக்களறியான முகத்துடன் அவசர உதவி ஊர்தியில் அமர்ந்திருக்கும் 5 வயது சிறுவனின் படம், சமூக வலைதளங்களில் வெளியாகி அதிர்ச்சி அலையை ஏற்படுத்தியுள்ளது. சிரியாவில் நடைபெற்று வரும் உள்நாட்டுப் போரின் அவலத்தை அந்தப் படம் பிரதிபலிப்பதாக பார்வையாளர்கள் தெரிவிக்கின்றனர்.

மீட்புக் குழுவினருடன் சென்ற புகைப்பட செய்தியாளர் முகமது ரஸ்லான் எடுத்த அந்தப் படம்தான் சமூக வலைதளங்களில் பரபரப்பை ஏற்படுத்தியுள்ளது. கடந்த ஆண்டு செப்டம்பர் மாதம், துருக்கியிலிருந்து கிரீஸ் நாட்டுக்கு அகதிகளை ஏற்றிச் சென்ற படகு விபத்துக்குள்ளானது. இதில் உயிரிழந்த 3 வயது சிறுவன் அய்லான் குர்தியின் உடல், துருக்கியின் பொத்ரூம் நகரக் கடற்கரையில் கரையொதுங்கியது.

அந்தச் சிறுவனின் புகைப்படம் ஊடகங்களில் வெளியாகி உலகம் முழுவதும் அதிர்ச்சி அலையை ஏற்படுத்தியது. அந்தப் படம் ஏற்படுத்திய தாக்கத்தால், அகதிகள் பிரச்னையை விரைந்து தீர்க்க வேண்டிய நிலைக்கு ஐரோப்பிய நாடுகள் தள்ளப்பட்டன.

# இறந்த கணவர் உயிருடன் வருவார் என உடலுக்கு புனித நீர் தெளித்து வந்த பாட்டி



ரஷ்யாவை சேர்ந்தவர் 76 வயது மதிக்கத்தக்க ஓய்வு பெற்ற பெண் மருத்துவர். கடந்த நான்கு மாதங்களுக்கு முன்பு இவருடைய கணவர் இறந்து போய் விட்டார். வீட்டில் உள்ள ஷோபாவில் கணவரின் உடலை வைத்து தொடர்ச்சியாக பிரார்த்தனைகளை செய்து வந்து உள்ளார்மீண்டும் கணவர் உயிர்பிழைத்து வருவார் என்ற நம்பிக்கையில், அவர் மீது புனித நீரை தெளித்து பல்வேறு கடுமையான துர்நாற்றம் வந்ததை தொடர்ந்து அக்கம்பக்கத்தினர் பொலிஸில் புகார் அளித்துள்ளனர். விரைந்து வந்த அதி-காரிகள் உடலை கைப்பற்றி அடக்கம் செய்ய ஏற்பாடுகள் செய்தனர். பெண் டாக்டர் புலன் உணர்வுகளுக்கு அப்பாற்பட்ட போராட்டம் (Battle of Extrasensory) என்ற தொலைக்காட்சி நிகழ்ச்சிக்கு அடிமையாக இருந்ததும், இதன் அடிப்படையிலேயே கணவனுக்கு மீண்டும் உயிர்கொடுக்க முயற்சி செய்தார் என்பதும் தெரியவந்துள்ளது.

# போத்துகல் பாலைவனத்தில் மர்ம உயிரினம்



போத்துகல் பாலைவனத்தில் மர்ம உயிரினம் ஒன்று தென்பட்டுள்ளது. அது ஏலியன் என்று சொல்லப்படும் வேற்றுகிரகவாசியாக இருக்கலாம் விஞ்ஞானிகள் ஆய்வு செய்து வருகின்றனர். ஏலியன்ஸ் என்று அழைக்கப்படும் வேற்றுகிரகவாசிகள் உண்மையில் இருக்கிறார்கள் என்று இதுவரை எந்த ஒரு அதிகாரபூர்வமான வெளியீடும் வந்ததில்லை. அமெரிக்காவில் ஏரியா 51 என்று சொல்லக்கூடிய பகுதியில் மட்டும் ஏலியன்கள் தென்படுவதாக ஏராளமான செய்திகள் எப்போதும் வந்து கொண்டிருக்கும்.

அந்த பகுதியை வேற்று கிரகவாசிகள் வந்து செல்லும் பகுதியாகவே அனைவரும் பார்த்து வருகின்றனர். இந்நிலையில் போத்துகல் சுகல் பாலைவனத்தில் மனிதன் போன்று உருவம் உள்ள மர்ம உயிரினம் ஒன்று நடந்து செல்வது போன்ற காட்சிகள் வெளியாகியுள்ளது.

இது வேற்றுகிரகவாசிதான் என்று சிலர் குறிப்பிடுகின்றனர். போத்துகலின் மெடிரா தீவில் இந்த காட்சி பதிவு செய்யப்பட்டதாக தகவல்கள் வெளியாகியுள்ளன. ஆனால் இந்த காட்சி பதிவு செய்யப்பட்ட இடம் எது என்று சரியான தகவல் கிடைக்கவில்லை.

# கிரில் சிக்கன் போல் கிரில் முதலை



உணவகங்களில் கோழியை நெருப்பில் வாட்டுவது போல் முதலையை நெருப்பு தனத்தில் வாடி இறைச்சியை விற்பனை செய்கின்றனர். வெளிநாடுகளில் முதலை இறைச்சியை மக்கள் அதிக அளவில் விரும்பி சாப்பிட்டு வருகின்றனர்.

முதலை இறைச்சி சமைக்கும் வீடியோ காட்சி ஒன்று வெளியாகியுள்ளது. அதில் முதலை ஒன்றை கம்பில் மாட்டிவிட்டு அதன் அடியில் நெருப்பு தணலை மூட்டி முதலையை வாட்டி சாப்பிட தயாராக்கி கொண்டிருக்கின்றனர். தலை பகுதியை மட்டும் விட்டு மற்ற பகுதிகளை நெருப்பில் வாட்டுகின்றனர். ஊர்களில் நாம் கிரில் சிக்கன்தான் பார்த்திருப்போம், சுவைத்திருப்போம். ஆனால் இங்கு கிரில் முதலை தயாராகி வருகிறது.

# சமூக விழிப்புணர்வுக் களம்

## ஓர் அலசல்


நேர்காணல் :

வா.தயாளன்



# போருக்குப் பின் முல்லைத்தீவில் நடந்தது என்ன?

## செயல்திறன் அரங்க இயக்கம் மக்கள் முன் கொண்டு செல்ல திட்டம்



**தே. தேவானந்தன்**
தலைவர்
செயல்திறன் அரங்க இயக்கம்

இது வரையில் 50 இற்கும் மேற்பட்ட நாடகம் தயாரித்து இந்த அமைப்பு மேடை ஏற்றி இருக்கும் செயல்திறன் அரங்க இயக்கம் (Active Theatre Movement) 2003ம் ஆண்டு ஆரம்பிக்கப்பட்ட ஓர் நாடக நிறுவனம் இது யாழ்பாண மக்கள் மத்தியில் அமைந்துள்ள அமைப்பு. ஈழத்தில் தமிழ் நாடக வரலாற்றில் தனக்கென தனித்துவமான அடையாளத்தை உருவாக்கியுள்ளது. இது திரு.தே. தேவானந்தன் தலைமையில் பதிவு செய்திருக்கிறது.

தற்சமயம் போருக்கு பின், முன் முல்லைத்தீவில் நடைபெற்ற நிகழ்வுகளை நாடகமாக உருவாக்கி மக்கள் மத்தியில் நடித்துக் காட்டத் திட்டமிட்டுள்ளார்கள்.

இந்த செயற்திறன் அரங்க இயக்கத்தின் தலைவர் தே. தேவானந்தனை தினச்செய்தி சந்தித்து பேசியது :

'ஆரம்பத்தில் நாடக அரங்கக் கல்லூரி School Of Drama and Theatre குழந்தை ம. சண்முகலிங்கம் மற்றும் ஆ. தாசேஷியஸ் ஆகிய இருவரும் சேர்ந்து தொடங்கினார்கள். அங்கு தான் எமது ஆரம்ப நாடக பயிற் சியை பெற்றோம் அங்கு சமூக மேம்பாடு Applyed Theatre Concepts செயற்பாடுகளுக்காக பயன்படுத்தப்பட்டன. குறிப்பாக,

1. விழிப்புணர்வுச் செயற்பாடு
2. சமூக மேம்பாடு செயற்பாடு அதாவது, மன இறுக்கங்களில் உள்ள பிள்ளைகளை அந்த இறுக்கங்களில் இருந்து தளர்த்தும் நடவடிக்கைகளை செய்துவருகின்றோம். இந்த செயல்திறன் அரங்க இயக்கம் 2003 ஆம் ஆண்டு மொத்தம் 30 பேர் கொண்டு ஆரம்பித்தோம். அதன் தலைவராக நானும், செயலாளயராக திருமதி ஜ. ஜனனியும், பொருளாளராக ஜ.எஸ். கஜித்தாவும் உள்ளோம்.

வருடா வருடம் நல்லூரில் நாடக திருவிழா செய்து வருகின்றோம். யுத்தத்தினால் பாதிக்கப்பட்டவர்களை அரங்கின் ஊடாக பயிற்றுவித்து அவர்களின் கதைகளையும் தகவல்களையும் வெளிக்கொண்டு வருவதற்கு நடவடிக்கை எடுத்து வருகின்றோம்.

செயல்திறன் அரங்க இயக்கத்தின் நாடகங்கள் எல்லாம் பொழுது போக்கிற்காக மட்டுமின்றி முல்லைத்தீவு போன்ற இடங்களில் நடைபெற்ற நிகழ்வுகளையும் நாடகமாக வெளியிடுவதன் மூலம் பொது சன அபிப்பிராயங்களை உருவாக்கி சாதகமாகவும் மாற்றி அமைத்து வருகின்றோம்.



**தயாகரன் அனோஜன்**
இவர் கற்சிலைமடு மகாவித்தியாலயத்தில் கல்வி கற்றவர். 'நாடகத்தில் பயிற்சி பெறும் ஆசையுடன் நான் இந்த செயல்திறன் அரங்க இயக்கத்தில் என்னை இணைத்துக் கொண்டேன். முல்லைத்தீவில் நான் இருக்கின்ற பொழுது IOM தயா ரித்த "கூத்தல்ல நிஜம்". சேவா லங்காவின் டெங்கு சம்பந்தமான விழிப்புணர்வு SHN இன் பாதுகாப்பு வெளிநாட்டு பயணம் ஆகிய நாடகங்களில் நடித்துள்ளேன். முல்லைத்தீவு சம்பந்தமான உண்மைச் சம்பவங்களை நாடகமாக நடித்து அந்த சம்பவங்களை வெளிக்கொண்டு வருவதற்காக நான் இங்கு வந்தேன்" என்று கூறினார்.



**ஜெயகுமார் தமிழ்வேந்தன்**
நான் சாதாரண தரம் வரை கிளிநொச்சி புதுமுறிப்பில் உள்ள விக்னேஸ்வரா வித்தியாலயத்தில் கல்வி கற்றேன். நான், "இது கூத் தல்ல நிஜம" இது ஒரு மணி நேரம் கொண்ட தெருவழி நாடகம் இதில் நடித்துள்ளேன். செயல்திறன் அரங்க இயக்கத்தில் இணைந்து பயிற்சி பெற்று நாடகம் நடிப்பதற்கு வந்துள்ளேன்.



**சி. மதிவேந்தன்**
செயல்திறன் அரங்க இயக்கத்தின் கள உத்தியோகத்தர். நிர்வாக வேலைகள் அனைத்தையும் இவரே செய்கிறார். நாடகங்கள் நடை பெறுகின்ற பொழுது இவரே தயா ரிப்பு முகாமையாளர் ஆகும். நாடகத்திற்கு தேவையான அரங்கம் அமைத்தல், மற்றும் தேவையான பொருட்கள் சேகரித்தல் ஆகிய பின்புல வேலைகள் அனைத்தையும் இவரே செய்கிறார்.



**வரதராஜன் மிதுளா**
முல்லைத்தீவை சேர்ந்தவர். "உயர் தரம் வரை முல்லைத்தீவு மகா வித்தியாலயத்தில் கல்வி கற்றேன். பாடசாலையில் நாடகங்கள் நிறைய நடித்துள்ளேன். அதையடுத்து செயல் திறன் அரங்க இயக்கத்தில் சேர்ந்து நாடகங்களில் பயிற்சி பெற்று நடிக்கின்றேன். "தூவானம்" இதில் நடிப்பதற்கு பயிற்சி பெற்று வருகின்றேன். இதில் 12 பேர் நடிக்கின்றோம். இதில் நடிப்பவர்கள் அனைவரும் முல்லைத்தீவு. கிளிநொச்சியை சேர்ந்தவர்கள். இது ஒரு உண்மை நிகழ்வு. இதை ஓர் நாடகமாக நடிக்கின்றோம்.



**தனுஷா சசிகுமார்**
மாணவி உடுப்பிட்டி மகளீர் கல்லூரியில் கல்வி கற்கிறார். உடுப்பிட்டி இலக்கணாவத்தையை சேர்ந்தவர். "2015ம் ஆண்டு தொடக்கம் இவ் அரங்கத்துடன் இணைந்துள்ளேன். "நசியும் பிஞ்சுகள்" என்ற நாடகத்தில் தனியாக நடித்து எனது நடிப்புக்காக பரிசும் பெற்றுள்ளேன். இந்த வருடம் யாரோடு நோகேன் என்ற நாடகத்தில் நடிப்பதற்கு பயிற்சி பெற்று வருகின்றேன்."




**ஜெஸ்மினி ஶ்ரீநேசராசா**
இவர் முள்ளியவளை 3ம் வட்டாரத்தை சேர்ந்தவர். "நான் சங்கம" என்ற பெண்கள் அமைப்பில் உதவியாளராக பணியாற்றுகிறேன். ஷியாம் என்ற நிறுவனத்தில் 2007ம் ஆண்டு சமூகவலுவூட்டலாளராக வேலை செய்தேன். மேலும் யுவ சக்தி சம்மேளத்திலும் வேலை செய்தேன். 2015 ஆம் ஆண்டு சங்கமி அமைப்பும் IOM நிறுவனமும் செயற்திறன் அரங்குடன் சேர்ந்து "கூத்தல்ல நிஜம்" என்ற நாடகத்தை உருவாக்கி அரங்கேற்றியது - 45 நிமிட கால அவகாசம் கொண்ட நாடகம். அதில் நான் துச்சாதனனாக நடித்தேன். கும்மி, ஒயிலாட்டம், கரகாட்டம் சுளகாட்டம் ஆகிய வகையான நடனங்களும் ஆடுகின்றேன். "புதைக்கப்பட்ட சடங்கு", "உருமறைப்பு" ஆகிய நாடகங்களில் நடித்து வருகிறேன்.



**மனோகரன் தட்ஷாயினி**
முல்லைத்தீவை சேர்ந்தவர் உயர் தரத்தை முல்லைத்தீவு மகா வித்தியாலயத்தில் கற்றார். நான், "தூவானம", "புதையுண்ட சடங்குகள்", "உருமறைப்பு" ஆகிய நாடகங்களில் நடிப்பதற்கு பயிற்சி பெற்று வருகின்றேன். முல்லைத்தீவு போன்ற இடங்களில் நடைபெற்ற நிகழ்வுகளையும் நாடகமாக கொண்டு வரவே நடித்து வருகிறேன். நான் மட்டக்களப்பு செங்கலடியை சேர்ந்தவள்.




**அ. வினிஷியா**
அலம்பில் முல்லைத்தீவை சேர்ந்தவர். "நான் உயர்தரம் வரை முல்லைத்தீவு மத்திய மகா வித்தியாலயத்தில் கல்வி கற்றேன். "புதைக்கப்பட்ட சடங்குகள்". "தூவானம்" ஆகிய நாடகங்களில் நடித்து வருகின்றேன்.




# சொன்னார்கள் சொன்னார்கள்



“கடந்த ஞாயிற்றுக்கிழமை வவு னியாவில் நடைபெற்ற தமி ழரசு கட்சியின் மத்திய குழுகூட்டத்தில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தேசிய பட்டியலை சாந்தி சிறிஸ் கந்தராசாவுக்கு வழங்கியமை தொடர்பில் நான் கடுமையான வாதத்தை முன் வைத்தேன். ஒரு கட்டத்தில் நான் கோபமாக ‘மைக்கை’ மேசை மீது வைக்கும்போது அது கீழே வீழ்ந்து விட்டது. அதனை சில இணைய ஊடகங்கள் நான் எதிர்க்கட்சி தலைவர் மீது மைக்கை வீசித் தாக்கினேன். அவர் மயிரிழையில் உயிர் தப்பினார் என செய்தி வெளியிட்டுள்ளனர். அது முற்றிலும் பொய். எனது கட்சிக்குள் நான் கருத்து மோதலில் ஈடுபடுவேன். ஆனால் எதிர்க்கட்சி தலைவர் மீது மைக் வீசி தாக்குகிற அளவுக்கு நான்செல்லவில்லை. எதிர்க்கட்சி தலைவர் முன் யாருமே கை நீட்டி பேச மாட்டார்கள். அவ்வாறு இருக்கையில் நான் எவ்வாறு மைக் வீசி தாக்குவேன்” என வட மாகாண பிரதி அவைத்தலைவர் அன்ரனி ஜெகநாதன் தெரிவித்தார்.



‘முன்னாள் போராளிகளுக்கு விஷ ஊசி போடப்பட்டுள்ளது என அனைவரும் வாதம் புரிகின்றார்கள். அதனடிப் படையில், மருத்துவ பரிசோதனை நடத்தப்பட்டு, அது பொய் என நிரூபிக்கப்படுமாயின், அதன் பின்னர் தமிழர்கள் சொல்லும் அனைத்தும் பொய் என சர்வ தேசம் எண்ணும் நிலைமை ஏற்படும். எனவே, இவ் வாறான விடயங்களை நாம், மாகாண சபையில் பிரேரணை கொண்டு வந்து ஆர்ப்பரித்து செய்யக் கூடாது. இதனை மிகவும் இரகசியமான முறையில் மேற்கொண்டிருக்க வேண்டும்” என வடமாகாண சபையின் மாதாந்த அமர்வில், பாலசுப்பிரமணியம் டெனிஸ்வரன் கூறினார்.



நிறைய பயணப்படு. பயணங்களின் ஜன்னல்களே முதுகுக்குப் பின்னாலும் இரண்டு கண்களைத் திறக்கின்றன. புத்தகங்களை நேசி. ஒரு புத்தகத்தை தொடுகிறபோது நீ ஓர் அனுபவத்தைத் தொடுவாய். உன் பாட்டனும் தகப்பனும் புத்தகங்களின் காட்டில் தொலைந்தவர்கள். உன் உதிரத்திலும் அந்த காகித நதி ஓடிக்கொண்டே இருக்கட்டும். கிடைத்த வேலையைவிட பிடித்த வேலையைச்செய். இனிய இல்லறம் தொடங்கு. யாராவது கேட்டால் இல்லை எனினும் கடன் வாங்கியாவது உதவி செய். அதில் கிடைக்கும் ஆனந்தம் அலாதியானது. உறவுகளிடம் நெருங்கியும் இரு. விலகியும் இரு. இவ்வுலகில் எல்லா உறவுகளையும்விட மேன்மையானது நட்பு மட்டுமே. நல்ல நண்பர்களைச் சேர்த்துக்கொள். உன் வாழ்க்கை நேராகும். மறைந்த பிரபல தமிழ் திரைப்பட பாடலாசிரியர் நா. முத்துக்குமார், தனது மகனுக்கு ஒரு தந்தையாக எழுதிய கடிதம் ஒன்றை, தற்போது அவர் மறைவுக்கு பிறகு முகநூலில் பதிவேற்றம் (பகிர்ந்து) வருகிறார்கள்.



யாழ்ப்பாணம் உள்ளிட்ட வடக்கு கிழக்கில் சகல காணிகளையும் விடுவிப்பது சாத்தியமற்றது என பாதுகாப்பு அமைச்சின் செயலாளர் கருணாசேன ஹெட்டியாராய்ச்சி தெரிவித்துள்ளார். யாழ் காங்கேசன்துறையில் இடம்பெற்ற காணி விடுவிப்பு நிகழ்வின் பின்னர், ஊடகங்களிடம் கருத்து தெரிவிக்கையில் அவர் இவ்வாறு குறிப்பிட்டுள்ளார். இதன்போது, அவர் தொடர்ந்தும் குறிப்பிடுகையில், ‘முப்படையினரின் வசமுள்ள பொதுமக்களின் காணிகளை விடுவிப்பதற்கு நாங்கள் தொடர்ச்சியாக நடவடிக்கை எடுத்து வருகின்றோம். இன்று காணிகள் விடுவிக்கப்பட்டதைப் போன்று இன்னும் சில தினங்களில் மேலும் சில காணிகளை விடுவிக்கவுள்ளோம் என்றார்.



மலையகத்தில் அழிவுக்குள்ளாகி வரும் விவசாயக் காணிகளைப் பாதுகாப்பதற்குரிய ஐந்தாண்டுத் திட்டத்துக்கு அமைச்சரவை அங்க்கீகாரம் வழங்கியுள்ளது. மகாவலி அபிவிருத்தி மற்றும் சுற்றுச்சூழல் அமைச்சர் எனும் ரீதியில் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவினால் முன் வைக்கப்பட்ட யோசனைக்கே, அமைச்சரவை அங்கீகாரம் கிடைத்துள்ளது என ஊடகத்துறை அமைச்சர் கயந்த கருணாதிலக்க கூறினார்.



இலங்கை - இந்தியாவுக்கிடையே கைச்சாத்திடப்படவுள்ள வர்த்தக மற்றும் தொழில்நுட்ப ஒத்துழைப்பு ஒப்பந்தத்துக்கான (ETCA) அடுத்த கட்ட பேச்சுவார்த்தைகளில் பங்கெடுப்பதற்கு இந்திய அரசாங்கம் ஆவலுடன் எதிர்பார்த்திருப்பதாக இலங்கைக்கான இந்திய உயர்ஸ்தானிகர் வை.கே. சின்ஹா தெரிவித்தார்.


# அங்கும் இங்கும்

## நுளம்புக்கடிக்கு “செரமிக் கோப்பை” பரிசு

ரஷ்யாவில் 43 நுளம்புக்கடி வாங்கிய 9 வயது சிறுமி பரிசு பெற்ற வினோத சம்பவம் நடந்தது. நுளம்பு என்றாலே உலகம் முழுவதும் ஒருவித அலர்ஜியும், பயமும் நிலவுகிறது. முன்பு நுளம்பினால் மலேரியா நோய் பரவியது. தற்போது ‘ஜிகா’ எனும் கொடிய வைரஸ் நோய் பரவுகிறது.

ஆனால், நுளம்புக்கடியின் மூலம் ரஷ்ய சிறுமி ஒருவர் பரிசு வென்று இருக்கிறாள்.

ரஷ்யாவில் பெரிஷ்னிகி என்ற நகரில் நுளம்புத் திருவிழா சமீபத்தில் நடந்தது. அதிக நுளம்பு கடித்த வர்களுக்கு பரிசு வழங்கப்படும் என போட்டி அறிவிக்கப்பட்டிருந்தது. அதைத் தொடர்ந்து இரினா இலியுகினா என்ற 9 வயது சிறுமி போட்டியில் கலந்து கொண்டாள். அவள் 43 நுளம்புக்கடி பெற்றாள். இதன் மூலம் அதிக நுளம்புகளால் கடி பட்டவள் என்று அறிவிக்கப்பட்டு ‘செரமிக் கோப்பை’ பரிசு பெற்றாள்.



# ரெலோவுடன் ஈ.பீ.ஆர்.எல்.எப். உம் தடைசெய்யப்பட்டது

அவர்கள் கோண்டாவிலில் வீடு வீடாக தேடிக்கொண்டு வந்த போது ஸ்ரீ சபாரட்ணம் தங்கி இருந்த புகையிலைத் தோட்டத்தை வந்து சேர்ந்தார்கள்.

அங்கே வெட்டிப் போடப்பட்ட புகையிலை கும்பலுக்குள் ஸ்ரீ சபாரட்ணம் மறைந்திருந்ததைக் கண்டார்கள். அவ்வாறு மறைந்திருந்த ஸ்ரீ சபாரட்ணத்தை நோக்கி துப்பாக்கியால் சுட்டார்கள். முதல் குண்டு ஸ்ரீ சபாரட்ணத்தின் காலைப் பதம்பார்த்தது.

துப்பாக்கிச் சூட்டை அடுத்து ஸ்ரீ சபாரட்ணம் தள்ளாடி எழுந்து நின்று, அவரை கைது செய்ய வந்த விடுதலைப் புலிகளை தன்னை காப்பாற்றி உயிர்ப் பிச்சை தருமாறு கெஞ்சினார்.

"நீங்கள் ஓம் என்றால் நான் பிரபாகரனுடன் கதைக்கிறேன்," என்றார். அதுவே அவருடைய கடைசி வார்த்தைகளாக அமைந்தது.



## பிரபாகரனின் வாழ்க்கை வரலாறும் சமகால நிகழ்வுகளும்

விடுதலைப்புலிகளின் யாழ்ப்பாணத்திற்கான கட்டளைத் தளபதியான கிட்டு என்று அழைக்கப்படும் கிருஸ்ணகுமார் தனது ஏகே 47 துப்பாக்கியால் ஸ்ரீ சாபரட்ணத்தை நோக்கி துப்பாக்கி குண்டு மழை பொழிந்தார்.

அந்த ஸ்தலத்திலேயே ஸ்ரீ சபாரட்ணம் நிலைகுலைந்து இறந்து போனார். 28 துப்பாக்கி குண்டுகள் பாய்ந்த ஸ்ரீ சபாரட்ணத்தின் உடலை கொண்டு வந்து யாழ்ப்பாண பேருந்து நிலையத்தில் போட்டார்கள்.

வெற்றிகரமாக ஸ்ரீ சபாரட்ணத்தை ஒழித்துக் கட்டிய விடுதலைப்புலிகள், ஸ்ரீ சபாரட்ணம் இறந்த செய்தியை ஒலிபெருக்கியில் மிக மகிழ்ச்சியாக யாழ்பாணம் முழுவதும் அறிவித்தார்கள்.

ஸ்ரீ சபாரட்ணம் கொலை செய்யப்பட்ட பிற்பாடு இந்தியாவில் இருந்த பிரபாகரன் மிகவும் அமைதியாக இருந்தார். அந்தக் கொலை சம்பந்தமாக எந்தக் கருத்தும் தெரிவிக்க முன்வரவில்லை.

யாழ்ப்பாணக் கட்டளைத் தளபதியாக இருந்த கிட்டு தான் ஏன் இந்த கொலைகள் நடந்தது என்பதற்குரிய காரணத்தை சொல் முன்வந்தார்.

ஸ்ரீ சபாரட்ணம் கொலை செய்யப்பட்ட பிற்பாடு, மேடையில் ஏறி நின்று கொண்டு கிட்டு கொலைக்கான காரணத்தை உரத்த குரலில் கத்தினார். 'ரெலோ ஊடாக இந்தியா ஸ்ரீ லங்காவில் கால்களை பதிக்க வருகின்றது என்றும், இந்திய இராணும் இலங்கையில் கால் பதிப்பதனை தடுப்பதற்காகவே ஸ்ரீ சபாரட்ணம் கொலை செய்யப்பட்டான்" என்று யாழ்ப்பாணத்தில் சுவர்களில் எல்லாம் எழுதப்பட்டிருந்தன.

இந்த தகவல்கள் இந்திய பத்திரிகையில் வெளிவந்த போது, தாங்கள் இந்தியாவிற்கு எதிரானவர்கள் அல்ல, இந்தியாவுக்கு எதிரான பிரசாரங்களை தாங்கள் செய்யவில்லை என்று விடுதலை புலிகள் மறுத்தார்கள்.

இந்த மோதல் முடிவுற்ற பின்னர் இரு காரணங்களைக் கூறினார்கள் :

1. ரெலோ உறுப்பினர்கள் மக்களை துன்புறுத்தி கொள்ளையிட்ட குற்றவாளிகள்.
2. ரெலோ இந்தியாவின் ஏகாதிபத்தியத்தின் ஏஜென்ராக செயற்பட்டுக்கொண்டு இருக்கிறது.

இதனை உறுதிப்படுத்தும் வகையில் தாங்கள் மீட்ட நகைகள், கார்கள் என்பவற்றை உரியவர்களிடம் ஒப்படைப்பதாக அறிவித்தார்கள். உண்மையில் பல கார்களை, மோட்டார் சைக்கிளையும் ரெலோவினர் மக்களிடம் பறித்து பயன்படுத்தினார்கள்.

## அரசகேசரி

யாழ்ப்பாணம் ராணி படமாளிகைக்கு இப்பொழுது இந்த படமாளிகை இல்லை அருகே காட்சிக்கு வைக்கப்பட்டிருந்த திருடப்பட்டதாக கூறப்பட்ட தொலைக்காட்சி பெட்டிகள் வீடியோ பிளேயர்கள் (Player) மற்றும் பல சமைக்கும் பாத்திரங்கள் பொதுமக்களால் உரிமை கோரப்பட்டது. எந்தவிதமான பெறுமதியும் இல்லாத பொருட்களை கொடுத்தார்களே தவிர பெறுமதியான நகை கள் திருப்பி வழங்கப்படவில்லை. அதே வேளை தெல்லிப்பளை துர்க்கை அம்மன் கோவிலில் களவாடப்பட்ட நகைகளும் வைக்கப்பட்டிருந்தன.

இந்தச் சம்பவங்கள் நடந்து பத்து மாதத்திற்கு கொலைகள் எதுவும் நடைபெறாமலே ஈ.பி.ஆர்.எல்.எப். மீது தாக்குதல் தொடுக்க விடுதலை புலிகளுக்கு ஒரு வாய்ப்பு ஏற்பட்டது. ஈ.பி.ஆர்.எல்.எப். தலைவர் பத்ம நாபாக்கும் அதன் இராணுவ பிரிவின் தலைவர் டக்ளஸ் தேவானந்தாவுக்கும் இடையில் பிளவு ஏற்பட்டது. இந்த பிளவுவினால் ஈ.பி.ஆர். எல் எப். இரண்டாகாப் பிரிந்தது. ஒன்று பத்ம நாபா குழு, மற்றயது டக்ளஸ் தேவானந்தா குழு என்று பிரிந்தது.

1986 ஆம் ஆண்டு இறுதிப்பகுதியில் ஈ.பி.ஆர்.எல்.எப். மீது விடுதலைப்புலிகள் தாக்கினார்கள். ஈ.பி.ஆர்.எல்.எப். பல இழப்புக்களை சந்தித்தது. பல போராளிகள் கொல்லப்பட்டார்கள். மேலும் பல போராளிகள் சிறைக் கைதிகளாகப் பிடிபட்டார்கள். ஈ.பி. ஆர்.எல் எப். இன் பல முகாம்களையும் ஆயுதங்களையும் விடுதலைப் புலிகள் கைப் பற்றினார்கள்.

ஈ.பி.ஆர்.எல்.எப். இன் தோல்விக்கு டக்ளஸ் தேவானந்தா தான் காரணம் என்று குற்றம் சுமத்தப்பட்டது.

அதையடுத்து ஒலிபெருக்கி பூட்டப்பட்ட வாகனத்தில் எங்கும் சுற்றி வந்து விடுதலைப்புலிகள் நடந்தது பற்றி பேசி ஆராய வேண்டாம் என்று மக்களுக்குக் கூறினர். இதுவே விடுதலைப்புலிகள் அறிவித்த முதலாவது பேச்சு சுதந்திரத்தின் மீது விடுக்கப்பட்ட தணிக்கை யாகும்.

ஈ.பி.ஆர்.எல்.எப். இற்கு எதிராக போராடுவதற்கு முன் வந்ததற்குரிய காரணத்தை கிட்டு பத்திரிகையாளருக்கு விளக்குகையில் "யார் எல்லாம் புதுடெல்லியினால் வழி நடத்தப்படுகிறார்களோ அவர்கள் எல்லாம் விடுதலைப்புலிகளுக்கு எதிரிகள்" என்று கூறினார்.

முன்னர் ரெலோவினர் வெளியாட்களால் வழிநடத்தப்பட்டார்கள் அதே வெளியாட்களால் தான் இப்பொழுது ஈ.பி.ஆர்.எல். எப். வழிநடத்தப்படுகின்றது என்றார்.

இதற்கிடையில, ரெலோவினர் இறந்த பிற்பாடு சில காலத்திற்கு பின்னர் பிரபாகரன் மீண்டும் இந்தியப் பத்திரிகையாளர்களுக்கு அவரது சென்னைக் காரியாலயத்தில் வைத்து அறிக்கைகள், பேட்டிகள் கொடுக்க ஆரம்பித்தார்.

இவ்வாறு பத்திரிகைக்கு பேட்டி கொடுத்த பிரபாகரன் ஒரு சந்தர்ப்பத்தில் தமி ழீழ போராட்டம் ஒரு நீண்ட போராட்டமாக இருக்கும் என்று கூறினார். இந்த போராட்டத்திற்கு விரைவில் தீர்வு கிட்டாது. மேலும் நாங்கள் பிரியாத ஸ்ரீ லங்காவிற்குள் எங்கள் பிரச்சினைகளுக்கு தீர்வு காணும் நிலையை எப்போதோ தாண்டி விட்டோம்: ஈழம் தனி ஈழம் என்ற நிலைப்பாட்டில் இருந்து பின்வாங்க தயாராக இல்லை" என்றும் கூறினார்.

மேலும் அவர் தமிழீழம் பற்றிக் குறிப்பிடுகையில் "தமிழீழம் ஒரு சோஷலிச அரசாக அமையும். அங்கே ஒரே ஒரு அரச கட்சியை மக்கள் ஆதரிக்க வேண்டும். பல கட்சி ஜனநாயகத்தை நான் எதிர்கின்றேன். ஒரு ஆட்சியில் தான் ஈழத்தை மிக விரைவில் முன்னேற்ற முடியும். ஒரு சோஷலிச அரச அமைப்பில் மக்கள் தேவைக்கு முக்கியத்துவம் வழங்க முடியும்," என்று கூறினார்.

மேலும் ஒரு பத்திரிகையாளர், நாடாளுமன்ற தமிழீழ ஜனநாயக கட்சி முறை ஆட்சியில் இருக்கிறதா? என்ற கேள்விக்கு பதிலளிக்கையில் "இல்லை இது மக்கள் ஜனநாயக அமைப்பு யூகோஸ் செலாவியாவிய அரசாங்கம் போன்றது. அங்கேயே தனி கட்சி ஒன்றைத் தான் மக்கள் தெரிவு செய்வார்கள்."

ஸ்ரீ சபாரட்ணம் கொல்லப்பட்டதற்கு ஈ.பி.ஆர். எல்.எப். மாத்திரமே ஒரு எதிர்ப்பு ஊர்வலத்தை நடத்த துணிவு பெற்று இருந்தது. ஆனால் ஈரோஸ் மௌனம் சாதித்தது. இந்தத் தாக்குதலை அடுத்து விடுதலைப் புலிகள் ஈ.பி.ஆர்.எல்.எப். இனை இலங்கையில் தடை செய்வதாக அறிவித்தார்கள். இந்த அறிவித்தல்களுடன் மேலும் களத்தில் இருந்த 20 மாற்று இயக்கங்களும் தடை செய்யப்பட்டன.

ஈரோஸ் மாத்திரம் தடை செய்யப்படாமல் விடுதலைப் புலிகளின் அணைவில் இயங்கியது.



சிறீசபாரத்தினம்

# தெய்வங்கள் தோற்கும் தந்தையின் பாசம்!



'வெயிலோடு விளையாடி வெயிலோடு உறவாடி வெயிலோடு மல்லுக்கட்டி ஆட்டம் போட்டோமே...' என எழுதியவர் நா.முத்துக்குமார். அவர் ஒரு வெயில் பிரியர். 'மழை மட்டுமா அழகு எனக் கேட்டுவிட்டு, சுடும் வெயில்கூட ஓர் அழகு' என வெயிலை சிபாரிசு செய்தவர். இயற்கையை வர்ணிப்பதில் ஓரவஞ்சனை இல்லாத ஒப்பற்ற எழுத்துக்குச் சொந்தக்காரர் அவர்.

திரைப்படங்களுக்குப் பாடல் எழுதத் தொடங்கி இருபது ஆண்டுகளில் இரண்டு தேசிய விருதுகள். 'ஆனந்த யாழை மீட்டுகிறாய்' என 'தங்க மீன்கள்' படத்துக்காக எழுதிய பாடலுக்கும் ஹஅழகே அழகே எதுவும் அழகே' என 'சைவம்' படத்துக்கு எழுதிய பாடலுக்கும் அவருக்கு தேசிய விருதுகள் கிடைத்தன.

காஞ்சி மாவட்டத்தின் கன்னிகாபுரத்தில் ஒரு தமிழாசிரியரின் மகனாகப் பிறந்த நா.முத்துக்குமார், சிறுவயதிலேயே தாயை இழந்தவர். தாயுமான தந்தையின் கைப்பிடித்து வளர்ந்தவர். உணவோடு இலக்கியம் ஊட்டி வளர்க்கப்பட்டவர். அப்பாவின் சேகரிப்பில் ஒரு லட்சம் புத்தகங்களுக்கும் மேல் வீட்டில் இருந்ததாக முத்துக்குமார் பலமுறை பதிவுசெய்திருக்கிறார். தந்தையின் மீது அவர் வைத்திருந்த பாசம் பல பாடல்களில் வெளிப்பட்டது. 'தெய்வங்கள் எல்லாம் தோற்றே போகும் தந்தை அன்பின் முன்னே' என எழுதினார்.

சினிமாவுக்குப் பாடல் எழுதும் ஆசை அவருக்குப் பெருங்கனவாக இருந்த நேரத்தில் மெட்டுக்குப் பாட்டெழுதும் கலையைக் கற்றுத்தந்தவர் கவிஞர் அறிவுமதி. திரைத்துறையினரின் அறிமுகமும் அறிவுமதியால் சாத்தியமானது. 'கணையாழி' இதழுக்குக் கவிதை தேர்வு செய்துதரும் பொறுப்பில் இருந்த எழுத்தாளர் சுஜாதா, இவருடைய 'தூர்' என்கிற கவிதையைச் சிலாகித்துப் பேசினார், எழுதினார். முத்துக்குமாரை வெளிச்சத்துக்குக் கொண்டு வந்தது சுஜாதாவின் வாழ்த்து. இயக்குநர் சீமான், தனது 'வீரநடை'யில் திரை அறிமுகம் தந்தார். இயக்குநர் பாலுமகேந்திரா, பேச்சாளர் பெரியார்தாசன் போன்றவர்கள் இவரை மேடைகள்தோறும் பாராட்டினார்கள்.

திரைப்படங்களான 'வாரணம் ஆயிரம்', 'கிரீடம்' போன்ற படங்களில் அவருடைய வசனத்துக்காகப் பாராட்டுப் பெற்றன. பட்டாம் பூச்சி விற்பவன், தூசிகள், நியூட்டனின் மூன்றாம் விதி போன்ற கவிதைத் தொகுப்புகளும் சில்க் சிட்டி என்ற நாவலும் அவருடைய எழுத்து ஆளுமைக்குச் சான்றுகள்.

மூன்றாண்டுகளுக்கு முன்பு அவரை அமெரிக்காவுக்கு ஒரு தமிழ் அமைப்பின் விழாவுக்காக அனுப்ப முயற்சிகள் மேற்கொண்டேன். ஆரம்பத்தில் எல்லாம் சரியாகத்தான் போனது. ஆனால் அந்த அமைப்பின் அரைவேக்காடுகள் சில படுத்தியபாட்டில் மிகக் கோபமாகி, நானே என் சொந்த செலவில் அமெரிக்கா போகிறேன். ஆனால் அந்த நிகழ்ச்சியில் மட்டும் கலந்து கொள்ள மாட்டேன், என்று கோபத்துடன் விமானம் ஏறினார். அவருக்கும் அந்த அமைப்புக்குமான மோதலை கேள்விப்பட்ட முன்னணி புலனாய்வு இதழ் உடனே அதை அட்டைப்படக் கட்டுரையாக்க முனைந்தது. முத்துக்குமாரிடம் இதுகுறித்து ஆசிரியர் கேட்டபோது, "எனக்கு அவங்க மேல கோபம் இருப்பது உண்மைதான். ஆனால் அதைச் செய்தியாக்க வேண்டாம். புலம் பெயர்ந்து வாழ்கிறார்கள். தமிழைப் பரப்ப முயல்கிறார்கள். அதில் பக்குவமில்லாமல் ஏதோ செய்துவிடுகிறார்கள். இதற்காக தாயகத்தில் உள்ள நாம் கோபப்பட்டு அவர்களை அசிங்கப்படுத்தலாமா.. விட்டுவிடுவோம்," என்று கூறிவிட்டார். அந்த கசப்பான அனுபவத்திலிருந்து அவரை மீட்க வேண்டும் என்பதற்காகவே, சில மாதங்களுக்கு முன்பு அவருக்கு இன்னொரு அமெரிக்கப் பயணத்துக்கு ஏற்பாடு செய்தோம். இங்கே நான். அமெரிக்காவில் நண்பர் தினகர், சித்ரா மகேஷ் மற்றும் நண்பர்கள். இந்த முறை அவரது பயணத்துக்கு ஒரு உன்னத நோக்கம் இருந்தது. ஹார்வர்டு பல்கலைக் கழகத்தில் அமையவிருக்கும் தமிழ் இருக்கைக்கான நிதி திரட்டல் நிகழ்ச்சியில் அவர் பங்கேற்றுப் பேசினார். அவரது அந்த வருகை அந்த நிகழ்ச்சி சிறக்க மிகவும் உதவியது. அமெரிக்காவில் அவரைச் சந்திக்க வாய்ப்புக் கிடைத்த நண்பர்கள் அத்தனைப் பேரும் முத்துக்குமாரின் எளிமையை, பழகும் குணத்தை அப்படி வியந்தனர்

வளரும் எழுத்தாளர்கள், கவிஞர்களை முளையிலேயே நசுக்க வேண்டும் என்ற எண்ணம் கொண்ட பெருங்கவிஞர்களுக்கு மத்தியில், அவர்களைத் தட்டிக் கொடுத்து உற்சாகப்படுத்தும் வழக்கம் கொண்டவர் நா முத்துக்குமார்.

. நான் ஒரு கவிஞன்... இப்படித்தான் என் தோற்றம் இருக்க வேண்டும் என தனக்கு வெளியே போலியான பிம்பத்தை உருவாக்க முனைந்ததில்லை. மக்களில் ஒருவராக மக்கள் கவிஞராக வாழ்ந்தவர் நா முத்துக்குமார். ஆராய்ச்சிப் படிப்பை முறையாக முடித்து முனைவர் பட்டம் பெற்ற ஒரே தமிழ் சினிமா பாடலாசிரியர் முத்துக்குமார்

கவிஞர்களை சாகடிக்க மரணம் தொடர்ந்து போராடுகிறது. பாரதி, பட்டுக்கோட்டை கல்யாண சுந்தரம் எனப் பல நல்ல கவிஞர்கள் அற்ப வயதுகளில் இறந்துபோனார்கள். 41 வயதைத் தொட்ட அவரது வாழ்க்கை தொடர அனுமதிக்கவில்லை இயற்கை. நல்ல கவிஞர்களுக்கு அற்ப ஆயுள் என இலக்கணம் ஏற்பட்டுவிடக் கூடாஎன்பதுதான் நம் அச்சம்!

**எஸ். ஷங்கர்**



## திரை உலகை தொடர் அதிர்ச்சியில் ஆழ்த்தும் மரணங்கள்!

ஓகஸ்ட் 4 - தமிழ் சினிமா தயாரிப்பாளர் டி.எஸ்.சேதுராமன் . மாரடைப்பால் மரணம் அடைந்தார்.

ஓகஸ்ட் 6 - திரைப்பட இயக்குனர், வசனகர்த்தா 'வியட் நாம் வீடு சுந்தரம்". உடல் நலக் குறைவால் காலமானார்.

ஓகஸ்ட் 8 - நடிகை ஜோதிலட்சுமி . இரத்தப்புற்று நோயால் காலமானார்.

ஓகஸ்ட் 9 - திரைபடத் துறையின் பல் துறை வித்தகர் பஞ்சு அருணாசலம்.

ஓகஸ்ட் 10 - இயக்குனர் சசி சங்கர் . மாரடைப்பால் காலமானார்


ஓகஸ்ட் 14 - கவிஞர் நா . முத்துக்குமார். மிகக் குறைந்த வயதில் மஞ்சக்காமாலை



ஜோதிலட்சுமி




சசி சங்கர்




பஞ்சு அருணாசலம்



வியட் நாம் வீடு சுந்தரம்





## வாரமொரு குறள்

*குறள் 43*

*தென்புலத்தார் தெய்வம் விருந்தொக்கல் தானென்றாங்கு*
*ஐம்புலத்தாறு ஓம்பல் தலை.*

**பொருள்**

வாழ்ந்து மறைந்தோரை நினைவுகூர்தல், வாழ்வாங்கு வாழ்வோரைப் போற்றுதல், விருந்தோம்பல், சுற்றம் பேணல் ஆகிய கடமைகளை நிறைவேற்றத் தன்னை நிலைப்படுத்திக் கொள்ளல் எனப்படும் ஐவகை அறநெறிகளும் இல்வாழ்வுக்குரியனவாம்.

## ஆறு வித்தியாசங்கள்





ஆறு வித்தியாசங்களை
கண்டு பிடித்து

**தினச்செய்தி**
தில்லைக்கட்டி வீதி,
சுன்னாகம்.

எனும் முகவரிக்கு எழுதி
அனுப்பி வையுங்கள்.


## வேறு கோள்களில் உங்கள் வயது?

ஒரு நாள் என்பது, 24 மணி நேரம்தான் என்பது நம் எல்லோருக்கும் தெரியும். ஆனால், சூரியக் குடும்பத்தில் பிற கோள்களுக்கு ஒரு நாள் என்பது 24 மணி நேரம் இல்லை. ஒரு கோள் தன்னைத்தானே சுற்றிக்கொள்ள எடுத்துக்கொள்ளும் நேரமே, அந்தக் கோளின் ஒரு நாள் எனப்படுகிறது. ஒவ்வொரு கோளும் தன்னைத்தானே சுற்றிக்கொள்ள ஆகிற நேரம் பற்றிய விவரத்தைப் பார்ப்போம்...

பூமி 24 மணி நேரம், செவ்வாய் 25 மணி நேரம், வியாழன் 10 மணி நேரம், சனி 11 மணி நேரம், யுரேனஸ் 17 மணி நேரம், நெப்டியூன் 16 மணி நேரம், புதன் 1,408 மணி நேரம், வெள்ளி 5,832 மணி நேரம்

**ஜாலியா ஒரு கணக்கு விளையாட்டு**

பூமியில் ஒரு நாளைக்கு 24 மணி நேரம். ஒரு வருடம் என்பது 365 நாட்கள். ஒருவருடைய வயது என்பது பிறந்து எத்தனை வருடங்கள் ஆகின்றன என்பதை வைத்துக் கணக்கிடுகிறோம். அதேபோல வேறு கோள்களில் உங்களின் வயது என்னவாக இருக்கும்?! கண்டுபிடித்து மகிழுங்கள்!



## பறந்து பறந்து இரை தேடும்

எல்லாப் பறவைகளும் பறப்பதே இல்லை. எடுத்துக்காட்டாக நெருப்புக் கோழியால் பறக்கவே முடியாது. கோழியால் தத்தித்தத்தியே பறக்க முடியும். அதே சமயத்தில் 'ஆல்பட்ராஸ்' எனும் அண் டரண்டப் பறவை, காற்றின் மேல் நோக்கிய வீச்சைப் பயன்படுத்தி உயரே ஆகாயத்தில் மிதந்தபடி இருக்கும். அப்போடிடே (Apodidae) என்ற குடும்பத்தைச் சேர்ந்த உழவாரக் குருவி அல்லது உழவாரன் (Swift bird) பறவையானது, பறந்து கொண்டே அதன் உணவைப் பிடிக்கும் பழக்கம் கொண்டது. விமானம்போல கீழ்நோக்கிச் சென்று சிறு பூச்சிகளை லாகவமாகப் பிடித்து உண்ணும் திறமை கொண்டது. இந்தப் பறவைகள் இனப்பெருக்கம் செய்வதற்கு மட்டுமே தரையைச் சென்று அடையும். மற்ற நேரங்களில், நீரில் மீன்கள் மூழ்கிவிடாமல் மிதப்பதைப்போல, காற்றில் மிதந்தபடி பல மாதங்கள் வரை பறந்தபடியே இருக்கும்.

## மழைக் காலம்



குடை பிடித்துச் செருப்புமிட்டுப்
புத்தகமுங் கொண்டு
குடுகுடென நடந்து வரும்
குழந்தைகளே கேளீர்

மழைக் காலம் வழி வழுக்கும்
மிகக் கவனம் மக்காள்
வழியருகே வெள்ளமுண்டு
விலகி வரல் வேண்டும்

வெள்ளத்தில் கல்லெறிந்து
விளையாடல் வேண்டாம்
வீண் சண்டையால் வழுக்கி
விழுந்தெழும்ப வேண்டாம்

கண்மணிகாள் நீர்ச்சிரங்கு
காலில் வரும் கவனம்
கண்ணுறக்கம் இன்றியிராக்
கத்த வரும் கவனம்



# குறுக்கெழுத்துப் போட்டி - 16

## குறுக்கெழுத்துப் போட்டி இல. 16

| | | | | | |
|---|---|---|---|---|---|
| 1 | | 2 | | ■ | 3 |
| | ■ | | ■ | 4 | |
| ■ | 5 | | 6 | ■ | |
| 7 | | ■ | 8 | | ■ |
| | ■ | 9 | | ■ | 10 |
| | ■ | | ■ | 11 | |

குறுக்கெழுத்துப் போட்டியின் சரியான விடைகளை எழுதி தபால் அட்டையில் ஒட்டி உங்கள் பெயர், முகவரியுடன் செப். 01 ஆம் திகதிக்கு முன்னர் எமது முகவரிக்கு அனுப்பி வைக்கவும். சரியான விடை எழுதிய ஐந்து அதிர்ஷ்டசாலிகளின் பெயர் 03.09.2016 ஆம் திகதி வாரமலரில் பிரசுரமாகும்.

**இடமிருந்து வலம்**

1. மழை காலத்தில் வானில் தோன்றுவது.
4. இது வலியது.
5. விஜயின் படம்.
7. பணம்.
8. கர்ணனின் சிறப்பு.
9. சாதுவான மிருகம்.
11. அச்சம்.

**மேலிருந்து கீழ்**

1. காற்று வகையில் ஒன்று.
2. வாயால் எழுப்பும் ஒலி.
3. வீட்டைச் சுற்றிக் கட்டுவது.
5. நாடகம், சினிமா ஆகிவற்றில் புகழ் பெற்றவர்.
6. காலை அலங்கரிப்பது. (குழம்பியுள்ளது)
7. உடம்பு.
9. மார்கழியில் இது அதிகம்.
10. பூனையின் எதிரி.

**வருந்துகிறோம்**

கடந்த வாரம் பிரசுரமான 15 ஆம் இலக்க குறுக்கெழுத்துப் போட்டியின் மேலிருந்து கீழ் 5 ஆம் இலக்கக் கேள்வி பிரசுரமாக வில்லை.

5. விரைவு.

**குறுக்கெழுத்துப்போட்டி - 14 இன் விடைகள்**

**இடமிருந்து வலம்**

1. கங்காரு
4. தேன்
6. வான்
7. மல்லிகை
8. வா
9. கலி
11. சங்கிலி

**மேலிருந்து கீழ்**

1. கணை
2. காடு
3. மான்
4 தேன்
5. அல்லி
6. வாலி
7. மகன்
10. கிளி

**சரியான விடையை எழுதியவர்கள்**

1. எல். மணாளன், கோப்பாய்.
2. ஆர் சிவராசா, கொல்லங்கலட்டி, தெல்லிப்பளை.
3. என். சர்மிலா, பிரதான வீதி, கொச்சிக்கடை.
4. பீ. சனுஜா, ஒலுவில்.
5. இ. பிரகாஷ், இணுவில் மேற்கு.

**அனுப்ப வேண்டிய முகவரி:**

பெயர் : ……………………………………

முகவரி : ……………………………………

……………………………………

**குறுக்கெழுத்துப் போட்டி இல. 16**
**தினச்செய்தி வாரமலர்,**
**தில்லைக்கட்டி வீதி,**
**சுன்னாகம்.**

# அரசகேசரியின் பதில்கள்



**கேள்வி : காணாமல் போனோர் அலுவலகம் இலங்கை மீதான கரும் புள்ளியை நீக்குமா?**

ப. மனோகரன், வவுனியா.

பதில் : இப்போதைக்கு எதுவும் சொல்ல முடியாது. ஆரம்பத்தில் ஆஹா, ஓஹோ என்பார்கள். பின்பு போ போ என்பார்கள்.

**கேள்வி: முன்னாள் போராளிகளுக்கு விஷ ஊசி ஏற்றப்பட்டதாக குற்றம் சுமத்தப்பட்டிருக்கும் நிலையில் அதனைக் கண்டரிவதற்கு அமெரிக்க வைத்திய நிபுணர்கள் உதவத்தயாராக இருப்பதாக இலங்கைக்கான அமெரிக்கத் தூதுவர் கூறியுள்ளார். இதனை இலங்கை அரசாங்கம் ஏற்குமா?**

டி. டானியல் தலைமன்னார்.

பதில்: வெளிநாட்டு வைத்தியர்கள் தேவை இல்லை யாழ்ப்பாண மருத்துவர்களால் உண்மையைக் கண்டரிய முடியும் என அமைச்சரவைப் பேச்சாளர் டாக்டர் ராஜித சேனாரத்ன கூறியுள்ளார்.

**கேள்வி : பல்கலைக் கழகங்களில் பகிடிவதையை முற்றாக ஒழிக்க முடியாதா?**

நி.சீலன், திருகோணமலை.

பதில் : மிகவும் கஷ்ரம் பல்கலைக் கழக பாரம்பரியத்தில் ஊறிப்போன பகிடிவதையை மிக இலகுவில் நிறுத்த முடியாது.

**கேள்வி : ஐநாவின் அடுத்த செயலாளராக பெண் ஒருவர் வரவேண்டும் என ஐநாவின் இன்றைய செயலாளர் பான் கி மூன் விரும்புகிறார். இது சாத்தியமா?**

நி.விமலன்.புதுக்குடியிருப்பு.

பதில் : ஐநா செயலாலர் பதவியில் இதுவரை பெண் ஒருவர் இருந்ததில்லை. தகுதையான பெண்ஒருவருக்குச் சந்தர்ப்பம் கொடுக்கலாம் தானே.

**கேள்வி: எதியோப்பியா ஜமேக்கா,கென்யா போன்ற வறிய நாடுகள் ஒலிம்பிக்கில் தங்க வேட்டையாடுவதன் மர்மம் என்ன?**

கி, நிர்மலன். யாழ்ப்பாணம்.

பதில் : அங்குள்ள மக்கள் விளையாட்டில் அதிக ஆர்வம் காட்டுகிறார்கள்.

**கேள்வி : நல்லிணக்க பொறி முறைக்கு வழுங்கப்படும் ஆலோசனைகளுக்கு என்ன நடக்கும்?**

ரா. இம்ரன், கொழும்பு 12.

பதில் : அது. சந்திரிகா அம்மையாருக்குத்தான் வெளிச்சம்.

**கேள்வி: தமிழ் அரசியல் கைதிகளின் விருதலை தொடர்பான போராட்டங்களுக்கு என்ன நடந்தது?**

சி.பத்மராணி, ஓமந்தை.

பதில் : தொடர்ந்து நடைபெறுகிறது இதுவரை எந்த முடிவும் எடுக்கப்படவில்லை.

**கேள்வி : 41 தொகுதிகளில் உள்ள அமைப்பாளர்களை மாற்றி விட்டு புதிய அமைப்பாளர்களை ஸ்ரீலங்கா சுதந்திரக்கட்சியின் தலைமைப்பீடம் நியமித்ததன் பின்னணி என்ன?**

யு.கோகில, தெல்லிப்பழை.

பதில் : கூட்டு எதிர்க்கட்சியின் தலைமைப் பீடத்தை பலவீனப்படுத்தும் நடவடிக்கை.

**கேள்வி : கவிஞர் முத்துக்குமாரின் மரணம் எதை உணர்த்துகிறது.**

சி .அரவிந்தன், கண்டி

பதில் : புகழ் பெற்ற கவிஞராக இருந்தும் அவரது திறமைக்கு ஊதியமாக கொடுக்கப்பட்ட காசோலை மக்கிப் போய்விட்டது. ரூபா 80 இலச்சத்திற்கும் அதிகமான பெறுமதி உடைய காசோலைகள் கவிஞரின் அலுமாரியில் துங்குகின்றன.

அரசியல், சினிமா,
விளையாட்டு சம்பந்தமான உங்கள் கேள்விகளை தபால் அட்டையில் எழுதி அனுப்பவும்.
*கேள்விகளை அனுப்பவேண்டிய முகவரி*
அரசகேசரி
தினச்செய்தி
*தில்லைகட்டிவீதி,*
*சுன்னாகம்.*

## ஆட்டி, ஆட்டி, ஆட்டி



ஒரு கிராமத்தின் ஒதுக்குப்புறமான இடத்தில் சீவல் தொழிலாளியும், மனைவியும் வாழ்ந்து வந்தார்கள். பிள்ளைகள் கிடையாது. வீட்டின் முன்பாக உள்ள வெற்றுக்காணியில் சிறு தோட்டம் விவசாயமும் செய்து வந்தார்கள். அதில் சிறு தானியப்பயிர்கள் நட்டு அதன் வருமானத்திலும் தமது வாழ்வாரத்தையும் பெருக்கி வந்தார்கள். சீவல் தொழிலாளியோ சரியான முன் கோபக்காரன். அவனது மனைவி அவனுக்கு பயந்து அவன் சொற்படியே காலத்தைப் போக்கி வந்தான். தோட்டத்துக்குப் பக்கத்தில பனை மரங்கள் நின்றன. அவைகளில் ஒவ்வொரு நாளும் கள் எடுத்து வருவது வளக்கம்.

ஒரு நாள் அவன் மரத்தில் ஏறி நிற்கவும் ஒரு ஆடு வந்து அவனின் தோட்டத்தில் புகுந்து பயிர்களை மேய்ந்து கொண்டிருந்தது. இதனை பனையில் இருந்த சீவல் தொழிலாளி கண்டு விட்டான். உடனே தனது மனைவிக்கு கேட்கும் வண்ணம் ஆட்டி, ஆட்டி,ஆட்டி என்று மேலே நின்று கத்தினான். இதைக் கேட்ட மனைவி இவன் ஆடச்சொல்லுறானோ ஆடாவிட்டால் கீழே வந்து அடிப்பானே என எண்ணி வீட்டு முற்றத்திலே வந்து நின்று ஆடத்துவங்கினாள். மேலே இருந்து இவள் ஆடுவதைப் பார்த்த கணவனுக்குக் கோபம் வந்தது. கிடு கிடு என இறங்கி வந்து நாலு சாத்துச் சாத்தி நான் ஆடு மேயுது அதைக்கலைக்கச் சொன்னால், நீ டான்சா ஆடுகிறாய் என மேலும் நன்ாகு அடி போட்டான். ஆடிக் களைத்தவள் ஆடி ஆடி சுருண்டு விழுந்தாள் முற்றத்தில்.

வ.நடராசா

## 5 காசுக்கு ரூ.5 லட்சம் செலவு!



டெல்லி அரசு போக்குவரத்து கழகத்தில் கண்டக்டராக வேலை பார்த்து வந்தவர் ரன்வீர்சிங் யாதவ். இவர், 1973-ம் ஆண்டு பஸ்சில் பணியில் இருந்தார். அப்போது திடீரென டிக்கெட் பரிசோதகர்கள் பஸ்சில் ஏறி சோதனையிட்டனர்.அந்த பஸ்சில் பயணம் பயணி ஒருவர் 15 காசு கொடுத்து டிக்கெட் வாங்கினார். அந்த இடத்துக்கு செல்ல 10 காசுதான் கட்டணமாகும். ஆனால், கண்டக்டர் ரன்வீர்சிங் 15 காசு வசூலித்து 10 காசுக்கு மட்டும் டிக்கெட் கொடுத்து இருந்தார். மீதி 5 காசை தான் வைத்துக் கொண்டார். இதை பரிசோதகர்கள் கண்டுபிடித்தனர். இதையடுத்து துறை ரீதியான விசாரணை நடந்தது. இதில் அவர் குற்றம் செய்தது உறுதி செய்யப்பட்டது. இதனால் அவர் பணியில் இருந்து நீக்கப்பட்டார் செய்யப்பட்டார்.பணி நீக்கத்தை எதிர்த்து ரன்வீர்சிங் தொழிலாளர் கோர்ட்டில் வழக்கு தொடர்ந்தார். 1990-ம் ஆண்டு இதன் மீது தீர்ப்பு கூறப்பட்டது. ரன்வீர்சிங்குக்கு சாதகமாக தீர்ப்பு வந்தது.ஆனால், டெல்லி அரசு போக்குவரத்து கழகம் இந்த தீர்ப்பை எதிர்த்து ஐகோர்ட்டில் அப்பீல் செய்தது. இதன் இடைக்கால தீர்ப்பில் ரன்வீர்சிங்குக்கு அரசு போக்குவரத்து கழகம் வழங்க வேண்டிய ரூ.6 லட்சம் பணிக்கொடை மற்றும் பல்வேறு பயன்பாடுகளை வழங்கும்படி கோர்ட்டு கூறியது.இந்த வழக்கு 41 ஆண்டுகளாக நீடித்து வருகிறது. தற்போது ரன்வீர் சிங்குக்கு 73 வயது ஆகிறது. இந்த வழக்குக்காக ரன்வீர்சிங்கும், அரசு போக்குவரத்து கழகமும் சேர்ந்து ரூ. 5 லட்சம் வரை செலவு செய்துள்ளனர். ஆனாலும் 5 காசு பிரச்சினைக்கு இன்னும் முடிவு ஏற்படவில்லை.

## பாம்புக்கு வைத்தியம் செய்த மன்னன் புத்ததாசன்




புத்ததாசன் நல்லியல்புகளை உடைய ஒரு மன்னன். நற்பண்புகளை அணிகலன்களாகக் கொண்ட புத்ததாசன், போதிசத்துவ வழிபாட்டையும், வாழ்க்கைநெறிகளையும் கைக்கொண்டு மக்களுக்கு வழிகாட்டியாகவும் விளங்கினான். மருத்துவக்கலையில் வல்லமையாக இருந்தமையினால் தன் குடிமக்களுக்கும் உயிரினங்களுக்கும் சிகிச்சைகள் புரிந்து குணப்படுத்தினான். அவனின் மருத்துவ அறிவை விளக்கும் பொருட்டு நம்பகமற்ற கதைகள் பலவற்றினை சூளவம்சம் கூறுகின்றது.

ஒரு நாள் தன் யானையில் ஏறி, திஸ்ஸவாவியில் நீராடும் நோக்கோடு வந்து கொண்டிருந்தபோது புத்தகாயா விகாரைக்கு அருகில் ஒரு கறையான் புற்றின் மேல், வயிற்று நோயால் (ஜநாகரோகம்) பாதிக்கப்பட்டு வயிறு வீங்கிய பெரிய சர்ப்பம் ஒன்று கிடந்தது. அதனைச் சுகப்படுத்த விரும்பிய மன்னன். யானையை விட்டு இறங்கி அதன் அருகில் வந்து, "சர்ப்பமே உனது நோயை ஆற்ற விரும்புகிறேன். ஆனால் நீயோ என்னைத் தீண்டிவிடலாம் என அஞ்சுகிறேன்" என்று கூறினான். அதனைச் செவிமடுத்த சர்ப்பம், தன் தலையைக் கறையான் புற்றுக்குள் நுழைத்துக் கொண்டு வயிற்றுப் பகுதியை பட்டும் வெளிக்காட்டியது.

மன்னன் கத்தியினால் அதன் வயிற்றில் கீறி அறுவை செய்து, சீழ் முதலானவற்றை வெளிப்போக்கி மருந்திட்டு கட்டிவிட்டான். சர்ப்பத்தின் நோய் தீர்ந்தது. அதற்குப் பரிசாக அச்சர்ப்பம் தனது நாகமணியை மன்னனுக்கு வழங்கியது. மன்னன் அதனை அபயகிரி விகாரையின் புத்த சிலையின் ஒரு விழியாகப் பதிப்பித்தான்.

# தங்க வேட்டை



ஒலிம்பிக்கின் " தங்க வேட்டை நாயகன் " என் வர்ணிக்கப்படும் மைக்கேல் பெல்ப்ஸ் ரியோ ஒலிம்பிக்கில் மேலும் 5தங்கபதக்கங்களை வென்று தனது தங்க வேட்டையை 23ஆக உயர்த்தியுள்ளார்.

அமெரிக்காவை சேர்ந்த நீச்சல் வீரரான இவர் அதிக தங்கபதக்கம் பெற்ற வீரராக திகழ்கிறார். 400மீற்றர் நீச்சல் போட்டியில் இவர் இந்த சாதனையை படைத்தார்.

சுவிட்லாந்து நாட்டை சேர்ந்த Heioi Diethelm Gerber ரியோடி ஜெனிரோவில் இடம் பெற்று வரும் ஒலிம்பிக் துப்பாக்கி சுடும் போட்டியில் வெண்கல பதக்கத்தை சுவீகரித்துள்ளார்.

# புரட்சி நாயகர்



இலத்தீன் அமெரிக்காவின் புரட்சியின் சின்னமாக திகழும் பிடல்காஸ்ரோ மேற்குலகின் முதலாவது பொதுவுடமை அரசாக கியூபாவை உருவாக்கினார். 1959 கியூபா அரசு தலைவராக பொறுப்பேற்றார்.

1957-1958 காலப் பகுதியில் இயக்கத்தை ஆரம்பித்த காஸ்ட்ரோ கிராமபுறங்களை அடித்தளமாக கொண்டு கெரில்லா பாணியிலான புரட்சிகர செயற்பாடுகளை தீவிரமாக முன்னெடுத்தார். 82 தோழர்கள் மாத்திரம் ஆரம்பத்தில் இவரது இயக்கத்தில் இணைந்திருந்தமை வியப்பிற்குரியதாகும். உலக புரட்சி நாயகர் "சேகுவேரா" இவருடன் இணைந்து செயற்பட்டமை இவரது போராட்டத்திற்கு வலுச் சேர்த்தது.

# பாக்ஃகிறிக்கட் வீரர் மரணம்




டெஸ்ட் கிரிக்கட் போட்டியில் நீண்ட இனிங்ஸ் வீரரும், பாகிஸ்தானின் முன்னாள் துடுப்பாட்ட வீரருமான ரனீஸ் முஹம்மது கராச்சியில் உள்ள மருத்துவ மனை ஒன்றில் உயிரிழந்தார். அவரது வயது 81.

1958ம் ஆண்டு மேற்கிந்திய தீவுகள் அணிக்கு எதிராக பிறிட்சவுனில் நடந்த போட்டியில் ரனீஸ் முஹம்மது 10 மணித்தியாலங்கள் விளையாடி 337 ஓட்டங்களை குவித்தார்.

இந்தியாவில் பிறந்த ரனீஸ் முஹம்மது குழந்தைப் பருவத்திலேயே கராச்சிக்கு சென்றுவிட்டார். 1952ல் தான் பிறந்த இந்தியாவுக்கு எதிராக தனது 17வது வயதிலே களம் இறங்கினார்.

# எது உயரம்



உலகின் உயரமான மலை எது வென்றால் எவரெஸ்ட் என்றே பொதுவாக கூறுவார்கள். ஆனால் உண்மை அதுவல்ல. ஒலிம்பஸ் வோள்ஸ் என்பது செவ்வாய் கிரகத்தில் காணப்படும் மிகப் பெரிய மலையாகும். இது 21900மீற்றர் (71800 அடி) விட்டம் கொண்டது.

சூரியக் குடும்பத்திலேயே மிகப்பெரிய மலையாக இது கருதப்படுகின்றது. இதனை விட "ரெசில்வியா" என அழைக்கப்படும் மலையானது வோள்ஸ் மலையை விட 100 மீற்றர் மட்டுமே உயரமுடையதாகும். சூரியக்குடும்பத்தில் உள்ள மிகச் சிறிய கோளான வெஸ்டாவில் இம் மலை காணபடுகின்றது.

# நாங்கள் இயக்கம்

ஒரு கணவனும் மனைவியும் படுக்கை அறையில் படுத்து இருப்பது என்பது ஒரு அந்தரங்கமான விடயம் ஆகும். ஒரு தம்பதியினர் தங்களுடைய படுக்கை அறைக்குள் வேறு யாரும் வருவதை விரும்ப மாட்டார்கள் எதிர் பார்க்கவும் மாட்டார்கள்.

சின்னத்தம்பியும் செல்வியும் ஒரு நாள் தங்கள் படுக்கை அறைக்குள் படுத்து இருந்தார்கள். இளம் வயதினர். அந்த காலத்தில் நாட்டில் யுத்தம் நடை பெற்று கொண்டதால் மின்சார வசதிகள் இல்லை. ஒரு அரிக்கன் லாம்பு மாத்திரம் மூலையில் அழுதுவடிந்துகொண்டிருந்தது.

படுக்கை அறையில் படுத்திருந்த சின்னத்தம்பிக்கு திடீர் என்று முழிப்பு ஏறிப்பட்டது. அறையில் மங்கலான வெளிச்சம் நிலவியதால் அருகில் படுத்திருந்த அவனது மனைவியை காணமுடியவில்லை படுத்திருந்தவாறே தனது மனைவியை தடவிப் பார்த்தான் அப்பொழுது அவனது கை ஒரு பழக்கமில்லாத உருவத்தின் மேல் விழுந்தது. அவன் திடுக்கிட்டு எழுந்து கொண்டு " யார் நீ?" என்று கேட்டான். பதில் " நான் இயக்கம்." என்று வெளிவந்தது மூலையில் அழுது வடிந்த அரிக்கன் விளக்கை தூண்டி விட்டு அருகில் இருந்தவனை பார்த்து. "என்ரை படுக்கை அறைக்குள் என்ன செய்கிறாய்?" என்று கேட்டான்.

"நான் இயக்கம். உங்களை கண்காணிக்க மேல் இடத்து உத்தரவு," என்றான். "யார் அந்த மேல் இடம்?" இந்த பகுதிக்கு பொறுப்பான புலியின் பொறுப்பாளர் தான்!

" என்னடாப்பா புருக்ஷன் பொண்டாட்டி படுத்திருப்பதை கூட உங்கள் புலிகள் கண்காணிக்கிறார்களா? " என விரக்தியுடன் சின்னத்தம்பி கேட்டான்.

அதெல்லாம் எனக்கு தெரியாது இது மேல் இடத்தின் உத்தரவு ."என்று கூறினான். அதையடுத்து "தம்பி நீ அறைக்குள் படுத்துகோ நாங்கள் வெளியில் போகிறோம்" என்று அந்த இயக்க உறுப்பினரை அறைக்குள் வைத்து பூட்டி விட்டு அந்த புருக்ஷனும் மனைவியும் வெளியில் வந்து கொட்ட கொட்ட முழித்துக்கொண்டு இருந்தார்கள். . மறு நாள் ஊர் மக்கள் அழைத்து அறையில் பூட்டப்பட்டிருந்த புலி அமைப்பு உறுப்பினரை சின்னத்தம்பி அவர்களிடம் பாரம் கொடுத்தான்.

# இது ஒரு சில்லறையின் கதை



கிட்டத்தட்ட ஒரு பில்லியன் நாணயத்தை வார்த்தெடுப்பதற்காக மத்திய வங்கி கேள்வி பத்திரம் கோரியுள்ளது. குறிப்பாக சொல்லப்போனா 1070 மில்லியன் நாணயங்கள். அதில் பத்து ரூபா நாணயங்கள் அடங்கும். பத்து ரூபா தாள் நோட்டுகள் கிடைப்பது அரிதாகி வருவதால் பத்து ரூபா நாணயம் அதிகமாக வெளியிட திட்டமிடப்பட்டுள்ளது.

மத்தியவங்கி பின்வரும் நாணயங்களுக்கான கேள்விப்பத்திரம் கோரியுள்ளது.

1ரூபா நாணயம் - 190 மில்லியன்

2ரூபா நாணயம் - 275 மில்லியன்

5ரூபா நாணயம் - 230 மில்லியன்

10ரூபா நாணயம் - 375 மில்லியன்

இன்றைய நிலையில் பத்து ரூபா தாள்(நோட்டுக்கள்) தட்டுப்பாடாக இருக்கின்ற பொழுது பத்து ரூபா நாணயம் ஒருவருடைய பாக்கற்றுக்களில் இன்றேல் பஸ்சுகளில் வைத்து செல்வது மிகவும் கஸ்டமானது ஏன் என்றால் ஒரு நாணயம் 8.6கிறாம் எடையை கொண்டது. 10.12 நாணயங்களை வைத்து இருந்தால் அதன் எடை 100 கிறாம் எடையை எனவே பஸ்சுகளில் இன்றேல் பாக்கறுகளில் காவி திரிவது கஸ்டமாக இருக்கும்

முன்னர் மத்தியவங்கி ஒரு ரூபா மற்றும் ஐம்பது ரூபா பெறுமதியான நாணயங்களை வெளியிட்டது. இப்பொழுது ஒரு மனிதன் நாணயங்களை கொண்டு திரிவது நல்லதா இன்றேல் தாள்களை கொண்டு செல்வது நல்லதா என்று மத்திய வங்கி தீர்மானிக்க வேண்டும்.

# சில துளிகள்

பீஜிங் சீனாவில் இளம் ஜோடி ஒன்று அங்குள்ள கண்ணாடிப் பாலத்தின் அடியில் தொங்கியபடி திருமணம் செய்துள்ளார்கள். நிலத்தில் இருந்து 600அடி உயரத்தில் அந்தரத்தில் தொங்கிய படி இந்த திருமணம் நடந்துள்ளது.

இதே வேளையில் சீனாவில் கடந்த யூலை மாதம் ஏற்பட்ட வெள்ளம் மற்றும் இயற்கை அனர்தங்களால் 600 பேர் வரையில் உயிரிழந்துள்ளதாக அந்த நாட்டு சிவில் அலுவலகம் தெரிவித்துள்ளது.

பேர்சின் ஜேர்மனியில் பொது இடங்களில் இஸ்லாமிய பெண்கள் பர்தா அணிய நிரந்தர தடைவிதிக்கும் வகையில் புதியசட்ட மசோதா அந்த நாட்டு நாடாளுமன்றத்தில தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

சோலார் இம்புளஸ் - 2 எனும் விமானம் கடந்த வருடம் ஐக்கிய அரபு எமிரேட்ஸின் அபுதாபியில் இருந்து பயணத்தை ஆரம்பித்தது. சூரிய சக்தியை மாத்திரம் பயன்படுத்தி முதல் தடவையாக உலகை சுற்றி வந்த விமானம் 42000கிலோ மீற்றர் பயணத்தின் பின் அபுதாபியைச் சென்றடைந்தது.

அமெரிக்கா வின் மேற்கு பகுதியில் உள்ள கலிபோர்னியா மாநிலத்தின் தென்பகுதியில் அதிகரித்துவரும் காட்டுத்தீயின் விளைவாக சுமார் 82 ஆயிரம் மக்கள் தங்களது வசிப்பிடங்களில் இருந்து வெளியேற்றப்பட்டனர். மத்திய கலிபோர்னியா பகுதியில் ஊரடங்கு உத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ளது.

சிங்கப்பூர் மீது ரொக்கட் மூலம் தாக்குதல் நடத்த தீவிரவாதிகள் திட்டமிட்டுள்ளதை அடுத்து நாடு முழுவதும் பாதுகாப்பு ஏற்பாடுகள். பலப்படுத்தப்பட்டுள்ளன. ISI பயங்கரவாதி பற்றும் நஜிமு முயற்சி மேற்கொண்டுள்ளமை குறிப்பிடதக்கது.

மட்ரின் ஸ்பெயின் நாட்டில் மலசல காகிதங்களை ஒருவர் எரித்ததால் காட்டு தீ ஏற்பட்டுள்ளது. ஸ்பெயின் நாட்டின் தீவுகள் பகுதியில் உள்ள லாபாலமாவில் காட்டுத் தீ விபத்து ஏற்பட்டுள்ளது. ஜேர்மன் நாட்டைச் சேர்ந்த ஒருவர் மலசல கூட காகிதங்களை எரித்ததால் இத் தீவிபத்து ஏற்பட்டதாக ஸ்பெயின் அதிகாரிகள் தெரிவித்தார்கள்.

குஜராத் மாநில புதிய முதலமைச்சராக விஜய் ரூபானி அணிமையில் பதவி ஏற்றுக்கொண்டார். முன்னாள் முதலமைச்சரான ஆனந்தி பென்பட்டேல் தனது பதவியை இராஜினாமாச் செய்ததையடுத்து புதிய முதலமைச்சராக விஜய் ரூபானி பதவியேற்றுக் கொண்டார்.

துருக்கி நாட்டில் கடந்த மாதம் 15-ந் தேதி ராணுவத்தில் ஒரு பிரிவினர் புரட்சிக்கு முயற்சித்தனர். ஆனால் அந்த புரட்சியை அதிபர் எர்டோகன், மக்கள் துணையுடன் முறியடித்தார்.

மோஸி என்று பெயரிடப்பட்ட அதிநவீன குவாண்டம் அறிவியல் ஆய்வு செயற்கைகோளை சீனா வெற்றிகரமாக விண்ணில் செலுத்தியது. இந்த செயற்கைகோள் விண்ணில் இருந்து அனுப்பும் தகவல்களை வேறு யாரும் இடைமறித்து திருட முடியாது. மேலும் இது ஒளியைவிட அதிக வேகத்தில் பூமிக்குத் தகவல்களை அனுப்பும் திறன் கொண்டது.

க.கணேசராசா

# சிரிக்க வைக்கும் 'கத்திச் சண்டை'



'கத்திச் சண்டை' படத்தில் விஷால் கதாநாயகனாக நடிக்கிறார். நாயகியாக தமன்னா நடிக்கிறார். நகைச்சுவை வேடத்தில் வடிவேலு, சூரி இருவரும் நடிக்கிறார்கள். மேலும் முக்கிய வேடத்தில் ஜெகபதி பாபு, தருண் அரோரா, சரண் தீப், ஜெயபிரகாஷ், நிரோஷா, தாடி பாலாஜி, ஆர்த்தி, பாவா லட்சுமணன் ஆகியோருடன் ஏராளமான நட்சத்திரங்கள் நடிக்கிறார்கள். விஷால் நடித்த படங்களிலேயே இந்த படம்தான் அதிக பொருட் செலவில் தயாராகியுள்ளது. படத்தின் முதல் பாதியில் சூரியும், இரண்டாம் பாதியில் வடிவேலுவும் காமெடியில் கலக்கி இருக்கிறார்கள். பக்கா கமர்ஷியல், அக்ஷன், காமெடி படமாக உருவாகி யுள்ள இந்த 'கத்திச் சண்டை' படம் வரும் தீபாவளியன்று வெளியாக உள்ளது" என்றார்.

# வில்லியான நதியா!



திருமணத்திற்கு பின், ஜெயம்ரவி நடித்த, எம்.குமரன் சன் ஓப் மகாலட்சுமி என்ற படத்தில், அம்மா வேடத்தில் ரீ - என்ட்ரி கொடுத்தவர், முன்னாள் கதாநாயகி நதியா. அதையடுத்து, சில படங்களில், அம்மாவாக நடித்தவர், தற்போது, தமிழ் மற்றும் தெலுங்கில், ஏ.ஆர்முருகதாஸ் இயக்கத்தில், மகேஷ்பாபு நடிக்கும், வாஸ்கோட காமா என்ற படத்தில், வில்லியாக நடிக்கிறார். இப்படத்தில் நதியாவை சொர்ணாக்கா ரேஞ்சுக்கு களமிறக்கியுள்ளார், இயக்குனர் முருகதாஸ்.




நய
தே
ஹி
அ

இது கதிர்வேலன
தோழியாக நடித்
எங்கேயும் நான்
நாயகியாகியுள்ள
இயக்குநர் பென்
படத்தைப் பார்ப
நுனிக்கே வரச்
ஏற்கனவே, ஜோ
நடித்த திரிஷா த
நடிகைகளுள் ஒ

# குடியால் வாய்ப்பு இழந்த தீப்பெட்டி கணேசன்



"ரேனிகுண்டா" படம் மூலம் அறிமுகம் ஆனவர் தீப்பெட்டி கணேசன். பல படங்களில் முக்கிய கதாபாத்திரத்தில் நடித்திருக்கும் இவர் தற்போது சென்னை கே.கே.நகர் 'கவிஞர் கிச்சன்' என்கிற உணவகத்தில் பணிபுரிந்து வருகிறார். சினிமாவில் நடிச்சிட்டு இருக்கிற நீங்க இப்படி ஹோட்டல்ல வேலை பார்த்துட்டு இருக்கிறதை மக்கள் ஏத்துப்பாங்கனு நினைக் கிறீங்களா? என்று கேட்டபோது, மக்கள் இதை எப்படி ஏத்துப் பாங்கனு தெரியல. சமையல் என்பது ஒரு கலை. எனக்கு பிடித்தமான விஷயமும் கூட. இந்த கடை திறப்பு விழாவுல இருந்து நாலு நாள் இங்கதான் இருந்து வேலை பார்த்தேன். இப்போ வரைக்கும் ஷூட்டிங் இல்லாத நாட்கள்ல இங்கதான் வேலை பார்த்துட்டு இருக்கேன். கடை திறப்பு விழாவுக்கு நான் எடுத்த படத்தை, நானேதான் ஃபேஸ்புக்ல பதிவிட்டேன். அந்தப் படத்தை எடுத்து, இணையத் துல "குடியால் வாய்ப்பு இழந்த தீப்பெட்டி கணேசன்" என எழுத ஆரம்பிச்சுட்டாங்க. சிரிப்புதான் வந்தது

# கவர்ச்சி காஜல்



தொடர் தோல்விப் படங்
ளாலும், வயது ஏறிக்
கொண்டே போவதாலு
வாய்ப்புகள் குறைகிற
எனக் கவலையில்
இருந்தாராம் காஜல் அ
வால். இதனால் தாரா
கவர்ச்சிக் குத்தான் ரெ
சொன்னது மட்டுமல்ல
தான் நடிக்கும் 'கவலை
வேண்டாம்' படத்தில்
நீச்சல் காட்சியில் இரண
நாட்கள் தண்ணீரிலே
மிதந்து நடித்துக் கொடு
ருக்கிறார். தற்போது அ
மணிதான் சிரஞ்சீவி,
படங்களின் நாயகி. இ
கவர்ச்சியில் மிதக்கலா



ன

# சண்டைக்கு தயாராகும் திரிஷா



ஹீரோயின் முக்கியத்துவம் உள்ள படங்களில் நடிக்க ஆர்வம் காட்டுகிறார் திரிஷா. ஏற்கனவே நாயகி படத்தில் நடித்திருக்கிறார். தற்போது ஆர்.மாதேஷ் இயக்கும் மோகினி படத்தில் நடிக்கிறார். இது பற்றி இயக்குனர் கூறும் போது, 'லண்டனில் பேக்கரி ஒன்றில் திரிஷா நடித்த ஆக்ஷன் காட்சிகள் இப்படத்துக்காக படமாக்கப்பட்டது. லண்டனில் முக்கிய காட்சிகள் படமாக்கப்பட்ட நிலையில் அடுத்து பாங்கொக்கில் ஷூட்டிங் நடக்கிறது. இதற்கு கடினமான சண்டை காட்சிகளில் திரிஷா நடிக்க வேண்டி உள்ளதால் ஸ்டண்ட் மாஸ்டரிடம் பயிற்சி எடுக்கிறார். கயிறு கட்டி பறந்து தாக்கும் காட்சியிலும் அவர் நடிக்க வேண்டி இருக்கிறது. அதற்காக சென்னையில் பயிற்சி பெற்று வரு கிறார். அடுத்த சில வாரங்களில் பாங்கொக்கில் படப்பிடிப்பு நடக்க உள்ளது' என்றார்.

# நயனின் தோழி ஹீரோயின் ஆனார்

இது கதிர்வேலன் காதலி படத்தில் நயன்தாராவின் தோழியாக நடித்த கலா கல்யாணி, தற்போது எங்கேயும் நான் இருப்பேன் என்ற படத்தில் நாயகியாகியுள்ளார். இப்படத்தை மலையாள இயக்குநர் பென்னி தோமஸ் இயக்குகிறார். படத்தைப் பார்ப்பவர்களை பயத்தில் இருக்கையின் நுனிக்கே வரச் செய்யும் அளவிற்கு திகில் படமாம். ஏற்கனவே, ஜோடி படத்தில் சிம்ரன் தோழியாக நடித்த திரிஷா தான், தற்போது தமிழில் முன்னணி நடிகைகளுள் ஒருவராக வலம் வருகிறார்.

# ர்ச்சியான ஜல்

ர் தோல்விப் படங்க
ம், வயது ஏறிக்
ண்டே போவதாலும் பட
ப்புகள் குறைகிறதே
கவலையில்
தாராம் காஜல் அகர்
. இதனால் தாராள
ர்சிக் குத்தான் ரெடி என
ன்னது மட்டுமல்லாமல்,
நடிக்கும் 'கவலை
ண்டாம்' படத்தில் ஒரு
காட்சியில் இரண்டு
ள் தண்ணீரிலேயே
து நடித்துக் கொடுத்தி
றார். தற்போது அம்
தான் சிரஞ்சீவி, அஜீத்
களின் நாயகி. இனி
ர்சியில் மிதக்கலாம்!



# உலக மனித நேய தினம்

மழை, வெள்ளம், நில நடுக்கம் போன்ற இயற்கைப் பேரிடர்கள் ஆகட்டும் போர், குண்டுவெடிப்பு போன்ற கொடுமையான வன்முறைச் சம்பவங்களாக இருக்கட்டும்... பாதிக் கப்பட்டவர்களை மீட்க, மருத் துவ உதவி வழங்க, உயிர் இழந்த வர்களை நல் லடக்கம் செய்ய, வீடு, உடைமைகள் எல்லாவற்றையும் இழந்து அகதிகளாக நிற்பவர்களுக்கு உதவிக்கரம் நீட்ட... என, சில நல்ல மனிதர்கள் தங்கள் உயிரைக்கூடப் பொருட்படுத்தாமல் போராடுவார்கள். அவர்களின் மனிதாபிமானம் மிக்க சேவையை நன்றியுடன் நினைவு கூர்வதற்காக உருவாக்கப்பட்டதே 'உலக மனித நேய தினம்"

2003 ஆம் ஆண்டு, ஓகஸ்ட் 19 ஈராக்கில் ஒரு வெடிகுண்டுத் தாக்குதல் நடத்தப்பட்டது. அங்கே செயல்படும் ஐ.நா. உதவி தூதுக்குழுவைக் குறிவைத்து இந்தத் தாக்குதலை நடத்தியது அல்கொய்தா அமைப்பு. கேனல் ஹோட்டல் என்ற இடத்தில் நடந்த அந்தத் தாக்குதலில், ஐ.நா.வின் சிறப்புப் பிரதிநிதியான செர்ஜியோ வியரா டெ மெல்லோ (Sergio Vieira de Mello) கொல்லப்பட்டார். 22 பேர் உயிரிழந்தார்கள். 100 பேர் படுகாயம் அடைந்தார்கள். செர்ஜியோ, ஐ.நா.வுக்காக 34 ஆண்டுகளுக்கும் மேலாகப் பணி யாற்றியவர். அவர் நினைவாக, அவர் இறந்த ஓகஸ்ட் 19 ஐ, "உலக மனித நேய தினமாக" அனுசரிக்க வேண்டும் என ஐ.நா. சபை முடிவெடுத்தது. 2009 ஆம் ஆண்டிலிருந்து இந்த தினம் உலகம் முழுவதும் கடைபிடிக்கப்பட்டு வருவது குறிப்பிடத்தக்கது.

இந்த தினத்தில், ஐ.நா. வும் அதன் கூட்டு அமைப்புகளும் முக்கியமான ஒரு வேண்டுகோளை விடுத்துள்ளன. அதாவது, உலக அளவில் உயிர்வாழ உதவி வேண்டுவோர் 130 மில்லியன் பேர் (13 கோடி). அவர்கள் அனைவருக்கும் உலகமே ஒன்றிணைந்து உதவ வேண்டும் என கோரிக்கை வைத்துள்ளது ஐ.நா. இந்த ஆண்டுக்கான (2016) கருப்பொருள் "மனிதம் ஒன்றே! (One Humanity).

இந்தத் தினத்தின் முன் னோட்டமாக, இந்த ஆண்டு, மே மாதம், 23 - 24 திகதிகளில் துருக்கியில் உள்ள இஸ்தான்புல்லில், "உலக மனித நேய உச்சி மாநாடு நடைபெற்றது. அதில், இடர்களில் பாதிக்கப்பட்டவர்களுக்கு உதவவும், மனிதாபிமான சேவையில் ஈடுபட்டுள்ள ஊழியர்கள், மேலும் ஆர்வத்துடன் பங்கேற்க அவர்களுக்குத் தேவைப்படும் உதவிகளை வழங்கவும் பல நாடுகள் முன் வந்திருக்கின்றன.

"மனிதம் ஒன்றே" என்ற கருப்பொருளின் கீழ் உலகம் முழுக்க, மனித நேய சேவையில் ஈடுபட்டுள்ள ஊழியர்களை கௌரவிக்கப் பல நிகழ்ச்சிகள் ஏற்பாடு செய்யப்பட்டிருக்கின்றன. நியூயோர்க்கில் உள்ள ஐ.நா. தலைமையிடத்திலும் ஒரு நிகழ்வு நடைபெற உள்ளது. இது தொடர்பாக விழிப்புணர்வை ஏற்படுத்துவதற்காக ஒரு டிஜிட்டல் பிரசாரத்தையும் நடத்த இருக்கிறது ஐ.நா. அதோடு, இயற்கைப் பேரிடரிலும், போரிலும் பாதிக்கப்பட்டு மீண்டு, உயிர் பிழைத்திருப்பவர்கள் தொடர்பான ஆவணப் படங்களும், புகைப்படக் கண்காட்சியும் இந்நிகழ்வில் இடம்பெற உள்ளமை குறிப்பிடத்தக்கது.

# சாரதி இல்லாத கார்



சாரதி இல்லாமல் தன்னிச்சையாக பயணிக்கக் கூடிய நவீன காரை எதிர்வரும் 2021 ஆம் ஆண்டுக்குள் அறிமுகப்படுத்துவதற்கான முயற்சிகளை மேற்கொண்டு வருவதாக உலகின் முன்னணி கார் தயாரிப்பு நிறுவனங்களில் ஒன்றான போர்ட் தெரிவித்துள்ளது.


கூகுள், மேர்சிடிஸ் பென்ஸ், டெஸ்லா மோட்டார்ஸ், பி.எம்.டபிள்யூ உள்ளிட்ட முன்னணி நிறுவனங்கள் நவீன தொழில்நுட்பத்துடனான தமது புதிய தயாரிப்பாக சாரதி இல்லா கார்களை உருவாக்கும் முயற்சியில் ஈடுபட்டுள்ளன. இவற்றுக்கு போட்டியாகவே தற்பொழுது போர்ட் நிறுவனமும் இந்த முயற்சியை மேற்கொள்கின்றது.

போர்ட் தயாரிக்கும் இந்த காரில் ஸ்ரெயரிங் இருக்காது என்றும், லிடார் என்ற புதிய தொழில்நுட்ப திட்டத்தின் அடிப்படையில் தனக்கு அருகில் மற்றும் தனது சூழலில் இருக்கும் விடயங்களை உணர்ந்து பயணிக்கும் வித்தில் இது தயாரிக்கப்படும் எனவும் தெரிவிக்கப்படுகின்றது.

தாம்தயாரிக்கும்இந்தபுதியகார், முதலில் வர்த்தக பயன்பாடுகளுக்கும் பின்னர் பொது மக்களின் போக்குவரத்திற்கும் பயன்படுத்தப்படும் என போர்ட் நிறுவன தலைமைச் செயல் அதிகாரி மார்க் பீல்ட்ஸ் தெரிவித்துள்ளார்.

இதன் பிறகு தமது முதலீடுகளை நவீன தொழில்நுட்பத்துடனான கார்களை உருவாக்கும் திட்டங்களுக்காகவே அதிகம் பயன்படுத்த இருப்பதாகவும் அவர்

# நாடித் துடிப்புக் கேட்குதா?




உலகம் முழுவதும் புதிது புதிதான டிசைன் களில் தினந்தோறும் எண்ணற்ற மோதிரங்கள் வந்துகொண்டிருக்கின்றன. செக் நாட்டு நிறுவனம் பல நாட்டு ஆராய்ச்சியாளர்கள் உதவியோடு இரண்டரை வருடங்களாக ஒரு புதிய மோதிரத்தை வடிவமைத்துள்ளது. அப்படி என்ன ஸ்பெஷல்?

அறிவியல் வளர்ச்சி அடைவதற்கு முன்னால், சுண்டுவிரலுக்கு அருகே இருக்கும் விரலில் இருந்து இதயத்திற்கு நேரடியாக ஒரு நரம்பு செல்வதாக ஒரு நம்பிக்கை இருந்தது. லத்தீன் மொழியில் காதல் நரம்பு என்றழைக்கப்பட்ட இந்த நரம்பு நான்காவது விரலில் இருந்ததாக நம்பப்பட்டது. இதன் காரணமாகத்தான் உன்னை இதயத்தில் வைத்துப் பாதுகாப்பேன் என்பதை உணர்த்துவதற்காகவும், இரு இதயங்கள் இணைவதையும் குறிப்பிடுவதற்காகவும் திருமணத்தின்போது மோதிர விரலில் மோதிரம் அணியும் பழக்கம் ஏற்பட்டதாகவும் கூறப்படுகிறது.

இந்நிலையில் செக் குடியரசைச் சேர்ந்த நிறுவனமான 'தி டச்' புதிதாக ஒரு மோதிரத்தை வடிவமைத்துள்ளது. இதைத் தம்பதிகள் அணிந்துகொண்டால் ஒருவருக்கொருவர் தனது நாடித்துடிப்பை பகிர்ந்துகொள்ள முடியும். நான்கு மில்லி மீட்டருக்கும் குறைவான தடிமன் கொண்ட இந்த மோதிரத்தின் உள்ளே ப்ளூருத், சென்சார், அதிர்வலைகளை ஏற்படுத்தும் ப்ரோசசர் கொண்ட மோட்டார் அனைத்தும் வடிவமைக்கப்பட்டுள்ளது.

தம்பதியினர் விருப்பப்படும் நேரத்தில் மோதிரத்தில் உள்ள சென்சார் மீது தங்களது விரல்களால் அழுத்திப் பிடித்தால் போதும். சென்சார்கள் மூலம் ப்ளூருத் வழியாக சிக்னல்கள் அனுப்பப்பட்டு, ஜோடி உலகின் எந்த மூலையில் இருந்தாலும் மோதிரத்தில் உள்ள மோட்டார் நாடித்துடிப்பைப் போல் அதிர்வலைகளை ஏற்படுத்தும். இதன் மூலம் தம்பதியினர் நான் உன்னை நினைத்துக் கொண்டிருக்கிறேன் என்பதை உணர்த்தலாம் தெரிவிக்கிறது. விலை என்னவென்று கேட்கிறீங்களா? ஒரு ஜோடி மோதிரம் 40,000 த்தில் தொடங்கி இரண்டு லட்சம் ரூபாய் வரை போகி றது. அடப் போங்க பாஸ்! இப்பல்லாம் கல்யாணத்துக்கு மறுநாளே நகையெல்லாம் அடகுக்கடைக்குத்தான் போகுது!

# உச்சியில் ஒரு நட்சத்திரம்!



சுவிற்ஸர்லாந்தில் இயங்கிக்கொண்டிருக்கும் ஒரு நட்சத்திர ஹோட்டல் எல்லாரையும் அட சொல்ல வைத்திருக்கிறது. பிரமாண்டமான கட்டடமா, வெரைட்டியான உணவுகளா என்று நீங்கள் நினைத்தால் அதுதான் இல்லை. கடல்மட்டத்திலிருந்து 6,463 அடி உயரத்தில் மலை உச்சியில் சின்ன பெட்ரூம் சைஸில் இருக்கிறது இந்த ஸீரோ ஸ்டார் ஹோட்டல். படுத்துக்கொண்டே 360 டிகிரியில் மொத்த இயற்கையையும் கண்குளிரக் கண்டுகளிக்கலாமாம். முற்றிலும் திறந்தவெளியில் வாடிக்கையாளர்களுக்கு ரம்மியமான உணர்வைத் தருவதுதான் இதன் நோக்கம். கட்டட அமைப்புகளே முற்றிலும் தவிர்க்கப்பட்டிருக்கும் இதில் பாத்ரூம் போவதென்றால்கூட பத்து மைல்கள் கீழே இறங்கி வர வேண்டும். மற்றபடி வரவேற்க, ரூம் சேர்வீஸ் செய்ய சுவையான உணவுகள் தர பக்கத்திலேயே டென்ட் போட்டுத் தங்கி இருக்கிறார்கள் ஊழியர்கள். ஓர் இரவு தங்குவதற்கு 260 டொலர் வசூல் செய்கிறார்கள். ஸீரோ ஸ்டார் என சொல்லிட்டு இவ்வளவு கொஸ்ட்லி இருக்கே... ஹோட்டலுக்கு மக்கள் வராங்களா? எனக் கேட்டால் 'அடுத்த மாசத்துக்கு இப்பவே புக் பண்ணி வச்சுட்டாங்க, அந்த அளவுக்கு எப்போதுமே பிஸிதான்' என்கிறார்கள்.

(03 ஆம் பக்கத் தொடர்ச்சி)

# இடம்...

1,035 வீடுகள் முல்லைத்தீவிலும், 1,140 வீடுகள் மன்னாரிலும், 910 வீடுகள் வவுனியாவிலும் 1,120 வீடுகள் திருகோணமலையிலும், 1,000 வீடுகள் மட்டக்களப்பிலும் 165 வீடுகள் அம்பாறையிலும் 80 வீடுகள் புத்தளத்திலும் 240 வீடுகள் பொலநறுவையிலும் 65 வீடுகள் அனுராதபுரத்திலும் அமைக்கப்பட்டு வருவதாக சிறைச்சாலைகள் மறுசீரமைப்பு, புனர்வாழ்வளிப்பு மீள்குடியேற்றம் மற்றும் இந்துசமய அலுவல்கள் அமைச்சின் செயலாளர் வே. சிவஞானசோதி தெரிவித்தார்.

அது மாத்திரமல்லாமல் பகுதியாக சேதமடைந்த 2,400 வீடுகளை புனரமைப்பதற்காக ஒரு வீட்டுக்கு தலா 200,000 ரூபா வழங்கப்படுகின்றது. இத்திட்டத்தின் கீழ் 720 பகுதியாக சேதமடைந்த வீடுகள் யாழ் மாவட்டத்திலும் 120 வீடுகள் கிளிநொச்சியிலும், 170 வீடுகள் முல்லைத்தீவிலும், 200 வீடுகள் மன்னாரிலும், 50 வீடுகள் வவுனியாவிலும் 100 வீடுகள் திருகோணமலையிலும், 1,000 வீடுகள் மட்டக்களப்பிலும் 100 வீடுகள், அம்பாறையிலும் புனரமைக்கப்படுகின்றன எனவும் இதற்காக ரூபா 480 மில்லியன் நிதி ஒதுக்கப்பட்டள்ளதாகவும் அமைச்சின் செயலாளர் வே. சிவஞானசோதி தெரிவித்தார்.

மேலும் உள்ளக இடம்பெயர்ந்த குடும் பங்கள், இந்தியாவில் இருந்து தாயகம் திரும்பும் அகதி குடும்பங்கள் மற்றும் யுத்தத்தினால் பாதிக்கப்பட்ட குடும்பங்களுக்கு 7,600 கழிப்பறை வசதிகள் (மலசலகூடங்கள்) ரூபா 418 மில்லியன் நிதியில் அமுல்படுத்தப்பட்டு வருகின்றது. இத்திட்டத்தின் கீழ் 1,200 கழிப்பறை அலகுகள் யாழ் மாவட்டத்திலும் 1,000 அலகுகள் கிளிநொச்சியிலும், 1,000 அலகுகள் முல்லைத்தீவிலும், 1,000 அலகுகள் மன்னாரிலும், 1,000 அலகுகள் வவு னியாவிலும் 1,000 அலகுகள் திருகோண மலையிலும், 1,000 அலகுகள் மட்டக்களப்பிலும் 400 அலகுகள் அம்பாறையிலும் அமைக்கப்பட்டு வரு கின்றன.

அத்தோடு நின்றுவிடாமல் நீர் விநியோக கருத்திட்டத்தின் கீழ் யாழ் மாவட்டத்தில் 39 கிணறுகளை அமைத்தல், 108 கிணறுகளைப் புனரமைத்தல், 5 விவசாயக் கிணறுகளை அமைத்தல், 77 விவசாய கிணறுகளை புனரமைத்தல் மற்றும் 12 நீர்விநியோகத் தொகுதிகளை அமைத்தல் ஆகிய திட்டங்களும் அமுல்படுத்தப்படுகின்றன.

இதன் மூலம் உள்ளக இடம்பெயர்ந்த குடும்பங்கள், இந்தியாவில் இருந்து தாயகம் திரும்பும் அகதி குடும்பங்கள் மற்றும் யுத்தத்தினால் பாதிக்கப்பட்ட மக்கள் ஆகியோர் சுத்தமான குடிநீரைப் பெற்றுக்கொள்ள முடியும் எனவும் பொதுப் பயன்பாட்டு கிணறுகள் மற்றும் அதிக பங்குடைய கிணறுகள், விவசாய கிணறுகளையும் புனரமைப்பதன் மூலம் நீர்ப் பற்றாக்குறையினை நிவர்த்தி செய்வதற்கும் நடவடிக்கை எடுத்துள்ளதாக அமைச்சின் செயலாளர் வே. சிவஞானசோதி மேலும் தெரிவித்தார்.

வடக்கு மற்றும் கிழக்கு மாகாணங்களிலுள்ள உள்ளக இடம்பெயர்ந்த குடும்பங்கள், இந்தியாவில் இருந்து தாயகம் திரும்பும் அகதி குடும்பங்கள், யுத்தத்தினால் பாதிக்கப்பட்டவர்கள், புனர்வாழ்வளிக்கப்பட்டு சமூகத்துடன் மீள ஒருங்கிணைக்கப்பட்டவர்கள், பெண் தலைமைத்துவ குடும்பங்கள், மாற்று வலுவுள்ளவர்கள் ஆகியோரின் வாழ்வாதாரத்தை மேம்படுத்துவதற்காக ஒவ்வொரு குடும்பத்திற்கும் அதியுயர் தொகையாக ரூபா 100,000 வாழ்வாதார உதவிகளாக வழங்கப்பட்டு வருகின்றன.

இந்தத் திட்டத்தின் கீழ் 12,050 குடும்பங்கள் பயன்பெறுமெனத் தெரிவிக்கப்படுகின்றது. இதற்கென ரூபா 1,205 மில்லியன் நிதி ஒதுக்கப்பட்டுள்ளது. வாழ்வாதார உதவிகள் என்பது கோழிவளர்ப்பு, ஆடு வளர்ப்பு, மாடு வளர்ப்பு, மீன்பிடி, குடிசைக் கைத்தொழில், விவசாயம் மற்றும் ஏனைய வருமானம் ஈட்டும் தொழில்களை உள்ளடக்கும்.

யாழ் மாவட்டத்தில் 3,000 குடும்பங்களுக்கும் கிளிநொச்சியில் 1,600 குடும்பங்களுக்கும், முல்லைத்தீவில் 1,500 குடும்பங்களுக்கும், மன்னாரில் 1,600 குடும்பங்களுக்கும் வவுனியாவில் 1,500 குடும்பங்களுக்கும் திருகோணமலையில் 1,300 குடும்பங்களுக்கும் மட்டக்களப்பில் 1,000 குடும்பங்களுக்கும் அம்பாறையில் 550 குடும்பங்களுக்கும் வாழ்வாதார உதவிகள் வழங்கப்பட்டு வருவதாகவும் அமைச்சின் செயலாளர் சிவஞானசோதி தெரிவித்துள்ளார்.

மேலும் உட்கட்டமைப்பு அபிவிருத்திகளான உள்ளக வீதிகள், வீடுகளுக்கான இலவச மின்சார விநியோக இணைப்புகள், பாடசாலைகளைப் புனரமைத்தல், வைத்தியசாலைகளை புனரமைத்தல், முன்பள்ளிகள் மற்றும் ஏனைய உட்கட்டடைப்பு வசதிகளை மேம்படுத்துவதற்காக ரூபா 630 மில்லியன் நிதி ஒதுக்கப்பட்டுள்ளது. இத்திட்டங்கள் யாவும் துரிதகதியில் அமுல்படுத்தப்பட்டு வருகின்றன.

அரசாங்கம் நிரந்தர வீடுகள், பகுதியாக சேதமடைந்த வீடுகள், நீர்விநியோகம், சுகாதாரம், உட்கட்டமைப்பு வசதிகள் மற்றும் வாழ்வாதார உதவிகள் ஆகிய நிரந்தரமான தீர்வுகளை யுத்தத்தினால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு வழங்கி அவர்களின் பிரச்சினைகளைத் தீர்ப்பதற்கு அதிகூடிய முன்னுரிமை வழங்கியுள்ளது.

இம்முன்னெடுப்புக்கள் மற்றும் வடக்கு கிழக்கு மாகாணங்களில் புனரமைப்பு மற்றும் மீள்குடியேற்ற கருத்திட்டங்களுக்காக 2016 ஆம் ஆண்டு ரூபா 14 பில்லியன் ஒதுக்கீடு என்பன சமாதானம் மற்றும் நல்லிணக்கத்திற்கான அரசாங்கத்தின் அர்ப்பணிப்பினை எடுத்துக்காட்டுவதாக சிறைச்சாலைகள் மறுசீரமைப்பு, புனர்வாழ்வளிப்பு மீள்குடியேற்றம் மற்றும் இந்துசமய அலுவல்கள் அமைச்சின் செயலாளர் வே. சிவஞானசோதி தெரிவித்தார். இவை தவிர மேலும் பல அபிவிருத்தி கருத்திட்டங்கள் சிறைச்சாலைகள் மறுசீரமைப்பு, புனர்வாழ்வளிப்பு மீள் குடியேற்றம் மற்றும் இந்து சமய அலுவல்கள் அமைச்சினால் அமுல்படுத்தப்பட்டு வருகின்றமையும் இங்கு சுட்டிக்காட்டத்தக்கது.

---

(2 ஆம் பக்கத் தொடர்ச்சி...)

# எச்சில்...

அத்துடன் அவரின் அகதிக் கோரிக்கை நிரா கரிக்கப்பட்டு இலங்கைக்கு திருப்பி அனுப்பப்பட்டார்.

அவுஸ்திரேலியாவில் இருந்து திருப்பி அனுப்பப்பட்டவர்களை இலங்கையில் குற்றவாளிகளா கவே பார்க்கிறார்கள். இவ்வாறு திருப்பி அனுப்பப்பட்டவர்கள் இல ங்கையில் பாரிய இன்னல்கள், துன்பங்கள், துன்புறுத்தல்களுக்கு முகம் கொடுக்கின்றனர்.

அவுஸ்திரேலியாவிற்கென வள் ளங்களில் வந்து திருப்பி அனுப்பப் படுபவர்கள் குறித்து அந்நாட்டு அமைச்சர் பீற்றர் டட்டன் கருத்து தெரிவிக்கும் போது, "அகதிகளை திருப்பி அனுப்பும் செயற்பாட்டில் எந்த மாற்றமும் இல்லை. எங்கள் நாட்டு எல்லைக்குள் வரும் வள் ளங்கள் திருப்பி அனுப்பப்படும்" எனத் தெரிவித்தார்.

எந்தவொரு நாட்டிலும் ஒருவர் சென்று தஞ்சம் கோருவது அந்த நபரின் பிறப்புரிமை. தஞ்சம் கோரு வதற்கு ஒருவர் விமானத்திலோ கப்பலிலோ படகிலோ அல்லது மோட்டார் வாகனத்திலோ இன்றேல் நடந்தே போகமுடியும். இவ்வாறு தஞ்சம் கோரி வந்த வர்களை திருப்பி அவர்கள் நாட் டுக்குத் திருப்பி அனுப்புவது என் பது சர்வதேச சட்டங்களுக்கு முர ணானது.

இலங்கையிலுள்ள ஊடகங்கள் அவுஸ்திரேலிய அரசு வழங்கும் பிச்சைக்காசுக்கு அடி பணிந்து இலங்கையிலிருந்து வள்ளங்களில் வருபவர்கள் திருப்பி அனுப்பப்படுவார்கள் என விளம்பரங்களை ஒளிபரப்பியும் பிரசுரித்தும் வருகின்றன. இவையும் மனித உரிமை மீறல்களாகவே பார்க்கப்படுகின்றன.

அவுஸ்திரேலியாவின் மனித உரிமை மீறல் நடவடிக்கைகளுக்கு உதவுவதன் மூலம் இலங்கையிலுள்ள ஊடகங்கள் எச்சில் காசிற்கு துணைபோகின்றன.

---

(2 ஆம் பக்கத் தொடர்ச்சி...)

# விடுதலைப்...

சுமார் அரை மணியில் இருந்து நாற்பத்தைந்து மணி நேரத்திற்கு பின்னர் விடுதலைப்புலிகளின் தலைவர் உதவி செய்ய இணங்கியுள்ளதாக எமில்காந்தன் பசில் ராஜபக்ஷவுக்கு தெரிவித்ததாகத் தெரிகிறது.

எனவே தமிழீழ விடுதலைப் புலிகள் வேகமாக செல்லும் வள்ளம் (Boat) வாங்குவதற்கு பணம் வேண்டும் என்றும் இதற்கு ரூபா 18 கோடி வேண்டும் என விடுதலைப் புலிகளின் தலைவர் கூறியதாக எமில்காந்தன் பசில் ராஜபக்ஷவிடம் கூறினான். அதையடுத்து பசில் ராஜபக்ஸ ரூபா 18 கோடியை எமில்காந்தனிடம் கொடுத்ததாக தெரிகிறது.

தேர்தலில் வென்ற பின்னர் விடுதலைப் புலிகளுக்கு கொடுக்க முன்வந்த 2 ஆவது கட்ட கொடுப்பனவாக ரூபா 80 கோடி சுனாமியால் பாதிக்கப்பட்ட வடக்கு கிழக்கு மாகாணங்களில் வீடு கட்டுவதற்கு என்று எமில்காந்தனால் உருவாக்கப்பட்ட போலி கம்பனிகளுக்கு வழங்கப்பட்டது.

ஜெய லங்கா வீட்டுத்திட்டம் என்ற இந்த திட்டத்தில் 1200 வீடுகள் திருகோணமலை, மட்டக்களப்பு, அம்பாறை, வவுனியா, மன்னார் ஆகிய இடங்களில் கட்டுவது என்றும் இந்த வீட்டுத்திட்டத்திற்கு GS Builders & Consultants of 371, Mahavadi lane, VepamKulam vavuniya எனும் கம்பனி ஆலோசனை வழங்கும் கம்பனியாகவும் தெரிவு செய்யப்பட்டது.

திருகோணமலையில் ஒரு வீடு 500 சதுர அடியில் 400 வீடுகள் கட்டுவதற்கு ரூபா 624,725 தேவை என்றும் BK Holding (pvt) என்ற கம்பனியின் கேள்விப் பத்திரம் ஏற்றுக்கொள்ளப்பட்டது.

அதே போல் மட்டக்களப்பில் 500 வீடுகள் கட்டுவதற்கு Everest Civil Engineering Service கேள்விப் பத்திரம் ஏற்றுக் கொள்ளப்பட்டது.

1200 வீடுகள் கட்டுவதற்கு மொத்தமாக ரூபா 7,5716,600 பணம் தேவை என முடிவு செய்யப்பட்டது. இந்தக் கம்பனிகளுக்கு எல்லாம் எமில்காந்தனின் சகோதரர்களும், மைத்துனியும் தான் பங்குதாரர்கள் என்று பின்னர் தெரியவந்துள்ளது.

இந்தக் கம்பனிகள் வீடுகள் கட்டுவதற்கு என மொத்தமாக ரூபா 80 கோடி பணம் வழங்கப்பட்டது.

**இந்த பணத்திற்கு என்ன நடந்தது?**

இது தான் எம் முன் நிற்கும் கேள்வி. யூன் மாதம் 2006 ஆம் ஆண்டு பணத்தை பெற்றுக் கொண்ட எமில்காந்தன் தமிழீழ விடுதலைப்புலிகளின் கயானாவிற்கு இந்த பணம் கொடுத்தானா? இல்லையா ?

ஆனால் இந்த பணத்தை பெற்று வருமாறு தமிழீழ விடுதலைப் புலிகள் உளவு படையைச் சேர்ந்த பலரை வேலுப்பிள்ளை பிரபாகரன் டுபாயில் ஒழிந்திருந்த எமில் காந்தனை கண்டு பணத்தை வாங்கி வருமாறு அனுப்பி வைத்தார். ஆனால் இந்தப் பணம் கொடுக்கப்பட்டதா? இல்லையா ?

எமில்காந்தன் டுபாயில் மிகவும் ஆடம்பர வாழ்க்கை வாழ்ந்து கொண்டு மாட மாளிகைகளில் இருந்து பணத்தை அள்ளி அள்ளி இறைத்து தமிழ் சினிமாப் படங்களை தென் இந்தியாவில் தயாரித்து வருவதாக தெரிய வருகிறது.

ஆனால் ரூபா 80 கோடி விடுதலைப் புலிகளைச் சேர்ந்ததா? இந்தப் பணம் யுத்தத்திற்கு பாவிப்பதற்கான ஆயுதங்கள் கொள்வனவு செய்யப் பயன்படுத்தப்பட்டதா? டுபாயில் ஒழிந்து கொண்டிருக்கும் எமில் காந்தன் இதற்கு பதில் தர வேண்டும்.

இதற்கிடையில் தமிழீழ விடுதலை அமைப்பின் எமில் காந்தனுக்கும் ரெலோவின் தலைவர் செல்வம் அடைக்கலநாதனுக்கும் இடையில் நெருங்கிய தொடர்பு ஏற்பட்டதாகவும், செவ்வம் அடைக்கலநாதன் பலமுறை டுபாய் சென்று எமில்காந்தனை சந்தித்து அவனுடன் தங்கி இருந்ததாகவும் தினச்செய்திக்கு செய்திகள் கசிந்துள்ளன.

---

(05 ஆம் பக்கத் தொடர்ச்சி)

# அகதிகள்...

இதன் எடை 105.4 கிலோ கிராம்.

அதாவது 232 இறாத்தல் அளவு கொண் டதாகும். இவை எப்போதும் கூட்டம் கூட்டமாகவே காணப்படும். பெரிய கூட்டமொன்றில் நூற்றிற்கும் மேற்பட்ட எலிகள் இருக்கும். சிறிய கூட்டத்தில் 10 முதல் 20 எலிகள் ஒன்றாக வாழும் தன்மை கொண்டவை.

**மிகப் பருமனான எலும் புள்ள மீன்**

[The Ocean Sunfish]

இந்த மீனுக்கு எலும்புகள் உள்ளன. உலகில் 29000 வித்தியாசமான மீன் வகைகள் உள்ளன. இந்த சூரிய மீன் (Mola mola) தற்போது வாழ்கின்ற வித்தியாசமான எலும்புள்ள மீனாகும். இதற்கு தலையும் வாலும் காணப்படுவதுடன் இதன் உடம்பு சப்பையாக இருக்கும். இதன் நீளம் 1.8 மீற்றர் அதாவது 5.9 அடியாகும்.

இவற்றின் செட்டைகள் சப்பைத் தன்மை கொண்டவை. இதன் அகலம் 2.8 மீற்றர்கள் அதாவது 8.2 அடியாகும். இதன் சராசரி எடை 1000 கிலோ கிராம் அதாவது 2200 இறாத்தல் ஆகும். சில மீன்கள் 2300 கிலோ கிராம் அதாவது 5300 இறாத்தல் எடை கொண்டதாகவும் இருக்கும்.


**பச்சை அனகொண்டா பாம்புகள்**

[The Green Anaconda]

இதன் விஞ்ஞானப் பெயர் (Eunectes murinus) என்பதாகும். இதன் நீளம் 7.5 மீற்றர். அதாவது 25 அடி ஆகும். இதன் எடை 250 கிலோ கிராம் அதாவது 550 இறாத்தல் ஆகும். இதிலும் பார்க்க நீளமான பாம்புகள் இருப்பதாக கூறுகிறார்கள்.

தெற்கு ஆசியாவில் உள்ள மலைப்பாம்பு தான் உலகிலுள்ள அனைத்து பாம்புகளிலும் பெரியது. இதன் நீளம் 9.7 மீற்றர் அதாவது 32 அடியாகும். ஆனால் இவை பருமன் குறைந்தவையாகும்.



# நேர் கொண்ட நன்னடை



நம் முதுகெலும்பு கரையக் கரைய உடலின் நிமிர்ந்த நடையும் வளை ஆரம்பிக்கின்றது. நம் மூளை மற்றும் தண்டுவட நரம்புச் செயற்பாடு பாதிப்படைந்து, உடல், மூளை இணக்க இயக்கம் கெடுகின்றது. இதனால் எமது மன நிம்மதி கெடுகின்றது. மன உழைச்சலுக்கு ஆளாகின்றோம்.

புத்திசாலித்தனம், சூட்டிகை மற்றும் தன்னம்பிக்கை ஆகியன குறைகின்றது. வாழ்க்கை கசக்க ஆரம்பிக்கின்றது.தன்னம்பிக்கையோடு ஆரோக்கியமும் பேண வேண்டியவர்கள் பாரதி கூறியதைப் போன்று நேர்கொண்ட நிமிர்ந்த நன்னடை கொண்டிருத்தல் வேண்டும்.




உணவு, ஒரு மனிதனுக்கு இன்றி அமையாதது. உடலுள் தங்கும் உயிரை அது தங்க வேண்டிய வரை உடலை பேணி காக்க உணவு முக்கிய பங்கு வகிக்கிறது. அதில் கூட நாம் எத்தனை கவனமாக இருந்தால், அந்த இருப்பே நம்மை பல நிலைகளை கடக்க உதவி புரியும் என்று ஆணித்தரமாக கூறுகின்றனர்.

சித்தர்களில் அகத்தியர், உணவை மருந்தாக பாவித்து மருத்துவ முறையை நடைமுறை படுத்தினார். இனி, உண்ணும் முறையில் நாம் என்னென்ன விதிகளை கடைபிடிக்கவேண்டும் என்று பெரியவர்கள் கூறுகிறார்கள் என்று பார்ப்போம்.

1. உணவு தானம் எத்தனையோ தோஷங்களுக்கு சிறந்த பரிகாரம். ஒருவனுக்குள் நடக்கும் கர்ம யாகத்துக்கு உதவி புரிவதினால், நம் கர்மாவும் அதனுடன் கழிந்து போகும். அதனால் தான் கலியுகத்தில் "அன்னத்துக்கு" மிஞ்சின தர்மம் இங்கு இல்லை என்று பெரியவர்கள் சொல்கிறார்கள்.

2. பிறர் உண்ணும் இடத்தருகில் நின்று தும்முவது, துப்புவது போன்ற அசுத்தங்களை பிறர் செய்யக்கூடாது.

3. உண்ணும் உணவால் உடல் மேன்மை பெற பெரியவர்கள் அளவாக உண்ணச் சொன்னார்கள். எப்படி? உண்ணும் முன் சுத்தமான நீரால் காலை கழுவிவிட்டு அமர வேண்டும். காலில் உள்ள நீர் உலர்ந்ததும் சாப்பிடுவதை நிறுத்திவிடவேண்டும். இது தேவைக்கு சாப்பிடுவதை தெரிந்துகொள்ள ஒரு அளவுகோல்.

4. மிளகு ஒரு நல்ல மருந்து. தினமும் சிறிதளவு உணவில் சேர்த்துக்கொள்ள மறவாதீர்கள். இது எந்த விஷத்தையும் அறுத்துவிடும். பத்து மிளகிருந்தால் பகைவன் வீட்டிலும் உண்ணலாம் என்கிற மொழி இதன் மகத்துவத்தால் வந்தது.

5. ஜீரகம் செரிமானத்துக்கு மிகவே உதவிபுரியும். அசைவம் சாப்பிட்டவர்கள் உடல் சுத்தி பெற 48 நாட்களுக்கு சீரகத்தை தண்ணீரில் இட்டு கொதிக்கவைத்து அருந்தி வந்தால் தாது சுத்தி ஏற்படும்.

6. உணவில் கடுகை எவ்வளவு முடியுமோ அவ்வளவு குறைத்துக் கொள்ளுங்கள். இது மிக வீரியமான ஒன்று. பின்னர் ஏதேனும் வியாதிக்காக மருந்து சாப்பிட்டால் மருந்து வேலை செய்யாது.

7. வாரத்தில் ஒரு நாள் உப்பை தவிர்த்து (இரு வேளையேனும்) விரதமிருங்கள். வைத்தியச் செலவை நிறைய அளவுக்கு தவிர்க்கலாம்.



நீர் மோரில் தக்காளிப் பழத்தைக் கசக்கிப் போட்டு கூடவே கறிவேப்பிலை, மல்லி இலை, பச்சை மிளகாய், சிட்டிகை பெருங்காயத்தூள் கலந்து சாப்பிட்டால் ருசியும் மணமும் சூப்பராக இருக்கும்.

பன்னீர் தயாரித்த பின் மீதமாகும் நீரில் சப்பாத்தி, பூரிக்கு மாவு பிசைந்தால் அவை மிகவும் மென்மையாக வரும்.

தயிர்வடை செய்யும் போது உளுத்தம் பருப்புடன் ஐந்தாறு முந்திரிப் பருப்பையும் ஊறவைத்து அரைத்துச் செய்தால் சூப்பர் டேஸ்ட் தயிர்வடைதான்.

வடகம் மாவில் சிறிது சோம்பு கலந்து காய வையுங்கள். பொரித்து சாப்பிடும் போது சுவையாக இருக்கும்.

வத்தக் குழம்பு செய்யும்போது, கடுகு தாளித்தவுடன் மிளகாய்ப் பொடியை வறுத்துப் பின் புளியைக் கரைத்து விட்டால் குழம்பு மணமாக இருக்கும்.

மரவள்ளிக் கிழங்கை அப்படியே வேக வைத்துச் சாப்பிடுவதை விட அதில் கொஞ்சம் தேங்காய்த்துருவலும், சர்க்கரையும் சேர்த்து ஃப்ரிட்ஜில் வைத்துச் சாப்பிட்டால் மிகவும் ருசியாக இருக்கும்.

சேமியாவை 15 நிமிடம் வெந்நீர் விட்டு ஊற வைத்து அத்துடன் உப்பு, கறி வேப்பிலை, பெருங்காயம், ஒரு கரண்டி அரிசிமா கலந்து எண்ணெயில் உருட் டிப் போட்டால் கரகரப்பான பக்கோடா ரெடி.

# நடந்துகொண்டே உண்ணலாமா?



நடந்து செல்லும்போது கூட உண்ணும் வழக்கம் தற்போதைய அவசர உலகில் சகஜமாகி வருகிறது.

நண்பருடன் பேசும்போதோ, தொலைக்காட்சி நிகழ்ச்சிக்களைப் பார்க்கும்போதோ உண்பதை நமது மூளை ஓரளவு நினைவில் வைத்துக்கொள்கிறது.

ஆனால், நடப்பது போன்ற அதிகபட்சமாக திசை திருப்பும் விஷயம் :

"மூளைக்கு நாம் உணவு உண்பதை கொண்டு சேர்ப்பதே இல்லையாம். இதனால், அதிகமான உணவை நம்மை அறியாமலேயே உட்கொள்வதாக" தெரியவந்துள்ளது.

இங்கிலாந்தின் சர்ரே பல்கலைக்கழகம் 60 பெண்களிடம் ஓர் சிரியல் கட்டியை (நம்மூர் பொரிஉருண்டை போன்ற உணவு) அவர்கள் நடக்கும்போதோ, தொலைக்காட்சியை ரசிக்கும்போதோ அல்லது நண்பர்களிடம் பேசும்போதோ உண்ணக் கொடுத்தது.

அதன் பிறகு அவர்களிடம் ஆய்வறிக்கை தொடர்பான படிவத்தை நிரப்பித்தர சொன்னது. அந்த அறையில் ருசி குறித்த ஆராய்ச்சி எனக் கூறி சாக்லேட், கேரட் குச்சிகள், திராட்சை மற்றும் நொறுக்கு தீனிகளையும் வைத்திருந்தது.

அவர்கள் இதில் எந்த உணவை அதிகமாக உட்கொண்டனர்? என கண்காணித்ததில், நடந்து வரும்போது சிரியல் கட்டி எடுத்துக் கொண்டவர்கள் ஐந்து மடங்கு அதிக சாக்லேட்களை உண்டதாக தெரிய வந்துள்ளது.

எனினும், உண்ணும் உணவை கவனிக்க வேண்டும், கவனமின்றி உட்கார்ந்தபடி உணவு உட்கொண்டாலும் அது நமது உடல் எடை அதிகரிக்க காரணமாக இருக்கும் என ஆராய்ச்சியாளர்கள் எச்சரிக்கை விடுக்கின்றனர்.

இந்த ஆய்வறிக்கை சுகாதாரம் குறித்த உளவியல் பத்திரிக்கையில் வெளியிடப்பட்டுள்ளது.

உண்பதற்கு நேரம் ஒதுக்க முடியாவிட்டால், என்ன சம்பாதித்து என்ன பலன்? நமது உடலின் மீது நாம்தானே அக்கறை செலுத்த வேண்டும்.

# உங்க துணைக்கு உடல்உறவில் நாட்டமில்லையா? இந்த 4 காரணமாக இருக்கலாம்!



தாம்பத்தியம் என்பது இல்லறத்தின் ஒரு அங்கம். ஆரம்பத்தில் இருக்கும் ஈர்ப்பும், அணைப்பும்நாட்கள் செல்ல, செல்ல குறைவது இயல்பு. ஆனால், சிலரது இல்லற வாழ்க்கையில் முற்றிலுமாக தாம்பத்தியம் நடுவயதில் தடைப்பட்டுபோவதும் உண்டு. இது இருவருக்கும் உடன்பட்டு நடந்தால் பிரச்சனை ஏதும் இல்லை.

ஒருவேளை ஒருதலைப்பட்சமாக தாம்பத்தியத்தில் ஒருவர் மட்டும் பிடிவாதம் பிடித்தோ அல்லதுவிருப்பம் இன்றியோ இருந்தால் கண்டிப்பாக இயல்பான இல்லற வாழ்க்கையில் இதனால் பலபிரச்சனைகள் எட்டிப்பார்க்க தான் செய்யும்.

தாம்பத்தியம் என்பது யோகாவிற்கு இணையாக மனதை ஒருமுகப்படுத்த உதவுகிறது எனஅறிவியல் ஆராய்ச்சியாளர்கள் கூறுகின்றனர். மேலும், மன அழுத்தம் அதிகரிக்காமல் இருக்கவும்தாம்பத்திய உறவு உதவுகிறது.

இதில், தடை ஏற்படுவது, விருப்பமின்றி இருப்பது, தாம்பத்தியம் இல்லாத இல்லறத்தில் நீடிப்பதுபோன்ற சிக்கலில் இருந்து வெளிவர என்ன செய்ய வேண்டும் என காணலாம்.

மருத்துவ பரிசோதனை! நீரிழிவு, உடல் பருமன் ஹார்மோன் சமநிலை இன்மை போன்ற உடல்நலகுறைபாடுகளால் கூட தாம்பத்திய உறவில் நாட்டம் இல்லாமல் போகலாம். மேலும், மனஅழுத்தம் காரணமாக கூட சில தாம்பத்திய உறவை தவிர்க்கலாம். எனவே, நீண்ட நாட்கள்தாம்பத்திய உறவு இல்லாமல் இல்லறம் நடந்து வருகிறது எனில், மருத்துவரை கண்டுபரிசோதனை செய்துக் கொள்வது நல்லது.

நம்பகம்! உறவில் நம்பகத்தன்மை குறைந்துவிட்டாலும் கூட தாம்பத்திய உறவில் ஈடுபட நாட்டம்இருக்காது. வேண்டாத சந்தேகங்கள், நடத்தை போன்றவை கூட இதற்கு முக்கிய காரணமாகஇருக்கலாம். எனவே, கணவன், மனைவி இருவரும் நேரம் ஒதுக்கி ஒருவருடன், ஒருவர் மனம்திறந்து பேச வேண்டியது அவசியம்.



ரொமான்ஸ் முக்கியம்! இத்தனை வயது வரை தான் ரொமான்ஸ் செய்ய வேண்டும், இந்த வயதுக்கு மேல் ரொமான்ஸ்செய்யக் கூடாது என்பதில்லை. இந்த எல்லை கோட்டை முதலில் அழியுங்கள். கட்டியணைத்துகொள்வது, முத்தமிட்டுக் கொள்வது, கொஞ்சிக் கொள்வது எல்லாம் உங்கள் உறவில் இறுக்கம்மற்றும் இணக்கம் குறையாமல் இருக்க பாதுகாக்கும் கருவிகள். இதை அழித்து விட வேண்டாம்.

ஆலோசனை! ஆலோசகர், நெருக்கமான நண்பர்கள், நம்பகமான உறவினர்களிடம் இதுக்குறித்து பேசலாம். ஆனால், அவர் இதை வெளியே யாரிடமும் கூற மாட்டார் என்ற நம்பிக்கை இருந்தால் மட்டும்பகிர்ந்து கொள்ளுங்கள். இதன் மூலம் ஏதேனும் யோசனை அல்லது கருத்து கிடைக்கும். அதன்மூலம், உங்கள் உறவில் தாம்பத்தியத்தை மீண்டும் மீட்டெடுக்க முடியும். இன்பமான,மகிழ்ச்சியான வாழ்க்கையை வாழ முடியும்.

## இரண்டு பெண்ணுறுப்புடன் வாழும் அதிசய பெண்




நமது உலகில் ஆச்சரியங்களுக்கும், அதிசயங்களுக்கும் பஞ்சமே கிடையாது. அதிலும் மனிதவாழ்க்கையில் இது ஏராளம் என கூறலாம்.பெண்களின் பிறப்புறுப்பு உணர்ச்சிகள் பற்றி தெரிந்துக் கொள்ள வேண்டியவைகள்!! இரண்டு, கண்,காது, கை, கால், சிறுநீரகங்கள் எல்லாம் ஒகே, இரண்டு பெண்ணுறுப்பு எப்படி என ஆச்சரியமாகஉள்ளதா?

இவர் இந்த வகையில் முதலாவது பெண் அல்ல, இவரை போல பலர் இருக்கின்றனர். சற்றே வினோதமாக இருப்பினும், தனது இல்லறம் மற்றும் தாம்பத்தியம் பற்றி இவர் அந்த கலந்துரையாடலில் நேரடியாக பேசி யுள்ளார்.

இந்த அதிசய பெண்ணுக்கு இரண்டு கருப்பை, இரண்டு, கருப்பை வாய் மற்றும் இரண்டு பெண்குறிகள் என எல்லாமே இரண்டு இரண்டாக உள்ளது என இந்த கலந்துரையாடலில் கூறியுள்ளார்.மேலும், இது பற்றி தனது 16வது வயதில் ஒருமுறை சிகிச்சையின் போதுதான் மருத்துவர் கூறிதெரியவந்தது எனவும் தெரிவித்துள்ளார்.இவரது தோழிகள், தோழர்கள் உறவினர் சிலரும் கூட இது குறித்து வெளிப்படையாக கூறிய போதுநம்பவில்லை என இவர் கூறியுள்ளார். இவரது காதலரும் கூட ரெடிட்-ல் கலந்துரையாடலின்போது தான் இவருடன் காதல் உறவில் இணைந்துள்ளார்.

இவரால் இரண்டு கருப்பை மூலமாகவும் தனித்தனியே ஒரே நேரத்தில் கருத்தரிக்க முடியும் எனமருத்துவர்கள் கூறியுள்ளனர்.இவருக்குசுகப்பிரசவத்திற்கான வாய்ப்புகள் மிகவும் குறைவு.

## வெள்ளி மங்கை விரலில் வைரம்: காதல் களம் ஆன ஒலிம்பிக்



ரியோ டி ஜெனீரோ ஒலிம்பிக் மைதானத்தில் தங்கம், வெள்ளி, வெண்கலப் பதக்கங்களைத் தாண்டி இதயங்களை வெல்லும் நிகழ்வுகள் நடைபெற்றிருக்கிறது. அது அனைவரது கவனத்தையும் கவர்ந்திருக்கிறது.

சீனாவின் முன்னணி நீச்சல் வீராங்கனைகளில் ஒருவர் ஹே சி (25). இவர் கடந்த ஞாயிற்றுக்கிழமை நடந்த 3 மீற்றர் ஸ்பிரிங்போர்டு பிரிவு நீச்சல் போட்டியில் வெள்ளிப் பதக்கம் வென்றார்.

வெள்ளி வென்ற அவருக்கு வைரம் பரிசாகக் கிடைக்கும் என அவர் நினைக்கவில்லை. ஆம், வெள்ளிப் பதக்கம் பெற்றுவிட்டு மைதானத்தின் நடுவே வந்து நின்ற ஹே சி அருகே சென்ற அவரது காதலர் கின் காய் (30) ஒற்றைக் காலால் மண்டியிட்டு ஒரு வைர மோதிரத்தை எடுத்து ஹே சி-யிடம் நீட்டி திருமண பந்தத்துக்கு அனுமதி கோரினார். நெகிழ்ந்து போனார் ஹே சி. கின்னின் காதல் பரிசை ஏற்றுக் கொண்டார்.

கின் காயும் நீச்சல் வீரரே. அவர் ரியோ ஒலிம்பிக்ஸில் வெண்கலப் பதக்கம் வென்றுள்ளார்.

கின்னின் காதல் பரிசு குறித்து ஹே சி கூறும்போது, "அவர் என்னிடம் இன்று தனது திருமண எண்ணத்தை தெரிவிப்பார் என நான் சற்றும் எதிர்பார்க்கவில்லை. மோதிரத்தை கையில் ஏந்தியபடி கின் அடுக்கடுக்கான வாக்குறுதிகளை தெரிவித்தார். ஆனால் என் வாழ்நாள் முழுவதும் நம்பிக்கைக்குரிய நபராக இருப்பேன் என கின் கூறியது என்னை மிகவும் நெகிழ வைத்தது" என்றார்.

## கட்டிப்பிடி வைத்தியம்



நாம் அனைவருமே ஒரே குணாதிசயங்கள் கொண்டிருப்பது இல்லை. இது, வெறும் நடை, உடை, பாவனை என்று மட்டுமில்லாமல். ஒரு விஷயம் அல்லது சூழ்நிலையில் நாம் எடுக்கும் முடிவுகள், பழக்கவழக்கங்கள், திட்டுவது, கட்டியணைப்பது என ஆதி முதல் அந்தம் வரை அனைத்திலும் ஒவ்வொருவரும் ஒவ்வொரு பாணியில் தான் செயல்படுத்துகிறோம். இதில், அன்பை, உறவில் இருக்கும் நெருக்கத்தை வெளிப்படுத்தும் கட்டிபிடிப்பதை வைத்து ஒருவர் எப்படிப்பட்ட நபர், அதன் மூலம் அவர் என்ன நினைக்கிறார் என்பதை யூகிக்க முடியும். இந்த பத்து வகைகளில் நீங்கள் எப்படி என்றும் தெரிந்துக் கொள்ளலாம் வாருங்கள்...

பொக்கெட்டில் கைப்போடுவது! போக்கிரி படத்தில் ஓர் பாடலில் விஜய், அசினுடன் இப்படி கைப்போட்டு நின்றுக் கொண்டிருக்கும் காட்சி தான் பலருக்கும் நினைவில் வந்து நிற்கும். இப்படி கட்டிப்பிடிப்பது நீங்கள் ரிலாக்ஸாக, பாதுகாப்பாக உணர்கிறீர்கள் என்பதை வெளிப்படுத்துகிறதாம்.

நேராக பார்த்து கட்டிப்பிடிப்பது! கட்டிபிடிக்கும் போது துணையின் கண்களை நேராக பார்த்தபடி இருப்பதில் ஓர் உயிர் இருக்கிறது. உலகத்திலேயே நீங்கள் அவரை மிகவும் நேசிக்கும் தருணமாக அது இருக்கும் என்பதை வெளிப்படுத்தும்.

தோள்களில் கைபோடுவது! தோள்களில் கைபோட்டு செல்லும் பழக்கம் காதலை வெளிப்படுத்துவதை விட, தோழமையை தான் வெளிப்படுத்துகிறது. எனவே, இவர் காதலை விட தோழமையாக தான் பழகுகிறார் என அர்த்தம்.

ஓரமாக நின்று கட்டிபிடிப்பது! இதுவும் நட்புணர்ச்சியை வெளிப்படுத்தும் முறை தான். இது, தோழமையை நெருக்கமாக்கும் விதமாக இருப்பதாகும்.

தோள் வழியாக இடுப்பை கட்டியணைப்பது! இந்த வகையில் கட்டிப்பிடிப்பது, ஆறுதல் மற்றும் பாதுகாப்பு உணர்வதை வெளிப்பட்டுவது ஆகும்

முதுகை தேய்ப்பது! இறுக்கமாக முதுகை தேய்ப்பது போன்று கட்டியணைப்பது, ஆறுதல் கூறும் வகையிலான ஒன்றாகும்.

நடனம்! நடனம் ஆடிக் கொண்டிருக்கும் போது மெதுவாக கட்டியணைப்பது. அவர் ரொமான்ஸ் செய்ய விரும்புகிறார் என்பதை வெளிப்படுத்தும்.

இறுக்கமாக! உங்கள் காதலர் திடீரென இறுக்கமாக கட்டியணைப்பது, அவர் உங்களை விட்டு விலக மறுக்கிறார் என்பதை வெளிப்படுத்துகிறது.


தூக்குவது! கட்டியணைத்து மெல்ல தூக்கி கொஞ்சுவது, உங்கள் துணை உறவில் ஈடுபட விருப்பம் காட்டுகிறார் என்பதை வெளிப்படுத்துகிறது.



## போட்டிச் சிறுகதை 15

பெயர் : மதனவேந்தன் - வனஜா
முகவரி : கண்ணகி குடியிருப்பு சுன்னாகம்
தெற்கு சுன்னாகம்
சிறுகதை : ஊருக்குப் போவோம்

"வேளைக்கு வெளிக்கிடுங்கோ பஸ் வரப் போகுது" முற்றத்தில் நின்று சேட் கையை மடித்தவாறு உள்ளே வெளிக்கிட்டுக் கொண்டிருக்கும் பிள்ளைகளுக்கு குரல் கொடுத்தான் வரதன்.




வரதனின் சொந்த இடம் மயிலிட்டி அங்கிருந்து தன் தாய்க்குப் பின்னால் இடம் பெயர்ந்து வந்தவன் இன்று இத்தனை வருடங்களுக்கு பின்னர் தான் பிறந்து வளர்ந்த மயிலிட்டி குளத்தடி அம்மன் கோயிலுக்கு தனது பிள்ளைகளோடு போகின்றான்.

"தம்பி ரமேஸ்.....! அம்மாவை கொண்டு வந்து கதிரையிலை இருத்துங்கோ........" வரதனின் அண்ணன் இறந்ததன் பின்னர் தாயும் நோயாளி ஆகிவிட்டார். வரதனுக்கு நான்கு பிள்ளைகள் நால்வரும் படிக்கின்றனர். இரண்டு ஆண்பிள்ளைகளும் இரண்டு பெண் பிள்ளைகளும். மூத்தவன் ரமேஸ் உயர்தரம் படிக்கின்றான்.

பஸ் மயிலிட்டியை நோக்கி போய்க் கொண்டிருந்தது. பிள்ளைகள் காங் கேசன் துறையின் அழகை ரசித்துக் கொண்டிருந்தனர். வரதன் கடைக்குட்டி அனுவை மடியில் வைத்து ஒவ்வொரு இடங்களையும் காட்டி இன்னின்ன இடங்களென்று சொல்லிக் கொண்டு வந்தான். இது தான் கடற்கரை அம்மன் கோயில் பார் ...... பிள்ளை!

"என்னப்பா பெரிய கோயிலா இருக்கே. இது முந்தியே கட்டினதா?"

"ஓம் பிள்ளை இது முந்தி கட்டினது தான். தேர் கூட இருக்கு பார்:"

மகள் ஆர்வமாக பஸ்சிற்கு வெளியே தலையை நீட்டி எட்டிப் பார்த்தாள். கடற்கரை தெரியவும் குஷியாகி விட்டாள். "அப்பா கடற்கரையைப் பாருங்கோ. எவ்வளவு அழகா இருக்கு. இதிலை இறங்குவம். கடலை பார்த்திட்டு வருவம்" என்று மகள் அனு அடம் பிடித்தாள்.

"இதிலை இறக்க மாட்டினம். முதல்ல கோயிலுக்கு போவம். பிறகு கடற்கரைக்கு வருவம்."

பஸ்சால் இறங்கி தனது சொந்த மண்ணில் கால் வைத்ததும் மண்ணில் புரண்டு அழ வேணும் போல இருந்த மனத்தைத் கஸ்ரப்பட்டு அடக்கிக்கொண்டான். ஆனால் தாரை தாரையாக வழிந்தோடிய கண்ணீரை அடக்க அவனால் முடியவில்லை.

"வரதா.......... இப்பதான் வாறியளோ ......? "என்ற குரல் கேட்டதும் வரதன் திரும்பிப் பார்த்தான். தன்னுடைய ஐந்தாம் ஆண்டு வரை மயிலிட்டியில் ஒன்றாக படித்த முருகேசன் நின்று கொண்டிருந்தான்.

உள்ளுக்கு விடேல்லை கோயிலுக்கு அருகில் ஒழுங்கை கரையிலை உள்ள காணிகளை மட்டும் பார்க்கலாம். தான் படித்த பாடசாலையைத் தன் பிள்ளைகளுக்கு காட்டினான் வரதன்.

ஒருவாறு கோயில் தரிசனங்களை முடித்துக் கொண்டு வீடு வந்து சேர்ந்தார்கள். வரதன் பருத்துறை கடற்கரையில் மீன் எடுத்து சுன்னாகம் ஊர் மனைகளுக்குள் வியாபாரம் செய்து வந்தான். அங்கிருந்து இவ்வளவு தூரம் சைக்கிள் ஓடுவதென்பது கஸ்ரமான விடயம். அவனும் ஒரு மோட்டார் சைக்கிள் வாங்கலாம் என்று பார்க்கிறான். அதுவும் முடியவில்லை.

பங்குனி மாத வெய்யில் பதினொரு மணிக்கே சுட்டெரித்தது. கடையில ஒரு ரீ குடிப்பம் என எண்ணியவாறே சைக்கிளை வெளியே நிறுத்திவிட்டு கடைக்குள் போனான். கடைக்குள் அவனது நண்பன் மோகன் அவனைக் கண்டதும்,

"என்ன மச்சான் இண்டைக்கு லேற்றா போச்சுது? நீ வரமாட்டாய் எண்டெல்லோ நினைச்சன்" என்றான்.

"ஓ மகளுக்கு காய்ச்சல். தெல்லிப்பளை ஆஸ்பத்திரிக்கு அனுப்பிப்போட்டு வர நேரம் போட்டுது."

நலன்புரி நிலையங்களில் வாழும் சிறுவர்களுக்கு அடிக்கடி வருத்தங்கள் வந்து கொண்டிருக்கும். மழை காலத்திலும் சரி வெய்யில் காலத்திலும் சரி இந்த நிலை மாறாது. இதற்கான காரணம் நெருக்கமான குடியிருப்புகள் தான். மழைகாலங்களில் முகா மில் எல்லா வீட்டு முற்றத்திலும் வெள்ளம் நிறைந்து நிற்கும். வெள்ளத்தை ஓட வெட்டிவிட்டால் இன்னொரு முத்தத்தில் போய் நிற்கும். தண்ணி தேங்கி நின்று சேறும் சகதியுமாக இருக்கும். இதனால் மழை காலங்களில் நுளம்பு பெருகி கன பேருக்கு டெங்கு காச்சல் வரும்.

"இனி வெய்யில் காலத்திலை அம்மன் வருத்தம் வந்து எங்கடை பிள்ளையள் அவதிப்படுங்கள். சரி சரி நேரம் போட்டுது வாறன்" என்றவாறே சைக்கிள் மிதிக்க ஆரம்பித்தான்.

வரதனின் சம்பாத்தியத்தில் அன்றாட சாப்பாட்டு செலவுக்கும் பிள்ளைகளின் படிப்பு செலவுகளை செய்யவுமே சரியாக இருந்தது. மிச்சமென்று எதுவும் இல்லை. அவன் ஒரு நாள் வியாபாரத்திற்கு செல்லாமல் விட்டாலும் மறுநாள் உணவுப்பொருட்கள் வாங்க பணமில்லாது வேறுயாரிடமாவது கடனாக வாங்கி சமைக்க வேண்டிய நிலை. அப்படி ஒரு நாள் அவன் சுகமில்லாமல் நிண்ட போது வாற மாதம் வட்டி போட்டு தாறனென்று சொல்லி வாங்கின காசு இரண்டு மாதமாகியும் இன்னும் குடுக்கேல்லை.

பொன்னம்மாக்கா கடனுக்கு வாங்கிய காசைக் கேட்டவா என்று ராணி சொன்னவள் ......... ஒரு ஆடு மாடு கோழிகளை வளர்த்தா கூட கடனில்லாமல் சீவிக்கலாம். இங்க அதுக்கும் இடவசதிகள் இல்லை.

சிறுமிகள் மீதான துஸ்பிரயோகங்கள் நாளுக்கு நாள் அதிகரித்துக் கொண்டு வருவதனால் வரதன் தனது பெண் பிள்ளைகளை தனியார் கல்வி நிலையத்தில் இருந்து நிறுத்திவிட்டான். தற்போதைய நிலைமையில்பெண்பிள்ளைகளை வளர்ப்பதென்பது வயிற்றில் நெருப்பை கட்டி கொண்டு இருப்பதற்கு சமம்.

அப்பம்மா எழும்புங்கோ வெளியிலை கதிரையிலை இருப்பம். மரகதத்தின் கையை பிடித்துக் கூட்டிக்கொண்டு வந்தாள் அனு. மரகதம் யாருடனும் அதிகமாக கதைக்க மாட்டாள். கதை கேட்டால் மாத்திரமே பதில் சொல்லுவாள். அதற்கான காரணம் மூத்த மகன் முருகேசன் குடும்பத்தின் இறப்பு தான்.

வன்னிப் பிரச்சினையின் போது வரதன் அவனது அண்ணன் முருகேசன், தாய் மரகதம் எல்லோரும் வன்னியில் தான் இருந் தார்கள். முருகேசன் விசுவமடுவில் இருந்தான். தாய் மரகதமும் அவனுடன் தான் இருந்தாள். வரதன் மல்லாவியில் இருந்தான். மாதத்தில் இரண்டு தடவை முருகேசன் மல்லாவியில் இருக்கும் தம்பி வீட்டுக்கு குடும்பத்தோடு வருவான். இவர்களும் குடும்பத்தோடு அண்ணன் வீட்டுக்கு போய்வந்தார்கள்.

இவ்வாறு மகிழ்ச்சியாக போய்க் கொண்டிருந்த அவர்களது வாழ்க்கையில் "போர்" என்ற கொடிய அரக்கன் புகுந்தான். இடம் பெயர்வுகளால் நாளுக்கு நாள் ஒவ்வொரு இடங்களில் வாழ வேண்டிய நிலை ஏற்பட்டது. தெரிந்தவர்களிடம் எல்லாம் அண்ணன் முருகேசன் குடும்பத்தை எங்கேயாவது கண்டதோ? என்று விசாரிப்பான் வரதன். இறுதியாக ஒருவர் வள்ளிபுனத்தில் முருகேசனைக் கண்டதாக கூறினார்.

"ராணி... ராணி...! அண்ணன் வள்ளிபுனத்தில் இருக்கிறாராம். வெளிக்கிடுங்கோ ... அண்ணையாக்களை தேடிக்கண்டு பிடிச்சு வாழ்வோ, சாவோ ஒண்டா இருப்பம்" என்றவாறு சாமான்களை சைக்கிளில் கட்ட ஆரம்பித்தான். வரதன் வள்ளிபுனத்தில் எங்கு தேடியும் அண்ணன் குடும்பத்தை காணாதது ஏமாற்றமாக இருந்தது.

இறுதியாக முள்ளிவாய்காலில் வரதனைக் கண்ட ஒருவர் சொன்னார். முருகேசனை முள்ளிவாய்க்கால் ஆஸ்பத்திரிக்கு பக்கத்தில் இருந்ததை தான் கண்டதென்று. வரதனுக்கு மகிழ்ச்சி தாங்கவில்லை. இப்பவே போய் அண்ணன் குடும்பத்தையும் அம்மாவையும் கூட்டிவாறன் என்று சொல்லிவிட்டு போனான். வீதியோரத்தில் குந்தியிருந்து குளறிக் கொண்டிருந்த தன் தாயைக் கண்டதும் அதிர்ச்சியானான் வரதன்.

"அம்மா.. அம்மா அண்ணையாக்கள் எங்கை?" வரதனைக் கண்ட தாய் அவனை கட்டிக் கொண்டு ஒவென கதறினாள். "ஐயோ.. குடும்பத்தோடை அண்ணை போட்டானேடா"

(தொடர்ச்சி 22 இல்)

இச்சிறுகதை பரிசுக்குரியதென நீங்கள் சிபார்சு செய்ய விரும்பினால், இப்பத்திரிகையில் பிரசுரிக்கப்பட்டிருக்கும் கூப்பனை நிரப்பி எமக்கு அனுப்பி வைக்கவும்.

## சிறுகதைப் போட்டிக்கான கூப்பன் - 15

தெரிவு செய்யப்படும் சிறுகதைத் தலைப்பு : ..........................................
..........................................
சிறுகதையின் இலக்கம் : ..........................................
எழுதியவர் பெயர் : ..........................................
சிபார்சு செய்பவர் பெயர் : ..........................................
முகவரி : ..........................................
..........................................
தொலைபேசி இலக்கம் : ..........................................
.......................................... ஆகிய நான்
இச் சிறு கதையை வெற்றிக்கு சிபார்சு செய்கிறேன்.

..............................
ஒப்பம்

கூப்பனை அனுப்ப வேண்டிய முகவரி
**தினச்செய்தி சிறுகதைப் போட்டி**
**தில்லைக்கட்டி வீதி,**
**சுன்னாகம்.**




ஜெ. யோகராஜ்


# தேடல்பொறி, இணையம், இணையத்தளம் மற்றும் மின்னஞ்சல்

அடுத்து, கணினி ஊடுருவல் தாக்கல் பற்றியும் அது தொடர்பான மேலதிக விபரங்களை அறிந்து கொள்ள மின்னஞ்சல் மூலம் என்னுடன் தொடர்புகொண்ட அனைவருக்கும் நன்றியை தெரிவித்துக் கொள்கிறேன். வாசகர்கள் கேட்ட கேள்விகளுக்கு உடனுக்குடன் பதில்களையும், விளக்கங்களையும் வழங்கியிருந்தேன்.

இன்றுநாம் ஒரு மின்னஞ்சலில் எவ்வாறு குழு மின்னஞ்சலை உருவாக்குவது என்றும், இணையத் தொடர்பில் உள்ள பிரச்சினைகள் பற்றியும் பார்ப்போம்.


குழு மின்னஞ்சல் என்றால், group mail என்று ஆங்கிலத்தில் குறிப்பிடுவர். குழு மின்னஞ்சல் மூலம் பல நன்மைகள் உண்டு. ஒரு மின்னஞ்சல் செய்தியை ஒரே நேரத்தில் பலருக்கு அனுப்பிவைக்க வேண்டுமாயின், அதனை ஒரு குழவாக அமைத்து, குழுவின் மின்னஞ்சலுக்கு அனுப்பி வைப்பதன் மூலம் அனைவருக்கும் அந்த செய்தியை அனுப்பலாம். குறிப்பிட்ட சில மின்னஞ்சல் பாவனையாளர்களுடன் நாம் தொடர்ந்தும் செய்திப் பரிவர்த்தனைகளை செய்ய விரும்பினால், அதனை ஒரு குழு மின்னஞ்சல் மூலம் செய்வது மிகவும் இலகுவானதாகும். இதன் மூலம் குறிப்பிட்ட குழுவில் உள்ள அனைத்து மின்னஞ்சல் பாவனையாளர்களை முகவரிகளை ஒவ்வொரு செய்திப் பரிவர்த்தனையின் போதும், மீண்டும் மீண்டும் எழுதவேண்டிய அவசியம் இருக்காது. இதனால், இவ்வாறான செய்திப் பரிவர்த்தனையின் போது ஒன்று அல்லது இரண்டு மின்னஞ்சல் முகவரிகள் விடுபட்டுவிட்டன என்ற பிரச்சினையையும் நாம் எதிர்கொள்ள வேண்டியதில்லை. மேலும் எமது தொடர்புகளை குழு மின்னஞ்சல் முகவரியோடு மட்டும் வரையறுத்துக் கொள்ளலாம். குழு மின்னஞ்சல் முகவரி ஒரு சிறிய முகவரியாக இருப்பதனால், அதனை ஞாபகத்தில் வைத்திருப்பது இலகு. அதேவேளை, ஒருமின்னஞ்சல் செய்தி எவருக்கெல்லாம் அனுப்பப்படுகிறதோ அவர்கள் தொடர்பான மின்னஞ்சல் விபரங்களை ஏனையோருக்கு தெரியப் படுத்தாமல் வைத்திருக்க குழு மின்னஞ்சல் முகவரி உதவி செய்யும்.

அடுத்து, உதாரணமாக Google இணையத்தளத்தால் வழங்கப்படும் குழு மின்னஞ்சல் வசதி எவ்வாறு பயன்படுத்தப் படுகிறது என்று பார்ப்போம். Google குழு நிலை மின்னஞ்சலை பெற வேண்டுமாயின், அதற்கு முதலில் நாம் சாதாரண Google மின்னஞ்சல் பாவனையாளராக உருவாக வேண்டும். இந்த வசதியைப் பெற்றுக் கொள்ள http://groups.google.com/ எனும் இணையத்தள முக வரியோடு தொடர்பினை ஏற்படுத்த வேண்டும். அந்த முகவரிக்கான பட விளக்கம் கீழே தரப் பட்டுள்ளது.





http://groups.google.com/எனும் முகவரி இங்கே காட்டப்பட்டுள்ளது.

இந்த பட விளக்கத்தில் create a group எனும் இந்தத் தெரிவை மேற்கொள்வதன் மூலம் மின்னஞ்சல் குழு அமைப்பிற்கான முதல் படிக்கு முன்னேறலாம். இந்தத் தெரிவை மேற்கொண்டதும் கீழே தரப்பட்ட திரை காண்பிக்கப்படும்.




மேல் காட்டப்பட்ட திரையில் email, password எனும் கூண்டுகளில் உங்கள் google மின்னஞ்சல் முகவரியை type செய்து அடுத்த திரைக்கு முன்னேறலாம். அடுத்த திரை கீழே காட்டப்பட்டுள்ளது.




இந்தத் திரையில் இங்கு குழுவின் பெயரை எழுத வேண்டும். குழுவுக்கான சிறு அறிமுகத்தை இங்கு காட்ட வேண்டும். அதன் பின்னர் அதே திரையில் காட்டப்பட்டுள்ள அங்கத்துவ இணைப்பு தொடர்பான தெரிவுகளில் ஒன்றை நன்கு வாசித்து அறிந்த பின்னர் தெரிந்தெடுக்க வேண்டும். அதன் பின்னர் கிடைக்கும் அடுத்த திரையில் இந்தக் குழுவுக்கான அங்கத்தவர்களின் மின்னஞ்சல் முகவரிகளை இணைத்துக் கொள்ளவேண்டும். அந்த மின்னஞ்சல் முகவரிகள் இலகுவாக உங்களுக்கு திரையிலேயே காட்டப்படும்.

இது விடயம் தொடர்பான மேலதிக விபரங்களை வாசகர்களுக்கு இருக்கும் கேள்விகளை பொறுத்து, அடுத்த வாரங்களில் வழங்குவோம்.

அடுத்து, இணையத்தோடு தொடர்பில் உள்ளவர்கள் சாதாரணமாக எதிர்கொள்ளும் பிரச்சினைகள், அதற்கு கணினி அல்லது இணையத்தளம் வழங்கும் அறிவித்தல்களை எவ்வாறு புரிந்து கொள்வது என்பதுபற்றிப்பார்ப்போம். கீழேதரப்பட்டுள்ள error messages அட்டவணையையும் அதன் விளக்கத்தையும் பார்ப்போம்.

இதன் தொடர்ச்சியை அடுத்தவாரம் வழங்குவோம். அதாவது, இணையத்தில் எதிர்கொள்ளப்படும் பிரச்சினைகள் மற்றும் அதனால் திரையில் காட்டப்படும் தவறு தொடர்பான தகவல்கள், அவற்றை எவ்வாறு தீர்த்துக் கொள்வது என்பது பற்றிய விளக்கங்களும் வழங்கப்படும்.

| Error message (தவறு பற்றிய விளக்கம்) | தமிழ் விளக்கம் |
| --- | --- |
| 400 - Bad request | இது ஏற்படுவதற்கான காரணம், நாம் டைப் செய்த இணையத்தள முகவரி பிழையானது என்பதையே எடுத்துக் காட்டுகிறது. |
| 401 - Unauthorized | இது குறிப்பிட்ட இணையத்தளத்திற்குச் செல்ல எமக்கு அனுமதியில்லை என்று பொருள்படும். அதாவது, நாம் வழங்கிய, இந்த இணையத்தளத்திற்கான பெயர் மற்றும் இரகசிய எழுத்துக்கள் பிழையானவை என்றும் கருதப்படும். |
| 403 - Forbidden | இது இந்தகுறிப்பிட்ட இணையத்தள பக்கத்தை பார்ப்பதற்கு எமக்கு அனுமதியில்லை என்றே பொருள்படும். |
| 404 - Not found | இங்கு குறிப்பிட்ட முகவரி கொண்ட இணையத்தளம் ஒன்று இல்லையென்றே பொருள்படும். |

உங்களுக்கு கணினி தொடர்பான சந்தேகங்கள் மற்றும் கேள்விகள் இருப்பின் நீங்கள் கீழ் காணும் மின்னஞ்சல் முகவரிக்கு உங்கள் கேள்விகளை அனுப்பி வைக்கலாம்.
yogaraj35@gmail.com
email : yogaraj35@gmail.com)



# இப்படித்தான் பல் துலக்கணும்

அமெரிக்க நிறுவனமான Onvi பல் துலக்குவதற்காக electric toothbrush ஒன்றை அறிமுகப்படுத்தியுள்ளது.

பொதுவாக அனைவரும் காலை எழுந்தவுடன் பிரஷில் பேஸ்டை வைத்து வாயின் வலது, இடது பக்கம் தேய்த்து விட்டு பல் துலக்கும் கடமையை முடித்து விடுவோம். ஆனால் பற்கள் எந்த நிலையில் சுத்தம் ஆகியுள்ளது என்பதை கவனிக்க மாட்டோம்.

இந்த நிலையை சரிசெய்ய ஒரு electric toothbrush அறிமுகப்படுத்தப்பட்டுள்ளது. இதில் பேஸ்டை வைத்து பற்களில் வைத்தால் போதும் அது தனது வேலையை செய்ய ஆரம்பித்து விடும்.

இதில் சிறப்பம்சம் என்னவென்றால் உங்கள் பற்கள் எந்த அளவு சுத்தம் செய்யப்பட்டுள்ளது என்பதை இதில் பொருத்தப்பட்டுள்ள கமரா மூலம் உங்கள் ஸ்மார்ட் மொபைலில் பார்த்துக் கொள்ளலாம்.

இதன் மூலம் எடுக்கப்படும் புகைப்படங்களை உங்கள் பல் மருத்துவரிடம் காட்டி சிகிச்சையும் எடுத்துக் கொள்ளலாம்.

இது தவிர, ஒரு கண்ணாடி, பிராபி கப், ரப்பர் முனை மற்றும் ரப்பர் அளவு கோல் கொடுக்கப்பட்டுள்ளது. அடுத்த வருடம் விற்பனைக்கு வரும் இந்த சாதனம் 399 டொலருக்கு விற்கப்படவுள்ளது.



# உலகில் மிகப்பெரிய விலங்குகள்







உலகத்தில் நிறையவே விலங்குகள் உள்ளன. அவை நீளமாகவும் கட்டை யானவையாகவும் மிகப் பெரியவையாகவும் மிகப் பருமனை உடையவையாகவும் காணப்படுகின்றன. இங்கே நாங்கள் உல கிலுள்ள நீளமான சில விலங்குகள் குறித்து பார்ப்போம்.

### நீலத் திமிங்கிலம்

[The Blue whale]

இதனுடைய விஞ்ஞானப் பெயர் Balaenoptera musculus.

இது ஒரு கடல் வாழ் பிராணி. இது 30 மீற்றர் நீளம் அதாவது 98 அடி நீளம் உடையதாகும். மேலும் இது 180



மெற்றிக்தொன் எடை கொண்டது. இந்த திமிங்கிலத்தின் நாக்கு மாத்திரம் 2.7 மெற்றிக் தொன் ஆகும். அதாவது 5952 இறாத்தல் ஆகும். இதனுடைய இருதயம் மாத்திரம்600கிலோகிராம்ஆகும். அதாவது 1300 இறாத்தல் எடைகொண்டது.

ஒரு நாளைக்கு 3.6 மெற்றிக்தொன் அதாவது 7900 இறாத்தல் எடையுள்ள உணவுகளை உட்கொள்ளும் வழக்கம் கொண்டவை. கிட்டத்தட்ட கிரில் என அழைக்கப்படும் ஒரு வகை 40 மில்லியன் இறால் உயிரினங்களை உணவாக சாப் பிடுகின்றன.

### ஆபிரிக்க காட்டு யானை

[African Bush Elephant]

இது தான் நிலத்திலுள்ள பெரிய எடை யுள்ள மிருகம். இதில் ஆண் யானைகள் 6-7.5 மீற்றர் நீள மானவை. அதாவது 19.7- 24.6 அடி நீளமா னவை. இவை 3.3 மீற்றர் அதாவது 10.8 அடி கழுத்தளவில் உயரம் கொண்டவை.

ஒரு மிருகம் 6 தொன் அதாவது 13000 இறாத்தல் எடை கொண்டது. பெண் யானைகள் 5.4 தொடக்கம் 6.9 மீற்றர் நீளமானவை. அதாவது 17.7 முதல் 22.6 அடி நீளம் கொண்டவை. இவை 2.6 மீற்றர் அதாவது 8.9 அடி கழுத்தளவில் உயரமானவை.


இவை ஒரு தொன் எடை கொண்டவை. அதாவது 6600 இறாத்தல். இந்த பெரிய யானையைக் கொலை செய்வதற்கு வேறு எந்த மிருகமும் கிடையாது. ஆனால் பிறந்த யானைக் குட்டிகளை சிங்கம் முதலை புலி சிறுத்தை அல்லது சருகுப் புலி என்பன தாக்கும் வல்லமை கொண்டவை.

### ஒட்டகச் சிவிங்கி

[The Giraffe]

இதன் விஞ்ஞானப் பெயர் Giraffe. Giraffa camelopardalis. இது ஆபிரிக்காவிலுள்ள உயரமான மிருகங்களில் ஒன்று. இவை 16-20அடி உயரம் அதாவது ஐந்து மீற்றர் உயரம் கொண்டவை. இதன் எடை 16000 கிலோகிராம். அதாவது 3500 இறாத்தல் ஆகும்.

பெண் ஒட்டகச் சிவிங்கிகள் 830 கிலோ கிராம் எடை கொண்டவை. அதாவது 180 றாத்தல் எடை கொண்டவை. இந்த வகையான ஒட்டகச் சிவிங்கிகளுக்கு நீண்ட கழுத்து உள்ளது. இதன் கழுத்து



நீளம் இரண்டு மீற்றர் அதாவது ஆறு அடி ஏழு இஞ்சியும் ஆகும்.


### கடல் நாய்

[The Southern Elephant Seal]

இன்று உலகில் வாழ்கின்ற மிருகங் களில் மிகவும் பருமனானவை. பெரிய அளவிலான மிருகம் இந்தக் கடல் நாய் ஆகும். ஆண் கடல் நாயானது பெண் கடல் நாயிலும் பார்க்க 5 முதல் ஆறு மடங்கு பெரியவை. இவை 400 தொடக்கம் 900 கிலோ கிராம் எடை கொண்டவை. அதா வது 800 முதல் 2000 இறாத்தல் எடை கொண்டவை. இவற்றின் நீளம் 2.6 -3 மீற்றர்கள் ஆகும். அதாவது 8.5 முதல் 9.8 அடியாகும்.

ஆண் கடல் நாய் ஒன்றின் எடை 2800 முதல் 4000 கிலோ கிராம் ஆகும். அதாவது 4900 முதல் 8300 இறாத்தல் எடையாகும். இவற்றின் நீளம் 4.5 முதல் 5.8 மீற்றர் ஆகும். அதாவது 15 முதல் 19 அடியாகும். இவை ஒரு நாளைக்கு கடலில் மூழ்கி 20 நிமிடங்கள் கடலுக்குள் இருந்து கணவாய் மற்றும் மீன்களை உணவாக உட்கொள்கின்றன. இவை 400 முதல் 1000 மீற்றர் அதாவது 1330 முதல் 3330 அடி ஆழத்திற்குச் சென்று வரும் திறன் படைத்தவை.

இந்த நீர் யானைகள் கிட்டத்தட்ட இரண்டு மணித்தியாலங்கள் நீரில் மூழ்கி இருக்கும் வல்லமை கொண்டவை. கிட்டத்தட்ட 4600



அடி ஆழம் வரை அவற்றினால் செல்ல முடியும்.

இந்தகடல்நீர்யானையில்280வகைகள் உள்ளமை இங்கு குறிப்பிடதத்க்கதாகும்.

### உப்பு நீர் முதலை

[The Saltwater Crocodile]


இதன் விஞ்ஞானப் பெயர் Crocodylus porosus.



ஊர்வனவில் இது தான் மிகப்பெரிய வாழ்ந்து வரும் மிகப்பெரிய ஊர் வனவாகும். இவைவடஅவுஸ் திரேலியாவிலும் தென் கிழக்காசி யாவிலும் இந் தியாவின் கிழக் குக் கரையிலும் வாழ்ந்து வரு கின்றன. இதில் ஆண் முதலைகள் 409 முதல் 1000 கிலோ கிராம் நிறை கொண்டவை. அதாவது 900 முதல் 2200 இறாத்தல் ஆகும். இவற்றின் நீளம் 4.1 முதல் 5.5 மீற்றர் ஆகும். அதாவது 13 தொடக்கம் 18 அடி வரையாகும்.

ஆனால் வயது முதிர்ந்த ஆண் உப்பு நீர் முதலையானது 20 அடி நீளத்திற்கு அதிகமாகவும் வளரும். மற்றும் 1000 கிலோகிராம் அதாவது 2700 இறாத்தல் எடைக்கு அதிகமாகவும் இவற்றின் எடை இருக்கும்.

சாதாரண முதலைகள் 4.8 மீற்றர் அதாவது 16 அடி சராசரி நீளம் வரை வளரும். இந்த உப்பு நீர் முதலைகள் எந்தவொரு



மிருகத்தையும் கடலிலும் நீரிலும் பிடித்துச் சாப்பிடும் சக்தி கொண்டவையாகும்.

### பெரிய முயல்

[The Flemish Giant]

பண்டைய காலத்தில் வளர்க்கப்பட்ட முயல்கள் இவை. பெல்ஜியம் நாட்டில் இவை கூடுதலாக வளர்க்கப்பட்டன. 16 ஆம் நூற்றாண்டில் பெல்ஜியத்திலுள்ள Ghent பிராந்தியத்தில் வளர்க்கப்பட்டன. இவற்றின் எடை 12.7 கிலோகிராம் அதாவது 28 இறாத்தல் ஆகும்.

### மிகப் பெரிய எலி

[The Capy bara]

தற்சமயம் உலகிலுள்ள எலி வகை களில் இதுவே மிகப்பெரியது. இதன் விஞ்ஞானப் பெயர் Hydrochoerus hydrochaeris என்பதாகும். இவை தென் அமெரிக்காவின் ஆன்ட்ஸ் பிராந்தியத்தில் பெரிதும் வாழ் கின்றன. இவை தண்ணீர்ப் பாங்கான இடங் களில் கூட்டம் கூட் டமாக வாழும் எலி வகையாகும்.

மிகப் பருமனான எலும் புள்ள மீன்
[The Ocean Sunfish]



இவை பொதுவாக 1.5 மீற்றம் அதாவது 4.9 அடி நீளமானவை. இதன் உயரம் 0.9 மீற்றர் அதாவது மூன்று அடி உயரம் உடையவை.

(தொடர்ச்சி 15 இல்)

# ஆன்மீகம்



## சாதம் பிரசாதமாவது எவ்வாறு



அரிசியைக் கழுவி பானையில் இட்டு வேக வைத்தால் அது சாதம் தான். அதே சாதத்தை கடவுளுக்கு மனப்பூர்வமாக அர்ப்பணிக்கும் போது பிரசாதமாகி விடுகிறது. உறவினர் வீட்டுக்கு போனால் எங்கள் சொந்தக்காரரை பார்த்து விட்டு வருகிறோம் என்கிறார்கள்.


ஆனால் ஆலயம் சென்று வந்தால் சுவாமி தரிசனம் செய்து விட்டு வருகிறோம் என்று சொல்கிறார்கள். அது எப்படி மனிதனை பார்த்தால் வெறும் பார்வை என்றும் சுவாமியை கண்டால் தரிசனம் என்றும் ஒரே செயலை இரு வார்த்தைகளில் அழைக்கிறோம்?

உண்மையில் தரிசனம் என்பது என்ன? கோபுரத்தையோ, கொடி மரத்தையோ அல்லது வேறு தெய்வீக பொருட்களையோ தூரத்திலிருந்து காண்பது கூட எப்படி தரிசனமாகும் என்று பலருக்கு குழப்பம் வரும்.

அரிசியை கழுவி பானை யில் இட்டு வேக வைத்தால் அது சாதம் தான். அதில் என்ன புனிதத்தன்மை வந்து திடீர் என பிரசாதம் ஆகிவிடுகிறது?

கடவுளுக்கு மனப்பூர்வமாக அர்பணிக்கும் போது சாதாரண கூழாங்கல் கூட சாளக்கிராம கல்லாகி விடுகிறது. அது போல சாதாரண சாதமும் அன்போடு படைக்கும் போது பிரசாதமாகி விடுகிறது. ஒரு பொருளை வெறும் கண்ணால் பார்ப்பது திருஷ்டி மட்டும் தான். அதையே பக்திபூர்வமாக பார்ப்பது தான் தரிசனமாகும்.

## குளிக்காமல் விபூதி பூசலாமா?




நீராடியபின் விபூதி பூசுவது தான் சரியானமுறை. உடல்நலக்குறைவு, வயோதிகம், ஆபத்து நேர்ந்த காலத்தில் குளிக்காமல் பூசுவதால் தவறில்லை. உடல் தூய்மையை விட உள்ளத் தூய்மையே முக்கியம் என்றாலும், இதையே காரணம் காட்டி சோம்பலும் எட்டிப் பார்த்து விடும். மனித உடலில் நெற்றி என்பது மிக முக்கிய பாகம், அதன் வழியாக மிக அதிகமாக சக்தி வெளிப்படும், உள்ளிழுக்கவும் செய்யும். இது ஒரு வர்ம ஸாதனம் கூட. சூரிய கதிர்களின் சக்திகளை இழுத்து நெற்றி வழியாக கடத்தும் வேலையை திருநீர் செவ்வனே செய்யும், அதனால்தான் நெற்றியில் திருநீறு பூசுகிறார்கள். எனவே யாராக இருந்தாலும் குளியலுக்கு பிறகே திருநீறு பூச வேண்டும்.

## பழநி முருகனின் கோவண ரகசியம்

ஆறுபடைவீடுகளில் ஒன்றான பழநியில் அருளும் முருகனுக்கு ஞானப் பழம் என்ற பெயருண்டு. இங்கு முருகப்பெருமான், மாலையில் ராஜ அலங்காரத்தில் காட்சி தருவார். இது போலியான உலக வாழ்வைக் குறிக்கிறது. இவரே காலை வேளையில் கோவணத்துடன் காட்சியளிப்பார். நேற்று இருப்பது இன்றில்லை என்பதை இந்த வடிவம் காட்டுகிறது.

இந்த உலக வாழ்வு போலியானது. உன்னோடு நான் உடுத்தியிருக்கும் கோவணம் கூட வரப்போவதில்லை. ஏதுமில்லாமல் வந்தாய், ஏதுமில்லாமல் போவாய், என்று முருகப்பெருமான் இத்தலத்தில் உணர்த்துகிறார். இந்த ஞானத்தை உலக மக்களுக்கு வழங்கும் கனி போன்று திகழ்வதால் இங்கு முருகனுக்கு ஞானப்பழம் என்ற பெயர் ஏற்பட்டது. இதனால்தான், இங்கு வந்த அவ்வையாரும் முருகனை பழம் நீ! என்று அழைத்தாள். பழனி முருகன் கோவில் முருகனது அறுபடைவீடுகளில் ஒன்றாகும். இது தமிழ்நாட்டில், மதுரையில் இருந்து 100 கிமீ மேற்கே உள்ள பழனியில் அமைந்துள்ளது. இங்குள்ள முருகனது சிலை போகர் எனும் சித்தரால் உருவாக்கப்பட்டது. முருகனது கோவில் குன்றின் உச்சியில் அமைந்துள்ளது.

## வில்வம் புனிதமானது



வில்வம் - மிகவும் புனிதமாகக் கருதப் படும் இலைகளுள் ஒன்று. உலகில் பல்லாயிரக்கணக்கான தாவரங்கள் இருக்க, இந்த இலைக்கு மட்டும் ஏன் இந்த மதிப்பு? இது சிவனுக்கு அர்ப்பணிக்கப்படுவதாலா, இல்லை, இதன் இயற்கையான குணமே இது தானா? தெரிந்து கொள்ளுங்கள் இக்கட்டுரையின் மூலம் சத்குரு: ஏன், ஒரு இலை மற்றொன்றை விட புனிதமாக இருக்கிறது? இது ஒருவித பாரபட்சமா? அப்படி பார்த்தால், எல்லாமே மண்ணிலிருந்து தான் வருகிறது. வேப்பம் பழமும், மாம்பழமும் ஒரே மண்ணிலிருந்து வந் தாலும், சுவை வெவ்வேறாக இருக்கிறது அல்லவா? ஒரு குறிப்பிட்ட உயிர், ஒரு மண்ணை கையாளும் வழிமுறையும், இன்னொரு உயிர் அதே மண்ணை கையாளும் வழிமுறையும் வெவ்வேறாக இருக்கின்றன. ஒரு புழுவிற்கும், பூச்சிக்கும் உள்ள வேறுபாடு என்ன? உங்களுக்கும், மற்றொரு மனிதருக்கும் உள்ள வித்தியாசம் என்ன? எல்லாமே ஒன்று தான், ஆனால் நாம் அவற்றிலிருந்து புரிந்து கொள்வது வேறுபடுகிறது. ஆன் மீகத்தில் இருக்கும்போது மக்கள் ஆன்மீகப் பாதையில் இருக்கும்போது, அவர்கள் ஒவ்வொரு வழியிலும் உதவியை எதிர்பார்க்கிறார்கள், ஏனென்றால் இது யாரும் அறியாத பாதை. இந்திய கலாச்சாரத்தில், நமக்கு உதவியாக இருக்கும் ஒவ்வொரு சிறிய விஷயத்தையும், கூர்ந்து கவனித்தும், தியான நிலையில் இருந்தும் கண்டு பிடித்துள்ளார்கள். அவர்கள் பூக்களையும், பழங்களையும், இலைகளையும் கூட விட்டு வைக்கவில்லை. ஏன் வில்வம் புனிதமானது? ஏன் குறிப்பாக வில்வம் புனிதமாகக் கருதப்படுகிறது? எப்போதுமே வில்வம், சிவனுக்கு ரொம்ப நெருக்கம் என்று சொல்வார்கள். அவர் ஒன்றும் அப்படி கருதவில்லை. அது சிவனுக்கு நெருக்கம் என்று சொல்லமுடியாது. அது சிவனுக்கு நெருக்கம் என்று நாம் ஏன் நினைக்கிறோம் என்றால், அந்த வில்வத்தினுடைய அதிர்வுகள் நாம் சிவன் என்று கருதுவ துடன் இருக்கும் அதிர்வுகளுடன், பெருமளவிற்கு நெருக்கமாக இருக்கிறது. வில்வத்தின் அதிர்வுகள் இது மாதிரி நாம் நிறைய பொருட்களை கண்டு பிடித்து வைத்துள்ளோம். நாம் அவற்றை தான் அர்ப்பணம் செய்கிறோம். ஏனென்றால் அதன் மூலமாகத்தான் நாம், தெய்வீகத்துடன் தொடர்பு வைத்துக் கொள்ள முடியும். நீங்கள் வில்வத்தை சிவனுக்கு அர்ப்பணிக்கும் போது, அதனை அவரிடம் விட்டு செல்வதில்லை. அதனை சிவனுக்கு அர்ப்பணம் செய்தபின், உங்களுடன் எடுத்து செல்கிறீர்கள். ஏனென்றால் வில்வத்திற்கு அந்த அதிர்வுகளைத் தக்க வைத்துக்கொள்ள கூடிய சக்தி, பெருமளவில் இருக்கிறது. நீங்கள் அதை லிங்கத்தின் மேல் வைத்து எடுத்தால், லிங்கத்தின் சக்தி அதிர்வுகள் நீண்டநேரம் அதில் இருக்கும். அதனை உங்களிடமே தக்க வைத்துக் கொள்ளலாம். நீங்கள் இதை செய்து பார்க்கலாம்: ஒரு வில்வ இலையை அர்ப்பணம் செய்து, உங்கள் சட்டைப் பையில் உங்களுக்கு மிக அருகில் அதை வைத்துக்கொண்டு நடந்து பாருங்கள்.

உங்களுக்கு, அது உடலளவிலும், மனதளவிலும், ஆரோக்கியத்திலும், பெரும் மாற்றத்தை ஏற்படுத்தும்.

(24 ஆம் பக்கத் தொடர்ச்சி...)

## இங்குதான் ...

அப்படியா? என்று கேட்டுவிட்டு எங்கே கொல்லப்பட்டார் என்று கேட்ட போது, காவலரணில் ஏறி பாருங்கள் என்று காட்டி, கையிலே தூர நோக்கு (டீைழ உரடயசள) தந்தான்.

காவலரண் கிட்டத்தட்ட 20 அடி உயரம் இருக்கும். அதன் ஏணிப் படிகளால் மேலே சென்று பார்த்தேன். ஒரே பரந்த வெளி பிரதேசம் தெரிந்தது. அது நந்தி கடல் பிரதேசம் தான் கோடை காலம் என்றபடியால் கடல் வத்தி இருந்தது அந்த பிரதேசத்தின் ஒரு இடத்தில் காட் போட்டினால் செய்த ஒரு இராணுவ சிப்பாய் உருவம் கையில் ஒரு பயங்கர ஆயுதமான துப்பாக்கி இருந்தது. அந்த துப்பாக்கி அருகில் இருந்த விடுதலைப் புலிகளின் கொடியை நோக்கி குறிவைத்துக்கொண்டு இருப்பது போல் இருந்தது.

அந்த கொடியை தான், பிரபாகரன் என்று இலங்கை இராணுவம் குறிப்பிட்டு அந்த கொடி குத்தியிருந்த இடத்தில் தான் பிரபாகரன் இறந்து விட்டார் என்றும் குறிப்பிட்டார்கள்.

இவ்வாறு தான் பிரபாகரன் இறந்த தகவலை பாதுகாப்பு அமைச்சு யுத்தத்திற்கு பின்னர் புதுக்குடியிருப்பு, முள்ளிவாய்க்கால், முல்லைத்தீவு பிரதேசத்திற்கு வரும் சிங்கள பெரும்பான்மை மக்களுக்கு சுட்டிக்காட்டி அறிவித்தது.

இந்த பகுதிகள் எல்லாம் சகலரும் செல்லக் கூடிய விதத்தில் திறந்து வைக்கப்பட்ட பின்னர் இந்த அடையாளங்கள் எல்லாம் அழிக்கப்பட்டு விட்டன. அது மாத்திரமல்லாமல் பிரபாகரன் யுத்த காலத்தில் வாழ்ந்ததாக கூறப்படும் நான்கு அடுக்கு நிலத்திற்கு கீழான பங்கரும் (டீரமெநச) அழிக்கப்பட்டது.

இந்த இடத்திற்கு பாண்டிய வெளியில் இருந்து மந்துவில் போய், மந்துவிலில் இருந்து, புதுக்குடியிருப்பு சந்தி சென்று, புதுக்குடியிருப்பு சந்தியில் இருந்து ஒரு கிலோ மீற்றர் பயணம் செய்ய ஒட்டிசுட்டான் வீதி வரும். ஒட்டி சுட்டான் வீதியில் இருந்தது அரை கிலோ மீற்றர் காட்டுப்பாதையில் செல்ல வேண்டும். அந்த காட்டுப்பாதை மாத்திரம் தார் போட்டு இருந்தது. மேலே இருந்து பார்த்தால் இயற்கையாக மரக் கிளைகள் எல்லாம் படர்ந்து இருந்தபடியால் மேல் இருந்து எதுவுமே தெரியாத படி இருந்தது.

அந்தப் பாதையில் சென்ற பொழுது, பிரபாகரனின் நிலத்திற்கு கீழ் நிர்மாணிக்கப்பட்டிருந்த நான்கு மாடி நிலக்கீழ் சுரங்க பங்கருக்கு வந்து சேர்ந்தோம். அந்த நிலக்கீழ் சுரங்கம் சில குடும்பம் வாழும் பிரதேசத்தில் நிர்மாணிக்கப்பட்டிருந்தது. அந்த சுரங்கத்தின் மேலே குடில் போல வீடு அமைக்கப்பட்டிருந்தது.

அந்த பனை ஓலையினால் மேயப்பட்ட குடிலுக்கு கீழே உள்ள சுரங்கத்திற்கு போகக் கூடியதாக செய்யப்பட்டிருந்தது. அந்த வழி ஊடாக படிகளில் இறங்கிச் சென்றால் ஒவ்வொரு மாடியிலும் அறைகளும் வரும். நிலத்திற்கு கீழ் உள்ள சுரங்கத்தின் முதலாவது மாடி மற்றும் ஏனைய மாடிகளும் பகுதி குளிர்சாதன இயந்திர குளிர்மை படுத்தப்பட்டிருந்தது. இவ்வாறு ஏனைய மாடிகளுக்கும் சென்று பார்வை இட்டோம். நான்காவது சுரங்க அறை கீழே வெளியில் கடலுடன் செல்லும் சுரங்க பாதைகள் அமைக்கப்பட்டிருப்பதை கண்டோம்.

இவ்வாறு தமிழீழ விடுதலைப் புலிகளின் தலைவர் பிரபாகரனால் நிர்மாணிக்கப்பட்ட பொறியியல் அற்புதம் (நுபெைநெநசைபை ஆயசஎநட) என்று கருதப்பட்ட நான்கு அடுக்கு கொண்ட நிலக்கீழ் பங்கரை 2013 ஆம் ஆண்டளவில் பாதுகாப்பு செயலாளர் கோத்தாபாய ராஜபக்ஷவின் உத்தரவின் பெயரில் இராணுவம் குண்டு போட்டு தகர்த்து அழித்து விட்டது.

## அத்தியாயம் 16

# சந்தர்ப்பவாதிகள்

ஏ.ஜே.ஞானேந்திரன்

இந்தக் கிணறு என்பது வெளிநாட்டு வாழ்க்கையில் நாம் சந்திக்காத ஒன்று. ஆனால் இதுவே யாழ்பாணத்தைப் பொறுத்த மட்டில், மிக முக்கியமான ஒன்றாகி விடுகின்றது. வீட்டுக்கு வீடு கிணறு இருக்கும். தோட்டத்துச் செடிகளுக்கோ, சமையலுக்கோ அல்லது நீராடலுக்கோ கிணற்று நீஉதான். அதிலும் யாழ் மண்ணில் வெளிநாட்டுப் பணப் புழக்கத்தின் பின்னர், கிணற்றடியில் துலாவைக் காணமுடிவதில்லை. எல்லோருமே வீட்டுக்குள் மோட்டரைப் பூட்டி, வீட்டோடு சேர்த்து குளியலறையையும் கட்டி எல்லாவற்றையுமே வீட்டுக்குள் கொண்டு வந்து விட்டார்கள். கிணற்றடிப் பக்கம் தலை காட்டுவதேயில்லை.

அப்படித்தான் அன்றும் கிணற்று நீரை குளியலறைக்குள் வரவழைத்து, நல்ல ஒரு முழுக்குப் போட்டுவிட்டு, தன் மகனை விமான நிலையத்திலிருந்து அழைத்து வரத் தயாராகிக் கொண்டிருந்தார் சித்திரவேல்.



புதிதாகப் பெயின்ட் அடித்த வீடு மணக்கோலம் பூண்டிருக்கின்றது என்று அவர் பெருமிதத்தோடு எண்ணிக் கொண்டார். மனிதனோ அல்லது வேறு எந்தப் பொருளோ ஒரு ஜோடனைக்குப் பின்பு புது வடிவம் பெற்றுவிடுவது உண்மைதான் என்று நினைப்பு அவருக்கு வந்தது....

இன்னும் அரை மணி நேரத்தில் சத்யன் வந்துவிடுவான். சற்று நேரத்திற்கு முன்பு சாவகச்சேரியிலிருந்து அவன் தொலைபேசித் தொடர்பில், தன் பயணம் எல்லாம் நன்றாகவே அமைந்தது அப்பா என்று சொல்லியவன், நேரில் விபரமாகக் கதைப்போம் என்று தொடர்பைத் துண்டித்து விட்டான். மகன் இலண்டன் பயணமாகி மூன்று வருடங்கள்தான் என்றாலும், முப்பது வருடங்கள் மகனைக் காணாத உணர்வு அவருக்குள் வியாபித்திருந்தது.

சுசீலாவும் முகம் மலர அடுக்களையில் தோசை சுட்டுக் கொண்டிருந்தாள். சத்யனுக்கு தோசை மீது தீராத ஆசை. இடியப்பம், இட்லி, அப்பம், பிட்டு என்று பல ஆகாரங்கள் யாழ்ப்பாணத்து மண்ணுக்குச் சுவை சேர்த்தாலும், அவனுக்கு தோசை மீதுதான் பெரும் ஆசை.

சுசீலாவும் அடுக்களை வேலையை முடித்துவிட்டு, குளியல், திருநீறுப் பூச்சு என்று எல்லாம் முடித்துக் கொண்டு ஹோலுக்கு வந்தபோது, வெளிக் கேட்டில் ஓட்டோவென்று வந்து நிற்கும் சத்தம் அவள் காதில் வீழ்ந்தது. வேகமாக அதேசமயம் ஆவலோடு அவள் கேட் பக்கம் நடந்தாள்..

*****

சிவனடியான் வீட்டுத் தொலைபேசி கிணுகிணுத்தது.

நிவேதாதான் ஓடிச் சென்று ரீசீவரைக் கையிலெடுத்தாள்.

“சத்யன் ஸ்பீக்கிங்... ”

“ஹலோ சத்யா.... எப்பிடிப் பயணம்..?

“ஓகே.. ஆனால் கொஞ்சம் வழியில பயப்படுத்திப் போட்டாங்க..”

“என்ன நடந்தது சத்யா? ”

மறுதரப்பில் சத்யன் பவன அமுக்கம் காரணமாக விமானம் ஆட்டங் கண்டதும், தான் உட்பட பயணிகள் எல்லோரும் கூச்சலிட்டது பற்றியும் அவளுக்கு விபரித்துக் கூற, நிவேதாவால் சிரிப்பை அடக்க முடியவில்லை. சிரித்தும் விட்டாள்.

“என்ன சிரிப்பு நிவேதா? ” கோபத்தோடு தான் சத்யன் கேட்டான்.

“இல்லை இதுக்குப் போய் இவ்வளவு பயந்திட்டீங்களே.”

“நான்சென்ஸ். அவரவருக்கு அனுபவம் வந்தால்தான் தெரியும்”

“சரி அதை விடுங்க சத்யா. எப்ப வீட்ட வாறீங்க?”

“நாளைக்கு வியாழன். கள்ள வியாழன் கழுத்தறுக்கும் என்று சொல்லுறா அம்மா. வெள்ளிக்கிழமை ஈவினிங்தான் வருவம்..”

மீண்டும் மறுமுனையில் சிரிப்பு.

“இப்ப எதுக்குச் சிரிச்சனீங்க நிவேதா? ”

“கடவுள் படைச்ச ஏழு நாட்களை ஏன் இப்பிடிக் கூறு போடுறாங்க எண்டு நினைச்சுத்தான் சிரிச்சன் சத்யா.

“லுக் ஹியர் நிவேதா.. நாங்க எந்தச் சீமைக்குப் போய் வந்தாலும், ஊரில இருக்கிற சம்பிரதாய முறைகளைக் கடந்து நம்மால போக முடியாது. இங்க இருக்கும்வரை நமக்கு இங்கத்த வாழ்க்கை முறைதான். ”

“ஒகே ஒகே சத்யா. நான் இல்லையெண்டா சொல்றன்.. ஜஸ்ட் ஒரு பேச்சுக்குச் சொன்னன். தட்ஸ் ஓல்...”

“நீண்ட காலத்திற்குப் பிறகு யாழ்ப்பாண விஜயம். எப்பிடி இருக்கு வாழ்க்கை? ”

“ஐ லைக் இற் வெரி மச் சத்யா.. வெயில் சூடுதான் மோசம். டெய்லி மூண்டு தடவை குளியல். இரவில மின்விசிறி இல்லாம தூக்கம் இல்லை. நல்ல கடல் மீன், தோட்டத்து மரக்கறி, மாம்பழம், பலாப்பழம்.... இடைக்கிடை நுளம்பின்ர கடி... ஐ லைக் இற் சத்யா.. ”.

இந்தத் தடவை மறுதரப்பில் சத்யன் சிரித்தான். பலமாக வாய்விட்டுச் சிரித்தான்.

“உமக்கு யாழ்ப்பாணத்து நுளம்புக்கடி புடிச்சிருக்கோ? அப்படியெண்டா கொஞ்சம் பார்சல் பண்ணிக் கொண்டு போகலாமே”

நிவேதாவும் சிரித்தாள்.

“நான் அதைச் சொல்லேல்லை.. யாழ்ப்பாணம் எனக்குப் பிடிச்சிருக்கு. வெயிலும் நுளம்பும் இல்லையெண்டா இங்கேயே இருந்திடலாம்.”

பலதும் பத்தும் பகிரப்பட்டன. மீண்டும் தொடர்பு கொள்வதாகச் சொல்லி தொடர்பை அவன் எதிர்முனையில் துண்டிக்க, அன்று வாங்கியிருந்த தினசரியை விட்ட குறையிலிருந்து வாசிக்க விரைந்தாள் நிவேதா.. வழியில் தந்தை குறுக்கிட்டார்.

“யார் போனில நிவேதா? ”

“சத்யன்தான்.. ”


“எப்ப வந்தவராம்?”

“இன்று காலைதான்...”

“எப்ப இங்க வருகினம்..?”

“நாளை கள்ள வியாழனாம். வெள்ளிக் கிழமை பின்னேரந்தான் வரப்போகினம் அப்பா..”

“நிவேதா கேட்கிறன் எண்டு கோபிக்காதை. உனக்குப் பொடியனைப் பிடிச்சிருக்கா? “அப்பா நேரில நான் இன்னும்



சந்திக்காட்டியும், ஸ்கைப்பில சத்யனோடு பல தடவையள் பேசியிருக்கிறன். எனக்குப் பிடிச்சிருக்கு. சத்யனுக்கும் என்னைப் பிடிச்சிருக்கு எண்டு நினைக்கிறன் ஆனால் எதுக்கும் குடும்பமா வரட்டும். சேர்ந்து பேசி முடிவெடுப்பம் அப்பா.”

“நீ வெளிநாட்டில இவ்வளவு காலமும் இருந்தும். அப்பா அம்மா பிள்ளையா நீ இருக்கிறதில எங்களுக்கு நல்ல சந்தோஷம். உனக்குத் தெரியுந்தானே? சீதனம் எண்டு பொம்பிளை வீட்டுக்காரர் எதையாவது கொடுக்க வேணும். இந்த வீட்டை நான் மாப்பிளைக்கு எழுதித் தாறன். நகையளும் செய்து.”

“அப்பா ஸ்டொப் இற்.”.

நிவேதாவின் குரல் உயர்ந்தது.

“அப்பா இந்த வியாபாரம் வேண்டவே வேண்டாம். இந்த வீட்டில நீங்களும் அம்மாவும் இருங்க. நான் இது பற்றி சத்யனோட கதைச்சிருக்கிறன். சத்யனுக்கும் இந்த வியாபாரத்தில விருப்பம் இல்லை.”

“நிவேதா இது வியாபாரமில்லை. இது சம்பிரதாய முறை.. பிள்ளையளுக்கு நாங்க விரும்பிக் கொடுக்கிறதுதானே? ”

“நோ நோ அப்பா. அதெல்லாம் அந்தக் காலம். வீடு வாசலெல்லாம் இங்கேயே இருக்கட்டும். எங்களுக்கு வீடு தந்திட்டு, நீங்க நடுத்தெருவில நிக்கப் போறியளோ? கல்யாணம் நடந்தா நான் சத்யனைக் கூட்டிக்கொண்டு கனடா போகப்போறன். இடைக்கிடை இங்க வந்தால் தங்கத்தான் இந்த வீடு.”

“நீ சொல்லுறதையெல்லாம் மாப்பிள்ளை வீட்டுக்காரர் ஒத்துக் கொள்ள வேணுமே நிவேதா”

“அப்பா நான் இதுபற்றியெல்லாம் சத்யனோடு பேசியிருக்கிறன் அவருக்கும் இந்த வீடு வளவுகளில பிடிப்பு இல்லை. அப்பா அம்மா வரேக்கிள நேரில எல்லாத்தையும் கதைச்சுப் போடுவம் எண்டு சொல்லியிருக்கிறார்.”

இனித் தனக்குப் பேச ஒன்றுமில்லை என்று சிவனடியான் நினைத்துக் கொண்டார்.

(தொடரும் ....)

(18 ஆம் பக்கத் தொடர்ச்சி...)

## ஊருக்குப் ...

“எங்கே போட்டுது என்ன சொல்லுறியள்?”

“நான் குளிக்கப் போனனான். இங்கை பக்கத்திலைதான் கிணறு...! சத்தம் கேட்டு ஓடி வந்து பாத்தா... ஒருத்தரும் உயிரோடை இல்லை”.

“ஐயோ ... என்னம்மா சொல்லுறீங்கள்? நீங்கள் எல்லோரும் இங்க இருக்கிறீங்கள் என்று கேள்விப்பட்ட உடனே உங்கள் எல்லாரையும் கூட்டிக்கொண்டு போகத்தானே ஓடி வந்தன். அதுக்கிடையிலை ... கடவுளே...” வரதன் கத்தினான் கதறினான். அழுவதைத் தவிர வேறென்ன செய்ய முடியும்?

ஆனால் அந்தச் சம்பவத்தை பார்த்த நாளில் இருந்து மரகதத்திற்கு பாரிசவாதம் ஏற்பட்டு ஒரு கையும் காலும் பாதிக்கப்பட்டது. மற்றவர்களின் உதவியின்றி நடக்க முடியாத நிலை ஏற்பட்டது. அத்தோடு மற்றவர்களுடன் உரையாடுவதையும் குறைத்து விட்டார்.

“அப்பம்மா உங்களுக்கு வியர்க்குது” ஓடிச் சென்று ஒரு கொப்பி மட்டை எடுத்துக் கொண்டு வந்து காத்து விசிறினாள் அனு.

“அப்பம்மா மயிலிட்டியிலையும் இப்படித் தான் தகர வீடோ?”

“இல்லை பிள்ளை அங்க எல்லோருக்கும் சொந்தமான காணி இருக்கு. எங்கட காணிக்கை கிணறு பெரிய வீடு முற்றத்திலை ஒரு பக்கத்திலை கறுத்தக் கொழும்பான் மாமரம். இன்னொரு பக்கத்திலை பலாமரம் . வீட்டுக்கு பின்னுக்கு விளாத்தியும் நாவலும், கிணத்தடியிலை பாக்கும் பப்பாசியும். ம்... இதை எல்லாம் அனுபவிக்க உங்களுக்கு எப்ப குடுத்து வைச்சிருக்கோ தெரியேல்லை. நான் கண்ணை மூடுறதுக்கிடையில் என்ர சொந்த இடத்துக்கு போனா... அதுவே போதும்” ஊரைப் பற்றிக் கேட்டதும் தன் தாய் மளமள வென்று கதைத்தது வரதனுக்கு ஆச்சரியமாக இருந்தது.


சொந்த இடங்களுக்கு போக முடியாமல் நலன்புரிநிலையங்களில் வாழும் மக்கள்படும் துன்ப துயரங்கள் சொல்லிலடங்காதவை. கிட்டத்தட்ட பத்து முகாம்களிலும் பத்தாயிரம் குடும்பங்களுக்கு அதிகமாக வாழ்கின்றனர். பொதுவான மலசல கூடம், குழாய்க்கிணறு சின்ன சின்ன வீடுகள் ஒரே வீட்டில் இரண்டு மூன்று குடும்பங்கள். பிள்ளைகளை நல்ல பாடசாலையில் இணைக்க முடியவில்லை, பிள்ளைகளுக்கு நல்ல திருமணம் பொருந்தி வந்தாலும் முகாம் என்றதும் சாக்கு போக்குக் காட்டி தட்டிக் கழிக்கின்றனர். தினமும் சண்டை சச்சரவுகள் ஒன்றும் தீர்ந்த பாடில்லை.

இங்கு வாழும் மக்கள் கழியும் ஒவ்வொரு நாளையும் நாளைக்கு “ஊருக்குப் போவம்” என்ற நம்பிக்கையுடனேயே காத்திருக்கின்றனர்.

# விளையாட்டு

Rio2016

## ஐரோப்பிய ஒலிம்பிக் சங்க தலைவர் கைது!



ரியோ ஒலிம்பிக் போட்டியின் டிக்கெட் விற்பனையில் முறைகேடு செய்ததாக, ஐரோப்பிய ஒலிம்பிக் சங்க தலைவர் பேட்ரிக் ஹிக்கி (71) பிறேஸில் பொலிஸாரால் புதன்கிழமை கைது செய்யப்பட்டார்.

சர்வதேச ஒலிம்பிக் கமிட்டியின் நிர்வாகக் குழு உறுப்பினராகவும் இருக்கும் இவர் பேட்ரிக், ரியோவில் உள்ள நட்சத்திர ஹோட்டல் ஒன்றில் கைது செய்யப்பட்டதாக பிறேஸில் பொலிஸாரார் தெரிவித்துள்ளனர்.

கைது நடவடிக்கையின்போது பேட்ரிக் தப்பிக்க முற்பட்டதாகவும், கைது செய்யப்பட்ட பிறகு உடல்நலக் குறைவு ஏற்பட்டு மருத்துவமனையில் அவர் அனுமதிக்க பட்டுள்ளதாகவும் பிறேஸில் ஊடகங்கள் தெரிவிக்கின்றன. இதனிடையே, சூழ்நிலைகளைத் தெளிவாக உணர்ந்த பிறகே மேற்கொண்டு தகவல்கள் அளிக்க இயலும் என்று அயர்லாந்து ஒலிம்பிக் சங்கம் தெரிவித்துள்ளது. அயர்லாந்து ஒலிம்பிக் சங்கத்தின் தலைவராகவும் பேட்ரிக் இருந்து வருவது குறிப்பிடத்தக்கது.

## உசேன் போல்ட்டின் பிரத்தியேக ஸ்டைல்




உலகின் அதிவேக மனிதர் உசேன் போல்ட் ரியோ ஒலிம்பிக்கில் தங்கம் வென்று ஹாட்ரிக் ஒலிம்பிக் சாதனை படைத்துள்ளார். உசேன் போல்ட் என்றதுமே அவரது ஸ்பேவரைட் மூவ் தான் அனைவருக்கும் நினைவில் வரும் அதற்கு பின்னால் உள்ள காரணம் தெரியுமா? 2008ம் ஆண்டு பீஜிங்கில் நடைபெற்ற ஒலிம்பிக்கில் தங்கம் வென்ற போது இந்த ஸ்பேவரை மூவ்வுடன் போஸ் கொடுத்தார். அடுத்த இரண்டு முறை வென்ற போதும் இதே போஸ் கொடுத்து மக்களை குதூகலத்தில் ஆழ்த்தினார்.

இந்த மூவ் குறித்து அவர் கூறியிருப்பது ஜமைக்காவின் பிரபல மியூஸிக் ஆல்பமான டான்ஸ்ஹாலின் 'To Di World'இல்இடம் பெற்ற மூவ். அது எனக்கு பிடித்திருந்ததால் அதை நான் செய்தேன். நான் எப்படி செய்யும் போது உலக மக்களுடன் இனைந்திருப்பாதாக உணர்கிறேன் என்றும், மக்கள் இதனை விரும்பாவிட்டால் இதனை நான் நிறுத்திவிடுவேன் என்றும் கூறியுள்ளார்.

## சைக்கிள் பந்தயத்தில் தங்கம் வென்ற காதல் ஜோடி

ரியோ ஒலிம்பிக்கில் ஆண்களுக்கான சைக்கிள் போட்டியில், உள்ளரங்க ஓடுபாதையில் நடக்கக்கூடிய கெய்ரன் டிராக் பந்தயத்தில் இங்கிலாந்து வீரர் ஜாசன்கென்னி தங்கப்பதக்கத்தைதட்டிச்சென்றார். நடப்பு ஒலிம்பிக்கில் அவரது 3-வது தங்கமாகும். மொத்தத்தில் அவரது ஒலிம்பிக் தங்கத்தின் எண்ணிக்கை 6 ஆக உயர்ந்தது. இதன் மூலம் இங்கிலாந்து வீரர்களில் அதிக தங்கம் வென்றவரான முன்னாள் சைக்கிள் பந்தய வீரர் சர் கிறிஸ் ஹோயின் சாதனையை 28 வயதான ஜாசன் கென்னி சமன் செய்தார்.

இவரது காதலியும், வருங்கால மனைவியுமான 24 வயதான லாரா டிரோட்டும் சைக்கிள் பந்தய வீராங்கனை தான். இதே நாளில் நடந்த ஓம்னியம் பிரிவில் சாம்பியன் மகுடத்தை தக்க வைத்து பிரமாதப்படுத்தினார். ஒலிம்பிக் போட்டிகளில் தனது தங்கப்பதக்கத்தை 4ஆக உயர்த்திய லாரா டிரோட், அதிக தங்கம் வென்ற இங்கிலாந்து வீராங்கனை என்ற சிறப்பை பெற்றார்.



'தங்க ஜோடி'யாக வலம் வந்த கென்னி-லாரா டிரோட் மைதானத்தில் முத்தமழை பொழிந்து மகிழ்ச்சியை பகிர்ந்து கொண்டனர். ஏற்கனவே நிச்சயதார்த்தம் செய்து கொண்ட இவர்கள் அடுத்த மாதம் திருமணம் செய்ய திட்டமிட்டு இருக்கிறார்கள். ரியோ ஒலிம்பிக்கில் சைக்கிள் பந்தயத்தில் மட்டும் இங்கிலாந்து 6 தங்கம் உள்பட 12 பதக்கங்களை அள்ளியிருப்பது குறிப்பிடத்தக்கது.


## அதிவேக கோல் அடித்து நெய்மார் சாதனை



ஒலிம்பிக் போட்டியில் ஆண்களுக்கான உதை பந்தாட்ட அரைஇறுதியில் பிறேஸில்-ஹோண்டுராஸ் அணிகள் மோதின. ஆட்டம் தொடங்கிய 15-வது வினாடியிலேயே பிறேஸில் கப்டன் நெய்மார் கோல் அடித்து அமர்க்களப்படுத்தினார். ஒலிம்பிக் கால்பந்து வரலாற்றில் அதிவேகமாக அடிக்கப்பட்ட கோல் இது தான். முதல் பாதியில் பிரேசில் 3-0 என்ற கோல் கணக்கில் முன்னிலை பெற்றிருந்தது.

ஆட்ட நேர முடிவில் 6-0 கோல் கணக்கில் பிறேஸில் வெற்ரி பெற்று இறுதிப் போட்டிக்கு தகுதி பெற்றது. நெய்மர், கபிரியல் ஆகியோர் தலா இரண்டு கோல்களும் மாக்கினியூஸ், லுனா ஆகியோர் தலா ஒரு கோலும் அடித்தனர். ஒலிம்பிக் வரலாற்றில் மூன்று முறை சில்வர் பதக்கம் பெற்ற பிறேஸில் இம்முறை முதன் முதலாக தங்கப் பதக்கம் பெறும் என்ற எதிர்பார்ப்பு எழுந்துள்ளது.

## நெட்டை பெல்ப்ஸ்.. குட்டி சிமோனும்



ரியோ ஒலிம்பிக் போட்டியில் மற்ற வீரர்களை விட இந்த இரு அமெரிக்கர்கள்தான் அத்தனை பேரையும் கவர்ந்திழுத்து விட்டனர். காரணம் இவர்களது சாதனை மட்டுமல்ல, உயரமும் தான்! ஒருவர் மைக்கேல் பெல்ப்ஸ். இன்னொருவர் ஜிம்னாஸ்டிக்ஸ் வீராங்கனை சிமோன் பைல்ஸ். பெல்ப்ஸ் பற்றிச் சொல்லவே வேண்டாம். ஆனால் சிமோன் குறித்து நிறையப் பேச வேண்டும். இந்த சின்னப் பொண்ணுக்கு 19 வயதுதான் . இந்த வயதிலேயே இவர் சாதனைகளைப் படைத்துக் கொண்டிருக்கிறார். ரியோ ஒலிம்பிக்கில் இதுவரை அவர் 3 தங்கப் பதக்கங்களை அள்ளியுள்ளார். மேலும் பெல்ப்ஸ் மற்றும் சிமோனிடமிருந்து நாம் கற்றுக் கொள்ள வேண்டியவை நிறைய இருக்கிறது.

31 வயது பெல்ப்ஸ்.. 19 வயது சிமோன் 19 வயதாகும் சிமோன் 4.8 அடி உயரமே கொண்டவர். பெல்ப்ஸோ 6.4 அடி உயரம் கொண்டவர். இருவரையும் அருகருகே நிறுத்திப் பார்த்தால் சிமோன் ஒரு குழந்தை போலத் தெரிகிறார். இவர்கள் இணைந்திருக்கும் படமும் கூட வைரல் ஆகியுள்ளது. பெல்ப்ஸ் கடந்த ஆண்டு ஊக்க மருந்து சர்ச்சையில் சிக்கியவர். இதற்காக சீரமைப்பு முகாமுக்கும் போய் வந்தவர். அதிலிருந்து மீண்டு வந்து ரியோ ஒலிம்பிக்கில் சாதனை படைத்துள்ளார் பெல்ப்ஸ்.

மறுபக்கம் சிமோன் அவரது 6வது வயதில் தத்து கொடுக்கப்பட்டார். காரணம் அவரது தாயார் ஒரு குடி அடிமை, போதைப் பொருள் பழக்கம் உடையவர். அவரது கொடுமையிலிருந்து மீள முடியாமல் தவித்த சிமோனை அவரது தாய் வழித் தாத்தாவை தத்தெடுத்துக் கொண்டார். சிமோனை அவரது தாயாரிடமிருந்து மீட்டார்.பெல்ப்ஸ் இருமுறை அதி வேகமாக கார் ஓட்டியதாக வழக்கில் சிக்கி கைது செய்யப்பட்டவர். சூதாட்டத்திற்கும் அடிமையாக இருந்தவர் பெல்ப்ஸ். ஆனால் அதிலிருந்து மீண்டு வந்து அசத்தியுள்ளார்.

இப்படி பல தடைகளையும், உயர வேறுபாடுகளையும் தாண்டி இருவரும் தத்தமது துறைகளில் செய்துள்ள சாதனைகள் அத்தனை அசாத்தியமாவை.

தினச்செய்தி
என்றும் உங்களுடன்









# இங்கே தான் பயங்கரவாத தலைவர் கொல்லப்பட்டார்





"இங்கே தான் பயங்கரவாத தலைவர் கொல்லப்பட்டார்." இந்த தலைப்பு முல்லைத்தீவு இரட்டைவாய்கால் சந்தியில் இருந்து நேராக சென்றால் வலையன்மட சந்தியில் போடப்பட்டிருந்தது.

இதை உங்களில் பலர் பார்த்திருக்க முடியாது. 2009ஆம் ஆண்டு மே மாதம் 19 ஆம் திகதி இலங்கை பாதுகாப்பு படையினர் தமிழீழ விடுதலைப்புலிகளினுடனான யுத்தத்தை முடிவுக்கு கொண்டு வந்ததாக அறிவித்தல் விட்டார்கள்.

அவ்வாறு யுத்தம் முடிவுக்கு கொண்டு வருவதற்கு முன்னர், தமிழீழ விடுதலைப் புலிகளின் தலைவர் வேலுப்பிள்ளை பிரபாகரனை கொலை செய்து விட்டதாகவும் அறிவித்தார்கள். பிரபாகரன் இறந்து விட்டார் என்ற செய்தி எம் அனைவருக்கும் அதிர்ச்சியும் கவலையும் அளித்தது என்று கூறினால் மிகையாகாது.

நீண்டகாலமாக பிரபாகரனின் இறப்பு சம்பந்தமாக அவ்வப்போது நிறைய சந்தேகங்கள் கிளம்பிக் கொண்டே இருந்தது உண்மை. பிரபாகரன் இறந்துவிட்டார் என்று அரசாங்கம் அறிவித்த போதும் தமிழ் மக்கள் அதனை நம்ப தயாராக இருக்கவில்லை.

ஆனால் அண்மையில் "தமிழீழ விடுதலைப் புலிகளின் தலைவர் வருவார், பொட்டம்மான் வருவார், சூசை வருவார் என்று காத்திருக்க முடியாது. அவர்கள் எல்லோருமே இறந்துவிட்டார்கள்." இவ்வாறு ஜனநாயக போராளிகள் கட்சியின் ஊடகப் பேச்சாளர் துளசி என அழைக்கப்படும் சா. சாந்தலிங்கம் எமக்களித்த பேட்டியில் பிரபாகரனின் இறப்பை உறுதிப்படுத்தினார். இந்த ஜனநாயகப் போராளிகள், பிரபாகரன் கூடவே கடைசி வரை இருந்தவர்கள். எனவே இவர்களின் கூற்று நம்பக்கூடியதாக இருக்கும் என்று கருதப்படுகிறது.


2009 ஆம் ஆண்டு மே மாதம் 19 ஆம் திகதி யுத்தம் முடிவுக்கு வந்த பின்னர், வன்னிக்குச் சென்று அங்கு நடைபெற்ற நிகழ்வினை பார்க்கக் கூடிய சந்தர்ப்பம் எமக்கு கிட்டியது. அப்பொழுது, அந்தக் காலத்தில் தமிழர்கள் யாரையும் மற்றும் தமிழ் தேசிய கூட்டணியினரையும் ஊடகவியலாளர்களையும் யுத்தம் முடிவடைந்த முல்லைத்தீவு, முள்ளிவாய்க்கால், போன்ற பிரதேசங்களுக்குச் செல்ல கோத்தாபாய ராஜபக்ஷ பாதுகாப்புச் செயலாளராக இருந்த பாதுகாப்பு அமைச்சு அனுமதி வழங்கவில்லை.


நான் வெளிநாட்டில் இருந்து பாதுகாப்பு அமைச்சுடன் அனுமதி கோரி வந்தபடியால் எனக்கு அந்த அனுமதி வழங்கப்பட்டது. நான் கொழும்பு, வந்து கொழும்பில் இருந்து புளியங்குளம், நெடுங்கேணியூடாக புதுக்குடியிருப்பு, முல்லைத்தீவுப் பகுதிக்குச் சென்றேன். அங்கே கண்ட காட்சிகளை இன்னொரு சந்தர்ப்பத்தில் தருகிறேன்.


முக்கியமான விடயம், தமிழீழ விடுதலைப் புலிகளின் தலைவரான பிரபாகரனின் இறப்பாகும். வலையன்மடு சந்திக்கு சென்ற பொழுது அங்கே ஒரு விளம்பரப் பலகை நாட்டப்பட்டிருந்ததை பார்த்தேன். அதில் இங்கே பயங்கரவாதிகளின் தலைவர் கொல்லப்பட்டார்," என்று எழுதப்பட்டிருந்தது. இந்த அறிவித்தல் சிங்களம், ஆங்கிலம் ஆகிய இரண்டு மொழிகளில் எழுதப்பட்டிருந்தது.

அந்த அறிவித்தல் பலகைக்கு அருகில் ஒரு காவலரண் அமைக்கப்பட்டிருந்தது. அந்த காவலரணுக்கு அருகில் துப்பாக்கி ஏந்திய ஒரு இராணுவச் சிப்பாய் இருந்தார். அந்த சிப்பாயை அணுகி இங்கே குறிப்பிடப்பட்டிருந்த நபர் கொலை செய்த இடம் எங்கே என்று சிங்களத்தில் கேட்ட போது "நபர் இல்லை பயங்கரவாத இயக்கத்தின் தலைவர் பிரபாகரன் கொலை செய்யப்பட்ட இடம்," என்று குறிப்பிட்டார்.

(தொடர்ச்சி 21 இல்)







இப் பத்திரிகை சுன்னாகத்திலுள்ள தினச்செய்தி நிறுவனத்தினால் கோப்பாயிலுள்ள நாவலர் அச்சகத்தில் அச்சிடப்பட்டு ஓகஸ்ட் 20, 2016 அன்று வெளியிடப்பட்டது.